

பாட்டுப் புலவன் பிறந்த நாளில்

எழிற்கோலம் கொண்ட எட்டயபுரம்



ஒப்பிலாத உலகப் பெருங்கவிஞர்

அன்பார்ந்த பெருமக்களே :

தமிழகத்தின் தலைசிறந்த கவிஞர் பெருந்தகை மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொள்வதை நான் பெரும் பேறாகக் கருதுகிறேன்.

இன்றைய இந்திய நாட்டின் பாவலராகப் பாராட்டப் பெறும் சுப்பிரமணிய பாரதியார் நம்மிடையே 1882ஆம் ஆண்டிலிருந்து 1921ஆம் ஆண்டுவரை தான் வாழ்ந்தார். அவர் வாழ்ந்த 39 ஆண்டுகள் மனித வாழ்வில் குறுகிய காலந்தான் என்றாலும், இந்தக் கால எல்லைக்குள் பாரதியார் ஆற்றிய அருஞ்செயல்கள் நிலையானவை. அந்தச் சாதனைகள் ஒவ்வொன்றுமே தனித்தனி முறையில் அவருடைய சீரிய புகழுக்குச் சிறப்பூட்டுவதாகும். எழுச்சியுற்ற புதிய பாரதத்தை உருவாக்கக் கனவு கண்ட மாமனிதர்கள் தோன்றி, அந்நியத்தளையிலிருந்து நமது நாட்டை விடுவிப்பதற்காக விடுதலைப் போராட்டம் நடத்திய காலச் சூழலில்தான் பாரதியார் வாழ்ந்தார். அந்நாளில் தேசியத் தலைவர்களில் பலர், ஆங்கிலேய ஆட்சியின் தளையை அகற்றுவது, சமூகக் கொடுமைகளைக் களைவது, பண்டைய இந்தியப் பண்பாட்டின் எழிலையும் ஏற்றத்தையும் புலனாக்குவது என்று ஒவ்வொரு துறையிலும் ஆர்வத்தோடு பணியாற்றினர். அப் பெருமக்களுள் சிலர், நாட்டு விடுதலை மட்டுமே யன்றி சமுதாயத்தைச் சார்ந்த பல்வேறு உரிமை யையும் சேர்த்துக் கருதவேண்டும் என்று விடு தலைக்கு விரிந்த பொருளைக் கொண்டனர். அத் தகைய சிலருள் பாரதியார் ஒருவராவார். பிறவி யிலேயே அவர் ஒரு கவிஞர், இலட்சிய வேகத் தோடும் கருத்துச் செறிவோடும் தெளிவான நோக்கத்தோடும் ஆழ்ந்த ஆர்வத்தோடும் தமது எண்ணங்களைப் பாடிய மாபெரும் கவிஞராகத் திகழ்ந்தார். புதிய இந்தியாவை — உயர்ந்த மனித சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற கவிக்கனவு பாரதியாரின் பாடல்களில் வளங்குலுங்க மிளிர்ந்தது. பாமரரும் பண்டிதரும் அவர் பாடல்களை ஒருசேரப் படித்து உணர்ச்சியும் ஊக்கமும் எய்தினர். எளிமை யோடு நேரடியான பேச்சு நிலையில் அவர் படைத் தளித்த கவிதைகள் எழுச்சிமிக்கனவாக தெளிவான எண்ணத்தோடு உணர்ச்சியைத் தொடுவனவாக இலங் கின. இந்திய விடுதலைப் போராட்டத்தில் நெருக்க மாகத் தன்னைப் பிணைத்துக்கொண்ட அவர், உலகின் மற்ற பகுதிகளில் ஆங்காங்கே நடந்த சுதந்திரப் போராட்டங்களிலும் பரிவு காட்டினார். இந்தியாவின் பழம்பெரும் பண்பாட்டுச் செழுமையில் தோய்ந்த அவர் எண்ணங்கள் விடுதலை நோக்கத்துக்கு வேகமூட்டின. இந்திய நாட்டின் தொன்மையான இலக்கியங்களிலும் சிந்தனைகளிலும் ஊறிய அதே நிலையில் புதுமை இலக்கியப் போக்கிலும் சிந்தனையிலும் அவர் தேறியிருந்தார்.

அந்நியத்தளையில் நமது நாடு கட்டுண்டிருந்த போதிலும் 1882 முதல் 1921ஆம் ஆண்டுக்குட்பட்ட பாரதியார் வாழ்ந்த காலம் இந்திய வரலாற்றில் படைப்பாற்றல் செறிந்ததொரு கால கட்டமாகும். தேசிய உணர்வு தழைத்து வேரூன்றிய காலம் அது. நாட்டின் விடுதலைக்காகச் சட்டப்படியும், கத்தியின்றி இரத்தமின்றி யுத்தம் நடத்தியும் நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்குத் தன்னை ஆட்படுத்திக்கொண்ட ஓர் இயக்கம் தோன்றிய காலமும் அது. அரசியல் வானில் அண்ணல் காந்தியடிகள் தோன்றுவதற்கு முன்னர் திலகர், அரவிந்தர் போன்ற தலைவர்கள் மக்கள் நடவடிக்கை—எதிர்ப்பு நடவடிக்கை என்று பேசி வந்தார்கள். அந்நிலையில் பாரதியார் பத்திரிகைத் தொண்டு முதலிய பணிகளோடு, தமது உணர்ச்சி மிகுந்த தமிழ்க் கவிதை வரிகளால் மக்களுக்கு எழுச்சியூட்டினார். சின்னஞ்சிறு வயதிலிருந்தே இயற்கையாகவே ''கவிதையூற்று'' அவரிடம் பொங்கிச் சுரந்தது. வாழ்க்கையின் இயல்பான நிகழ்ச்சிகள் கூட அவருடைய பாட்டுத்திறத்திற்கு ஊட்டம் அளித்தன. இந்திய நாட்டின் விடுதலைக் குரல் அவர் செவிப்புலனில் வீறுகொண்டு ஒலித்தது. இந்தியாவின் பழம் பெருமையையும்—சோர்ந்து கிடந்த நம் மக்களின் சிறுமையையும் ஒப்பிட்டு உணர்ந்த நிலையிலும், உலகில் பிற நாடுகளில் விளைந்த வியக்கத்தக்க முன்னேற்றங்களை கருதிப் பார்த்தவகையிலும் மூண்டெழுந்த அவரது கவிதையாற்றல் முழுமை பெற்றுப் பொலிவடைந்தது. விழுமிய இலட்சியங்கள் அவர் மனத்தில் ஆழப் பதிந்திருந்தன். ஒப்பற்ற அவருடைய ''கவிப் பெருக்கு'' நாட்டு மக்களைக் கிளர்ந்தெழச்செய்தன.

மேதகு ஆளுநர் திரு. சாதிக் அலி அவர்கள்

பாரதியார் சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் புலமை பெற்றிருந்தார். பின்னர் அவர் இந்தியையும் கற்றறிந்தார். ஆங்கிலக் கவிதைகள் பல அவர் மனத்தைக் கவர்ந்திருந்தன. அவருடைய கவிதை வளர்ச்சிக்கு இவ்வியல்பும் ஓர் அம்சமாகும். நான் தமிழை அறிந்தவனில்லை என்றாலும் ஆங்கில

தமிழரசு

மலர் 12 இதழ் 13

1-1-1982



மொழி பெயர்ப்பு வழியாக அவருடைய பாடல்களைக் கண்டபோதே பாரதியாரின் பாட்டுத்திறனை மொழி பெயர்ப்பிலும் கூட என்னால் காண முடிந்தது. அவரது கவிதைகள் ஏனைய மொழிகளிலும் வெளிவர வேண்டுமென்பது என் விருப்பம். இலக்கிய வடிவங்களுக்குள் மனித மனத்தைக் கவரும் சிறப்பு கவிதைக்கு உண்டு. அந்தக் கவிதைத் திறன் இனிய தமிழில், பாரதியாரின் எழிலான சொற்களில் நாட்டுப் பற்றோடு பொங்கிப் பொலிந்து ஏற்றம் பெற்றுள்ளது. இன்றும் கூட இளைஞர், முதியோர் என்ற வேறுபாடின்றி நாட்டு மக்கள் அனைவரின் நாவிலும் பாரதியாரின் ''நெஞ்சை அள்ளும் பாடல்கள்'' நடமிடுகின்றன.

இந்திய நாடு அந்நியரின் பிடியிலிருந்து விடுதலை பெறவேண்டும் என்னும் உணர்வில் எவ்வளவு வேகமும், வேட்கையும், ஆர்வமும் பாரதியார் கொண்டிருந்தார் என்பதை அவருடைய பாடல்களில் காணலாம்.

நமது பாரத நாட்டில் மக்களிடையே நிலவ வேண்டிய ஒற்றுமை உணர்ச்சி பற்றி அவர் பாடிய கவிதைகள் எந்நாளும் பொருந்துவன. தமிழ் மொழியின்பால் நிரம்பிய பற்றுடையவராக இருந்த போதிலும் குறுகிய மனப்பான்மைக்கு அப்பாற்பட்டு அவர் நின்றார். இந்திய நாட்டில் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்த பெருந் தலைவர்களிடம் பெருமதிப்புக் கொண்டிருந்ததோடு அவர்களின் புகழைப் பாடியும் வரலாற்றைத் தமது பாட்டுத் திறத்தால் தென்னகத்து மக்களிடையே பரப்பியும் தொண்டாற்றினர். குருநானக், குருகோவிந்தசிங் போன்ற சீக்கிய அருளாளர்கள் பற்றியும் பாடல்கள் புனைந்து பாராட்டினார். எல்லா மதங்களிடையேயும் ஒற்றுமை உணர்ச்சி நிலவவேண்டும் என்றும் அவர் கருதினார். பாரத விடுதலையின் தீர்க்கதரிசியாகத் திகழ்ந்த அவர், இந்திய நாடு விடுதலை அடைந்ததைக் கண்டுகளிக்க அவருக்கு வாய்ப்பில்லாத போதிலும் நமது நாடு விடுதலை அடைந்த மகிழ்ச்சியில் ஆடவரும், மகளிரும், சிறுவரும் சிறுமியரும் ஆடிப்பாடி மகிழ்வதற்காக அழகியதொரு பாடலை அந்நாளிலேயே அவர் இயற்றியிருந்தார். தீராத ஏழ்மையில் உழன்ற பாமர மக்களுக்காகக் காட்டிய பரிவும் அவர் பாட்டில் இடம் பெறத் தவறவில்லை. எளிய, இனிய சொற்களில் அவர் எழுதி வழங்கிய நீதி நூல்கள் மழலைச் செல்வங்களின் உணர்வில் துணிவையும் அஞ்சாமையையும் துளிர்க்கச் செய்தன.

எதிர்கால இந்தியாவை உருவாக்குவதில் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் கவிதைகள் வருங்காலத் தலைமுறையினருக்குத் தேவையான கடமை உணர்வை எவ்வாறு வலியுறுத்திக்காட்டுகின்றன என்பதை ஓரளவுக்குத் தான் இங்கே சுட்டிக் காட்டியுள்ளேன்.

சீரிய நாட்டுப்பற்றுக் கொண்டவராக அவர் திகழ்ந்த போதும் இந்தியச் சமுதாயத்திலிருந்து கேடுகளையும் அவர் காணாமல் இல்லை. தீண்டாமைக் கொடுமையைத் தீப்பொறிபறக்கும் சொற்களில் பாடிச் சாடியுள்ளார். மகளிர் உரிமைகளையும், சமுதாயத்தில் அவர்களின் தனிச் சிறப்பையும் தமது கவிதைகளில் வலியுறுத்தியுள்ளார்.

பாரதியார் சிறந்த இதழாசிரியர் என்பதோடு, தேர்ந்த கட்டுரையாளராகவும் விளங்கினார். ஏடுகளில் அவ்வப்போது அரிய பல செய்திகளை எழுதி வழங்கினார். ஏனைய நாட்டு மக்களின் சுதந்திரப் போராட்டங்களிலிருந்தும் உணர்வுத் தூண்டுதல் பெற்று இவர் பாடியுள்ளார். ஆங்கிலக் கட்டுரைகள் பலவற்றை இவர் தமிழில் மொழிபெயர்த்தார். மக்கள் நல்வாழ்வுக்கான பல துறைகளில் இவரது எண்ணங்கள் உலக நோக்குடையனவாக அமைந்தன. நமது நாட்டில் சமுதாய ஒற்றுமையை, குறிப்பாக இந்து-முசுலிம் ஒற்றுமையை வளர்க்க அரும்பாடுபட்டார்.

ஆட்சியாளருக்குத் தொல்லையாக இருந்ததால், பாரதியாரை ஒடுக்கவும், அரசுக்கு எதிரான அவருடைய செயல்களைத் தடுக்கவும் அன்றைய ஆங்கில அரசு முனைந்தது. நாட்டுக்குச் சுதந்திரம் பெற அயராது பாடுபட்ட சிலரைப்போல, தொடர்ந்து பணியாற்ற பாரதியாரும் புதுச்சேரியைப் புகலிடமாகக் கொண்டார். அரவிந்தர், வ. வெ. சு. ஐயர் முதலிய பெருமக்கள் பலருடன் தொடர்பு கொண்டு அரசியலில் முனைப்பாக இருந்தார். அன்றியும், தத்துவம், சமயம், இலக்கியம், வேத நூல்கள் போன்றவற்றிலும் அவர் ஆர்வம் காட்டினார். பதஞ்சலியின் ''யோக சூத்திரங்கள்'' ''பகவத்கீதை'' போன்ற பழமையும் பெருமையும் வாய்ந்த இந்திய இலக்கியங்கள் சிலவற்றைத் தமிழில் மொழி பெயர்த்தார்.

தம் இலக்கியத் தொண்டுக்கும் அரசியல் பணிக்கும் இடையே வறுமையிலும், மீளாத் தொல்லையிலும் உழன்றபடி பாரதியார் வாழ்க்கையைக் கழித்தார். இது அவருடைய உடல் நலத்துக்கு ஊறு விளைவித்தது. பத்தாண்டுக்குப் பின்னர் மீண்டும் தமிழ் நாட்டிற்குத் திரும்பினார். இங்கும் இன்னல்கள் அவரைத் தொடர்ந்தன. 1919 ஆம் ஆண்டில் காந்தி அண்ணலை இராஜாஜியின் இல்லத்தில் சந்தித்தபோது அண்ணலின் கொள்கைகள் இவரைப் பெரிதும் ஈர்த்தன. ஆனால், பார்தியார் நீண்ட நாள் வாழ வாய்ப்பில்லாது போயிற்று.

எட்டயபுரம் விழாவில் ஆற்றிய உரை

தமிழ்நாட்டு மக்களும், சிறப்பாக நமது முதலமைச்சர் அவர்களும் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் நூற்றாண்டு விழாவைச் சீரும் சிறப்புமாகக் கொண்டாட முன் வந்துள்ளனர். பாரதியார் தமிழ் நாட்டுக்கு மட்டுமின்றி, அனைத்து இந்தியாவுக்குமே, ஏன் உலக மக்கள் சமுதாயம் முழுவதற்கும் உரியவராவார். தமது உயரிய படைப்புக்களால் உலக இலக்கியத்தையும் சிந்தனையையும் பாரதியார் வளப்படுத்தியுள்ளார். அவரது படைப்புக்கள் அனைத்தையும், பேணிப் பாதுகாத்து மக்களிடையே பரப்ப வேண்டும். பாரதியாரின் இலக்கியங்கள் தமிழ் மொழியின் இலக்கிய வளத்திற்கும், சிந்தனை நலத்திற்கும் அமைந்த அடையாளச் சின்னங்களாகும். மக்களிடையே குறுகிய மனப்பான்மையும், சிறுமை உணர்வும், பொறுமையின்மையும் இன்னமும் உலவுவதால் அவற்றைக் களைவதற்கான போராட்டத்தில், பாரதியாரின் விரிந்து பரந்த நோக்கு நமக்கு ஊக்கமூட்டும் வழி காட்டியாக அமைகின்றது. இந்திய நாட்டின் விடுதலை வரலாற்றில் அவருக்குரிய இடம் சரியாகக் கணிக்கப்படவேண்டும். இன்றைய உலகிற்கும், நம் எதிரில் உருவாகும் வருங்கால உலகிற்கும் பாரதியாரின் மனித நேயமும், அனைத்துலகு அளாவிய நோக்கும் இன்றியமையாதன



ஏற்றத் தாழ்வை அகற்றுவோம்!

மாண்புமிகு முதல்வர்

சுப்ரமண்ய பாரதியாரின் நூறாவது பிறந்த நாள் இன்றைய தினம் தமிழக மக்களால்-அனைத்து மக்களால் கொண்டாடப் படும் விழாவாக உருவாகி இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கிறேன். அவர் செயல்களெல்லாம் அவர் வாழ்ந்த காலத்தில் செய்த கடமைகளை எல்லாம் நாம் யாரும் மறக்க முடியாது-வரலாறு மறக்காது என்ற வகையில் இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது. அவரது தியாகங்கள் நமக்கு எடுத்துக்காட்ட - வழி வகுக்க - இந்த நாள் பயன்படும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பாரதிக்கு முன்பு எத்தனையோ கவிஞர்கள் இருந்திருக்கிறார்கள். அவருக்குப் பின்னரும் எத்தனையோ கவிஞர்கள் தோன்றியிருக்கிறார்கள்; தோன்றிக்கொண்டிருக்கிறார்கள். பாரதி எடுத்துச் சொல்லிய கருத்துக்களை எல்லாம் வைத்துச் சில கேள்விகளைக் கேட்டு, நாமே அவற்றிற்கு விடை கூறிக்கொண்டால் அவர் யார் என்பது விளங்கும்.

சமூக சீர்திருத்தத்தில் அவர் ஆர்வம் கொண்டிருந்தவரா என்று கேட்டால், ஆம் என்ற விடை கிடைக்கும்.

பெண்கள் மறுமலர்ச்சிக்குரிய கருத்துக்களை வெளியிட்டவரா என்று கேட்டால், ஆமாம் என்ற பதில் கிடைக்கும்.

பெண் உரிமைக்காகப் போராடியவரா என்று கேட்டால், ஆம் என்ற பதிலே கிடைக்கும்.

ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானமாக வாழ வேண்டும் என்ற தத்துவத்தை எடுத்துச் சொன்னாரா என்றால், ஆமாம் என்னும் பதிலே கிடைக்கும்.

இந்த நாட்டில் - சமூகத்தில் ஏற்றத் தாழ்வு கூடாது என்ற கொள்கையைத் தனது கவிதையின் மூலம் தெரிவித்தாரா என்று கேட்டால், ஆமாம் என்ற பதில் தான் கிடைக்கும்.

சாதிகள் கூடாது என்ற உண்மையை - தனது உணர்வை - எழுதி-பேசி வந்தவரா என்றால், ஆமாம் என்னும் பதிலே கிடைக்கும்.

பெண்களை அடிமைப்படுத்தக் கூடாது என்ற தத்துவத்தை வலியுறுத்தியவரா என்று கேட்டால், ஆமாம் என்ற பதிலே கிடைக்கும். நாட்டு விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவரா என்று கேட்டால், ஆமாம் என்ற பதிலே கிடைக்கும்.

எந்தப் புரட்சிக் கருத்தையும் இன்று கூற முடியும். ஆனால் அதனைச் சொல்ல முடியாத காலத்தில் - சொல்வதற்கு அச்சப்பட்ட காலத்தில் அதனைத் துணிவாகச் சொல்லியிருக்கிறார். எத்தனை துணிச்சல் இருந்தால் சொல்லியிருக்க முடியும் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

அவர் புகழோடு இருந்த காலத்தில் -அவர் உயர்ந்த பதவியில் இருந்த போது இந்த விழா கொண்டாடப் பட்டிருக்குமேயானால் அதில் சிறப்பிருக்காது. மறைந்த பிறகு இந்த விழா கொண்டாடப்படுவதே சிறப்பாகும்.

பஞ்சாப் மாநில முதல்வர் தர்பாரா சிங் அவர்கள் இந்த விழாவில் ஆர்வத்துடன் பங்கேற்றிருக்கிறார்கள். அடுத்த ஆண்டு பஞ்சாபில் பாரதியார் பிறந்தநாள் விழாகொண்டாடப்படும் என்று அவர் சொன்னார். வங்காள முதல்வர் ஜோதிபாசு அவர்கள் நாங்கள் கொண்டாட இருக்கிறோம் உங்களின் உதவி தேவை என்று கடிதம் எழுதியிருக்கிறார்கள். உத்தரப்பிரதேச முதல்வர் நாங்களும் கொண்டாடப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். மற்ற மாநிலங்களும் அவ்வாறே கொண்டாட இருக்கின்றன. பாரதியின் புகழ் - தியாகம்-ஆற்றல் இந்தியர் அனைவருக்கும் - இந்தியத் துணைக் கண்டம் முழுதுக்கும் பயன்பட வேண்டும் என்பது மட்டுமல்ல, உலகுக்கே பயன்பட வேண்டும் என்பது எனது விருப்பம்.

சிலருக்குச் சில நாட்கள் புகழ் இருக்கலாம். சில வாரங்கள் புகழ் இருக்கலாம். சில மாதங்கள் புகழ் இருக்கலாம். ஆனால் பாரதியின் புகழ் நூறாண்டுகளுக்கு மேலாக இருந்து வருகிறது. இன்னும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு அது இருக்கும் - சமுதாயம் அவரைப் போற்றும்-வாழ்த்தும் என அறுதியிட்டுக் கூறுகிறேன்.

பாரதிக்குத் துணிவு எங்கிருந்து வந்தது? பிராமண குலத்தில் பிறந்

தவர் அவர். பிறப்பால் தாழ்த்தப் பட்டவர் இல்லை. தனக்காகவோ தனது இனத்துக்காகவோ சமுதாயத்துடன் போராட வேண்டிய அவசியம் அவருக்கு இல்லை. வசதியாகத் தான் வாழ்ந்திருக்கிறார். அவரது தந்தை ஒரு சிறிய தொழிற்சாலை நடத்துகின்ற அளவுக்கு அவரது குடும்பச் சூழ்நிலை இருந்திருக்கிறது.

அப்படி இருந்தும் அவர், தனக்காகப் போராட வில்லை. சமுதாயத்துக்காகப் போராடியிருக்கிறார். அவர் தனி மனிதரல்லர்- தத்துவத்தின் சின்னம்.

மற்றவர்கள் சொல்ல அஞ்சும் கருத்துக்களை - பிரச்சினைகளை சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களை அவர் துணிச்சலுடன் தெரிவித்திருக்கிறார்.

அவரை தேசிய கவி என்பதா, மகாகவி என்பதா, தேசிய மகாகவி என்பதா? அந்தப் பெருமையை எண்ணித்தான் விழா கொண்டாடப்படுகிறது.

அவர் எந்தக் கருத்தையும் பெரிதாகச் சொல்லியிருக்கிறார்.

பெண்களின் கற்பு நிலை குறித்து விவரமாக வெளியிட்டிருக்கிறார். பெண்களுக்கெனச் சில திட்டங்களைத் தெரிவித்திருக்கிறார்.

'பெண் பக்குவமடைவதற்கு முன் திருமணம் செய்யக்கூடாது' என்று பாரதியார் கூறியிருக்கி ~~அவர்~~ சொல்லிய பிறகு அவ்வாறு திருமணம் செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால், தடைச் சட்டம் வருவதற்கு முன்பே -எவ்வளவு சிந்தனையோடு - துணிவோடு - சொல்லியிருக்கிறார் பாரதி என்பதை இளைஞர் சமுதாயம் நினைவிற் கொள்ள வேண்டும்.

இன்று நாம் பேசுகின்ற பல புரட்சித் தத்துவங்களை 50 ஆண்டுகளுக்கு முன்பே பாரதியார் சொல்லியிருக்கிறார்.

''பிதுரார்ஜித சொத்தில் பெண்களுக்கும் சமபங்கு வழங்கப்பட வேண்டும்'' என்று பல்லாண்டுகளுக்கு முன்பேயே தெரிவித்திருக்கிறார்.

''கணவன் இறந்த பிறகு ஒரு பெண் மறு விவாகம் செய்ய விரும்பினால் அதைத் தடுக்கக் கூடாது'' என்றும் அவர் கூறியிருக்கிறார்.

பெண்களுக்குப் படிப்பு வேண்டும் என்று அக்காலத்திலேயே பாரதி கூறியுள்ளார். அவர்களுக்

குப் பட்டப்படிப்புக் கொடுக்க வேண்டும் என்று முன்னமேயே சிந்தனையுடன் கூறியுள்ளார் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

அண்ணா அவர்கள் வழியில்- பெரியார் அவர்களின் வழியில் நடைபோடும் இந்த அரசு அவர்களின் கொள்கைகளில் பலவற்றை நிறைவேற்றியிருக்கிறது.

பெண்களுக்கென ஒரு பல்கலைக் கழகத்தை அடுத்த ஆண்டு இறுதிக்குள் தமிழக அரசு துவக்கப்போகிறது.

பெண்கள் மறுமலர்ச்சியில் பெரும் பங்கு கொண்டவர் பாரதி. பெண் விடுதலையின் பெருமைக்காக 'தர்மயுத்தம் தொடங்குவேன், அதற்கு மகா சக்தி துணைபுரிவாள்' என்கிறார் பாரதி.

தமிழகத்தைப் பொறுத்தவரை நான்கு மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவராகப் பெண்களே இருக்கின்றனர் என்று நான் பெருமையுடன் குறிப்பிடுகிறேன்.

கலப்பு மணம் செய்து கொள்ளுங்கள் என்று பாரதி வலியுறுத்தினார். தமிழகத்தைப் பொறுத்தவரையில் இப்போது கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்களுக்கு நாம் பரிசு கொடுக்கிறோம், பணம் கொடுக்கிறோம்.

மாபெரும் தியாகம் செய்த பாரதியை, தியாகி என்பதா வீரர் என்பதா, மறத்தமிழன் என்பதா!

தன்னோடு பிறந்தவன் -சகோதரன் அவனுக்கு உரிமை கிடையாது என்ற நிலை இருந்தது. அவனை அடிமை என்று கருதி வந்தார்கள். அந்த இழிநிலை ஒழிய வேண்டும் என்று தீவிரமாக இருந்தார் பாரதி. அனைத்து மனிதர்களும் சகோதரர்கள் என்று அவர் கூறினார். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று நமது அண்ணா அவர்கள் வலியுறுத்தி வந்தார்களே, அதுபோல மனிதரத்தம் அனைத்தும் ஒன்றே என்று தெரிவித்தார் பாரதியார்.

சமதர்ம சமுதாயம் வேண்டும் என்கிறார் புரட்சிமனம்கொண்ட பாரதி. இந்தியா முழுமையும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியவர் பாரதி. அதனால் பாரதி பிறந்த நாளை இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டு நாளாகக் கொண்டாடவேண்டும். தமிழகத்தில் ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் பாரதியின் பிறந்த நாள் விழா நடைபெறும்.

இந்த நாளில் ஏற்றத்தாழ்வை அகற்ற நாம் உறுதி எடுத்துக் கொள்வோம். ஒன்றே குலம் என்ற நிலை உருவாகப் பாடுபடுவோம்.

(11.12.81ல் எட்டையபுரம் பாரதி நூற்றாண்டு விழாவின் தொடக்க நாள் நிகழ்ச்சியில் ஆற்றிய உரையிலிருந்து....)

தொகுப்பு: தமிழ்மித்தன்.

புதியதோர் சமுதாயம் அமைப்போம்

மாண்புமிகு முதல்வர்

நடந்து முடிந்த பாரதி நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள் மனநிறைவை-மகிழ்ச்சியை-பூரிப்பை-பெருமையைத் தரத்தக்க வகையில் மூன்று நாட்களாக நடந்து முடிந்திருக்கிறது. இதைப் பார்த்துக் கொண்டிருக்கும் நாம் உள்ளம் நெகிழ்ந்து போயிருக்கிறோம்.

இங்குள்ளவர்கள் - எட்டயபுரத்து மக்களின் எண்ணம் எப்படி இருக்கும் என்பதைக் கற்பனை செய்து பார்க்கிறேன். அவர்கள் எல்லாம் பெருமையுடன் கொண்டாடி, 3 நாள் நிகழ்ச்சிகளையும் நடத்தி முடித்திருக்கிறார்கள். பெருமைக்குச் சொந்தம் கொண்டவர்களுடைய ஊரில் பிறந்து வாழ்பவர்கள் என்று அவர்கள் உள்ளம் பெருமைப்படுகிறது.

இங்கே தோன்றிய பாரதிக்கு - பல தியாகம் செய்த புலவருக்கு ஜாதி மதங்களைக் கடந்து நாட்டுக்குக் கடமையாற்றிய கடமை வீரருக்கு - எத்தனை லட்சம் மக்கள்-கோடிக்கணக்கான மக்கள்- என்பதுகூடப் பொருந்தாது-உலகத்திலுள்ள மனித வர்க்கம் அனைத்துக்கும் வழி வகுத்துக் கொடுக்க நினைத்த மகாகவிக்கு விழா எடுத்து முடித்திருக்கிறோம்.

நாடு எப்படி நலம் பெற வேண்டும்-மக்கள் எப்படி வாழ்ந்து நலம் பெற வேண்டும் என்று எடுத்துச் சொன்ன ஒருவர்-இந்திய மக்களின் வாழ்க்கையை எண்ணிப் பார்த்த ஒருவருக்கு எடுக்கப்பட்ட விழா மிகச் சிறப்பாக நடைபெற்றதை எண்ணி நாம்அனைவருமே மிகுந்த பெருமைப்படுகிறோம். உலகத்தைக் கவனிக்க வைத்த-ஈர்த்த விழாவாக இது அமைந்ததைப் பற்றி பாரதியின் ஊ...லேயே பேச வாய்ப்பு எனக்குக் கிடைத்ததை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன்.

முதலமைச்சராக இருப்பதால்தான் இந்த வாய்ப்புக் கிடைத்தது என்று நான் பெருமைப் படவில்லை. அண்ணாவின் தம்பி என்பதால் இந்த வாய்ப்புக் கிடைத்திருக்கிறது என்பதனை எண்ணிப் பெருமையடைகிறேன். முதலமைச்சர் பதவி வரும் ; போகும் ; முதலமைச்சர் பதவி நாம் விரும்பினால் கிடைக்காது; மக்கள் விரும்பினால்தான் கிடைக்கும். நாம் ஆசைப்படலாம். ஆனால் மக்கள் ஆசைப்பட வேண்டும்.

இங்கே நான் அரசியல் பேச மாட்டேன். ஆனால் எனது பேச்சில் அரசியல் கலந்து வந்தால் அதைத் தவறாக எண்ண வேண்டாம்.

முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். உயிரோடு இருக்கும்போது யாரையும் நமது நாட்டில்மதிப்பதில்லை; மறைந்த பிறகு விழா எடுக்கிறார்கள் என்று கூறினார்கள். அதற்குப் பதில் சொல்ல நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஒருவர் இந்த நாட்டில் அருஞ்சாதனைகளைச் செய்து, அவர் வாழ்ந்த காலத்தில்

எத்தகைய உதவியுமின்றி வாழ்ந்தார் என்று அறிந்து கொள்ளும்போது, எதிர்கால சமுதாயம் அவரைப் பற்றி, அவரது தொண்டு பற்றி-தெரிந்த பிறகு அவருக்கு விழா எடுக்க வேண்டும் என்று முனைகிறது.

உயிரோடு இருப்பவர்களை யாரும் மறப்பதில்லை. தேசத் தந்தை மகாத்மா காந்தி அவர்கள் உயிரோடிருக்கும்போது அவரை யாரும் மறக்கவில்லை. இப்போது தான் மறந்துவிட்டார்கள். அவரைக் கொன்று விட்டார்களே தவிர வாழ வைக்கவில்லை. இந்தியத் தந்தை என்று அவருக்குப் பெயர் வைத்தார்கள். நேரு அவர்கள் இருக்கும் போது அவரைப் பாராட்ட மறந்து விட வில்லை மக்கள். அவர் மறைந்த பின்னரும் அவரை மறந்து விடவில்லை.

புலவர்கள் வாழ்ந்த காலத்தில் மற்றப் புலவர்கள், அவரது கவிதையில் எதுகை இல்லை, மோனை இல்லை, என்ன எழுதுகிறார் இவர் என்றெல்லாம் கூறுவார்கள். அவர் இறந்து விட்டால் புகழ்வார்கள். புலவர்களுக்கு மட்டுமல்ல, இசைவாணர்களுக்கு, பத்திரிகையாசிரியர்களுக்கு, கலைஞர்களுக்கு, ஆசிரியர்களுக்கு இன்னும் பலருக்கும் இந்த நிலை உண்டு.

பாராட்டினால் வளர்ந்து விடுவார்கள் என்ற எண்ணம் சிலருக்கு இருக்கிறது. பொறாமையைத் தூக்கி எறிந்து விட்டு தன்னம்பிக்கையுடன் வாழ்வதற்கு நினைத்தால் நல்ல நிலை—நல்ல நேரம் தானாகவே வரும்.

அறிஞர் அண்ணா அவர்கள், பாரதிதாசன் உயிரோடு இருக்கும்போதே அவரைப் பாராட்டிப் பொற்கிழி வழங்கினார்.

எப்போது, எந்தக் காரியம் செய்ய வேண்டும் என்பது தமிழக அரசுக்குத் தெரியும்.

நான் முதல்வர் ஆனவுடன், 'உயிரோடிருப்பவர்களுக்குச் சிலை வைக்கக் கூடாது என்று உத்தரவு போட்டேன். போடா விட்டால் என்ன ஆகியிருக்கும்? என் சிலையை வைக்கப் போகிறேன் என்று பலர் போட்டி போட்டுக் கொண்டு வந்தனர். நான் அனுமதிக்கவில்லை. 'ஒருவர், எனது தோட்டத்திலே சிலையை வைக்கப் போகிறேன்! நீங்கள் என்ன செய்ய முடியும்?' என்று கேட்டார். மறுத்தேன். 'எனது சிலையை வைப்பதற்கு நீங்கள் யார்? நான் அதை அனுமதிக்க மாட்டேன்' என்று தெரிவித்தேன்.

கர்நாடக மாநில முதல்வர் குண்டுராவ் அவர்கள் இங்கே பேசும்போது குறிப்பிட்டார்கள்; பாஷை ஒரு தடையாக இருக்கிறது. பாஷை தெரியாவிட்டால் எத்தனை கஷ்டம் அடைய வேண்டியிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள்.

ஒரு மொழியை நாம் புரிந்து கொள்ள முடியாதபோது-அந்த மொழியை - கட்டாயப் படுத்தக் கூடாது. இந்தி மொழியில்தான் பேச வேண்டும் என்று சட்டம் இடும்பொழுது சிக்கல் ஏற்படுகிறது. உயிர் மொழியாம் தாய்மொழியை நீங்கள் யார் தடை செய்ய என்று கேட்க நேரிடுகிறது. தமிழிலே சிந்தனை செய்ய வேண்டும்- தமிழிலே பேச வேண்டும் என்று பாரதியார் சொன்னார்.





பாரதியாரின் இளவல் திரு சி. விசுவநாதஅய்யர் அவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நினைவுப் பரிசு வழங்குகிறார்.

சிந்திப்பது என்பது தமிழிலே சிந்திக்க வேண்டும். தமிழனாகவே சிந்திக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் வயலில் வேலை செய்யும் உழவன் கூழைக் குடித்து, பச்சை மிளகாயைக் கடித்து விட்டு மரத்தின் நிழலிலே இருந்து கொண்டு நிலத்திலே சாய்ந்து ஓய்வு எடுக்கிறான். அதுதான் அவனுக்கு அரண்மனை என்ற நிலையில் இருப்பான். ஆனால் இதே மாதிரி உள்ள அமெரிக்க உழவன் வாழ்க்கை முறைவேறு-சிந்தனை வேறு. அவன் டிராக்டரை நிறுத்தி விட்டு, ரொட்டியையும் வெண்ணெய்யையும் தின்று கொண்டு, கையில் சிகரெட்டைப் பிடித்துக் கொண்டு சிந்திப்பான். கூழைப் பற்றி அவன் எண்ணமாட்டான். காரணம் இருவரின் கலாச்சார அமைப்பு வேறு வேறானது. அவரவர் சூழ்நிலையை யொட்டித் தாய்மொழியில் சிந்திப்பார்கள்.

தமிழ்ச் சிந்தனை என்கிறோம். அதனை பாரதியார் எந்தெந்த வகையில் பயன் படுத்துகிறார் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

கடையம் என்ற ஊரில் பாரதியார் வாழ்ந்தபோது, பக்கத்து ஊரில் விழா ஒன்று நடைபெற்றது. அதில் ஒரு முரட்டு யானை இருந்தது. அதைப் பார்ப்பதற்கு மக்கள் சென்றனர். பாரதியார் தாமும் சென்றார். அங்கே அந்த யானையை அடக்கிய மாவுத்தன் பிராமண வகுப்பைச் சேர்ந்தவராக இருந்திருக்கிறார். பிராமணர் எப்படி மாவுத்தன் ஆனார் என்ற செய்தியை அவர் விசாரித்தபோது, அவர்கள் சொன்னார்களாம். 'இது சூத்திரயானை. அதனால் தான் அதை பிராமண மாவுத்தர் அடக்குகிறார்' என்றார்களாம்.

மனிதர்களில் மட்டுமல்ல மிருகங்களிலும் ஜாதிப் பிரிவை நாம் ஏற்படுத்தி வைத்திருக்கிறோம். சூத்திர யானை என்றெல்லாம் பிரித்து வைத்திருக்கிறார்கள். ஜாதி என்பது மனிதரால் உருவாக்கப்பட்டது; கடவுளால் உருவாக்கப்பட்டது அல்ல.

காலையில் அகிலன் அவர்கள் பேசும் போது குறிப்பிட்டார்கள். ஓராண்டுக் காலத்தில் ஜாதிகளை ஒழிக்கத் தமிழக அரசு தீவிரப் பணியாற்ற வேண்டும் என்று. மகாத்மா காந்தி, தந்தை பெரியார் ஆகியோர் பல்லாண்டுகளாக முனைந்தும் ஒழிக்க முடியாததை நாங்கள் ஒரே ஆண்டில் எப்படிச் செய்து விட முடியும்?

இதுவரை பாரதி சொன்ன புரட்சிக் கருத்துக்கள் எதுவும் நடைபெறவில்லை. மிருகங்களில்கூட ஜாதிப் பிரிவினை இருந்தால்-நாம் அதனை அனுமதித்துக் கொண்டிருந்தால் பாரதியின் கொள்கை எப்படி நிறைவேறும்? நிறைவேற்ற முடியவில்லையே என்பதை எண்ணி ஒவ்வொருவரும் வருத்தப்படத் தான் வேண்டும். ஒருவர் 'இவற்றை எல்லாம் முடித்து விடு' என்று கட்டளையிடுகிறார். 'இன்னின்ன முடிந்துள்ளன' என்று முன்னாள் முதல்வர் பக்தவத்சலம் தெரிவிக்கிறார்.

அவரவர் தாய்மொழியில் எண்ணங்களை வெளியிட இயலாது, ஆங்கில மொழியில்தான் சரிவர எண்ண-சொல்ல முடிகிறது என்று சொல்லப்பட்டது. அதைக் கேட்ட பாரதி 'இந்த வேதனையை நான் எங்கே போய்ச் சொல்வேன்' என்று கேட்டுக் கண்ணீர் சிந்தினார்.

ஆங்கில மொழியில் கற்றால்தான் ஒழுக்கம் சிறப்பாக இருக்க முடியும் என்று சிலர் கருதுகின்றனர். ஆங்கிலம் படிக்கும் குழந்தைகள்தான் ஒழுக்கத்தில் தவறி விடுகின்றன. அதனை 70 ஆண்டுகளுக்கு முன்னமேயே பாரதி சொன்னார். ஆங்கில மோகத்திற்கு முற்றுப் புள்ளி வைக்க விரும்பினார்.

நமது மாநிலத்தில் எல், கே. ஜி, யு. கே. ஜி என்று சொல்லி, குழந்தைகளை ஆங்கிலக் கல்விக்குப் பலபெற்றோர் அனுப்பி வைக்கின்றனர். இனிமேல் அது போன்ற நிலைக்கு அனுமதி கொடுப்பதில்லை என்று தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது.

இன்றைக்கு ஆண்களின் பெயருக்குப் பின்னால் ஜாதிப் பட்டம் இருக்கிறது. ஆனால் பெண்களின் பெயருக்குப் பின்னால் இல்லை. பெண்கள்தான் ஜாதி ஒழிப்பில் சடுபட்டிருக்கிறார்கள்.

ஜாதி ஒழிப்பில் தமிழக அரசு சடுபட்டிருக்கிறது. முதல் நடவடிக்கையாக வீதிகளில் உள்ள ஜாதிப் பெயர்கள் வேண்டாம் என்று உத்தரவிட்டேன். உடனே, பெரியாரின் கொள்கைக்குச் சொந்தக்காரர்கள் என்று சொல்லிக் கொண்டவர்கள் கிளர்ச்சி செய்யத் தொடங்கினார்கள். வீதிகளின் பெயர்களில் ஜாதிப் பெயரை எடுத்து விட்டால் குழப்பம் ஏற்படுகிறதாம் அவர்களுக்கு! நல்ல முடிவுகளை யார் சொன்னாலும் - செய்தாலும் ஏற்க வேண்டும் என்ற எண்ணம் அவர்களிடம் இல்லை. தான்தான் எதையும் செய்ய வேண்டும் என்பது அவர்களின் எண்ணம்.

75 ஆண்டுகளுக்கு முன்னால் பெண்களைப் பார்த்து 'சகோதரிகளே! போராட வாருங்கள்' என்று, பாரதி அழைக்கிறார்; பெண் கல்வி வேண்டும் என்ற அவசியத்தை எடுத்துரைத்தார்.

நான் ஆண்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன் பெண் கல்வி வேண்டும் என்று ஒரு காலத்தில் சொல்லப்பட்டு வந்தது. வீட்டுக்கு வீடு-பெண் கல்வி என்ற நிலை இல்லாதிருந்தது. பெண்கள் கல்வி கற்றால் ஒழுக்கம் தவறி விடுமோ என்ற நிலை இருந்தது. இன்று ஒரு கணம் தெருவில் போகும் போது சற்று நின்று பாருங்கள்! 7 அல்லது 8 பேர் பெண்களாக-புத்தகங்களைச் சுமந்து கொண்டு பள்ளிகளை நோக்கிச் செல்வதைக் காணலாம். பள்ளிக்குச் செல்லும் ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கை குறைந்து இருப்பதை எண்ணிப் பாருங்கள். முன்பு போல, ஆண்கள் கல்வி கற்பதில் அக்கறை காட்டுவதில்லை, பெண்கள் கல்வி கற்பதைத் தங்களின் கடமையாகக் கருதி, அதிக மதிப் பெண்கள் பெறுகின்றனர். தேர்வு எண்ணிக்கையிலும் அதிகமாக அவர்கள் உள்ளனர்.

60, 70 ஆண்டுகளுக்கு முன்னர் பெண் கல்வி வேண்டும் என்று சொன்னார்கள். இப்படியே போய்க் கொண்டிருந்தால் ஆண்கல்வி வேண்டும் என்று சொல்லக் கூடிய நிலை வந்து விடும் ஆண் பெண் சமநிலை வேண்டும். அதில் குறை ஏற்பட்டு விடக் கூடாது என்ற அச்சத்தால் இதனைத் தெரிவிக்கிறேன்.

குடும்பங்களில் பெண்கள்தான் சமையல் செய்வார்கள். கொஞ்சம் வசதியுள்ளவர்களின் வீட்டிலே சமையல் செய்வது சமையல்காரனா, சமையல்காரியா என்று பாருங்கள். சமையல்காரன்தான்! எப்போதோ ஓட்டலுக்குப் போகிறோம். அங்கு உணவு பரிமாறும் சர்வர் யார்? சமையல் செய்வது யார்? எல்லாம் ஆண்கள்தான். பெண்கள் எல்லாரும் படிக்க ஆரம்பித்து விட்டால் நிலைமை என்ன ஆகும்? ஆண்கள் படித்து விட்டு வந்து பரீட்சை எழுதும்போது புத்தகத்தைப் பார்த்துக் கொண்டுதான் பரீட்சை எழுதுவோம் என்று கூறுகிறார்கள். இது முறையா?

பாரதி இருந்த காலத்தில் பெண்களுக்கு வாக்குரிமை தருவதை ஐரோப்பியர் எதிர்த்தார்கள். ஆய்ந்து பார்த்து முடிவு செய்யும் அனுபவம் பெண்களுக்கு இல்லை. கல்வி இல்லை. ஆகவே அவர்களுக்கு வாக்குரிமை தருவதை அனுமதிக்கக் கூடாது என்ற நிலை அந்நாளில் இருந்தது. பாரதியார் தமிழ்நாட்டில் பெண்களுக்குப் பதவி கொடுக்க வேண்டும் என்று சொன்னார்.

தமிழக அரசு வர இருக்கின்ற பஞ்சாயத்துத் தேர்தலில் 15 சதவீதஇடத்தை ஊராட்சி

ஆந்திர மாநில அமைச்சர் ஸ்ரீ பட்டம் ராமமூர்த்தி அவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நினைவுப் பரிசு வழங்குதல்.

அரசுக் கலைஞர் திருமதி எம். எல். வசந்தகுமாரி அவர்களுக்கு விருது வழங்கப்படுதல்.

மன்றத்தின் தலைவியாகப் பெண்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட வேண்டும் என்றும், பெண்களுக்கு இடம் ஒதுக்கியுள்ளது. அதற்கு என்ன சொல்கிறார்கள் சிலர்? இந்தத் திட்டத்திற்குச் சட்டம் இடம் கொடுக்குமா என்று கேட்கிறார்கள். எது உன் உள்ளத்திற்கு நியாயம் என்று தெரிகிறதோ அதுதான் சட்டம். யாரோ எப்போதோ செய்த சில தவறுகள் எப்படிச் சட்டமாகும்? மக்கள் தொகுதியின் விருப்பம் தான் சட்டமே தவிர தனிமனிதனின் விருப்பம் சட்டம் ஆகாது என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 சதவீதம் ஒதுக்கீடு செய்தால், அது போதாது 50 சதவீதம் ஒதுக்கு என்கிறார்கள். சிலர் 18 சதவீதம் ஏன் கொடுக்கிறாய், கொடுக்காதே என்று எனக்குக் கட்டளை இடுகிறார்கள். மக்களைச் சந்திப்பதற்கு நாங்கள் பயப்படவில்லை. பெண்களுக்கு இடம் எப்படி ஒதுக்கப்பட வேண்டும் என்று அந்த மகாகவி நினைத்தானோ, அதைத்தான் தமிழக அரசு செய்கிறது என்று சொல்ல விழைகிறேன்.

ஒரு கதை சொல்வார்கள். செட்டியார் ஒருவர் ஜோசியரிடம் தனது ஜாதகத்தைக் காண்பித்து நான் எப்போது முன்னுக்கு வருவேன் என்று கேட்டாராம். ஜோசியர் இந்த ஜென்மத்தில் முடியாது. இந்த ஜென்மத்தில் நல்ல காரியம் செய்தால் அடுத்த ஜென்மத்தில் முன்னேற்றத்திற்கு வரலாம் என்றார். உடனே செட்டியார், எப்போதோ வரும் அடுத்த ஜென்மத்தில் பயனடைவதற்கு இப்போது ஏன் நல்ல காரியம் செய்ய வேண்டும் என்று கூறி, நன்கு உழைத்து, சம்பாதித்துக் கொள்ளலாம் என்று போய் விட்டாராம்

'நாட்களைக் கடத்தாதே! நாளைக்குச் செய்யலாம் என்று எதையும் தள்ளி வைக்காதே' என்று தந்தை பெரியார் சொல்லி வருவார்.

மூதறிஞர் ராஜாஜி ஒரு முக்கியமான கருத்தைத் தெரிவித்தார். வேதத்தில் நான்கு ஜாதிகள்தான் சொல்லப்பட்டிருக்கின்றன. பஞ்சமன் என்று ஒரு ஜாதி சொல்லப்படுகிறது. பஞ்சமன் என்று வேதத்திலேயே சொல்லப்படவில்லை. அப்படியென்றால் மிலேச்சர்கள் என்றும் பஞ்சமர்கள் என்றும், சொல்லப்படும் ஐந்தாவது இனம் எப்படி வந்தது என்று பண்டிதர்களைக் கேட்டார். அவர்களால் பதில் சொல்ல முடியவில்லை.

ஒரு வீட்டில் பல அறைகள் இருக்கின்றன. பூசை அறை, சமையலறை, படுக்கை அறை என்று பல்வேறு அறைகள் இருக்கின்றன. அந்த வீட்டிலே இல்லாத வேறொரு அறையை அந்த வீட்டுக்கு உரியது என்று சொல்ல முடியுமா ? அப்படியென்றால் ஆதி திராவிடர் என்ற பிரிவு ஏன்?

அவர்கள் எல்லாரும் நாம் ஏன் சீர்கெட்டு-பாழ்பட்டுக் கிடக்கிறோம்? நாம் சேர்ந்து போராடினால் என்ன? நமக்கு உரிமையில்லாத வகையிலே இருக்கிறோமே, இதை மாற்றி அமைக்க வேண்டாமா? என்றுநினைத்தால் நிலைமை என்னவாகும்?

ஜாதி என்பது அதிகமாகப் பேசப்பட வேண்டியதில்லை; ஆனால் பேசுகிறோம். மத மாற்ற நிலை ஏற்படக் காரணம் வறுமை—ஏழ்மை.

அத்தனை அரசியல்வாதிகளும் சொல்கிறார்கள். ஆனால் வேலை இல்லாத் திண்டாட்டம் போய் விட்டதா?

"ஏழ்மை போக வேண்டும்-வறுமை போக வேண்டும், வேலை இல்லாத் திண்டாட்டம் போக வேண்டும் என்று அனைவரும் சொல்லி வருகிறோம். அவற்றைப் போக்குவதற்கு நாம் எல்லோரும் ஒன்று சேரவில்லை.

புதிய சமுதாயம் அமைப்பதற்கு மகாகவி ஒரு வேண்டுகோள் விடுக்கிறார்.

''ஓ சகோதரிகளே! வாருங்கள்! நேர் வழி செல்லுங்கள்—மாதர்களை லட்சக் கணக்கில் விடுதலை செய்வோம். ஜாதி பேதமற்ற சமுதாயத்தை-சமத்துவம் மிக்க சமுதாயத்தை அரங்கேற்ற வாருங்கள். அன்பே இன்பம் தரும்' என்கிறார் பாரதியார்.

நான் இன்று நெல்லையிலிருந்து புறப் பட்டு எட்டையபுரத்துக்கு வரும்போது, வழி நெடுகிலும், வீதிகளின் இருபக்கத்திலும் மக்கள் கூட்டம் கூட்டமாக கூடி சாலை ஓரத் தில் நின்றுகொண்டிருப்பதைப் பார்த்தேன்.

காரிலே அமர்ந்து வந்தாலும் அந்த மக்கள் என் கண்களில் படத் தவறவில்லை. அழுக்குத் துணிகளோடும் கிழிந்த ஆடை களுடனும் சாலை ஓரத்தில் நின்று 'எம்.ஜி. ஆர். வாழ்க' என்று அவர்கள் குரல் எழுப்பி னார்கள். அவர்களுக்கெல்லாம் எப்போது வாழ்க்கை தரப் போகிறேன் என்று நான் நினைத்துப் பார்க்கிறேன்.

சுதந்தரமடைந்து 34 ஆண்டுகளில் செய்ய முடியாததை ஒரே ஆண்டில் சாதித்து விட முடியும் என்று நினைக்கவில்லை. என்றா லும் தமிழக அரசு—இந்த முயற்சியில் ஈடு படத்தான் போகிறது. வேப்பமரத்தைச் சுற்றிவந்ததும் அடிவயிற்றைப் பார்ப்பதில் பயன் இல்லை. பொறுமையாக இருக்க வேண் டும்.

பாரதி சொன்னார் ஒரே ஜாதி, ஒரே மதம் என்று. ஜாதி வேற்றுமையை எல்லோ ரும் சேர்ந்து விரட்டிட வேண்டும். எந்த ஜாதிக்காரர்-எந்த மதத்துக்காரர் என்று பார்க்காமல் பொதுவாகப் பணியாற்ற வேண் டும்.

கோவிலுக்குப் போனாலும் சரி, போகா விட்டாலும் சரி, தெய்வத்தைக் கும்பிட்டா லும் சரி, கும்பிடாவிட்டாலும் சரி, பிறரை ஏமாற்றாமல் இருந்தால் தெய்வம் நமக்கு உதவி செய்யும் என்றார் பாரதியார்.

கர்நாடக முதல்வர் குண்டுராவ் அவர்கள் யானைக்கு எந்த நாமம் போடுவது என்பது குறித்து வழக்கு நடைபெற்றதாகச் சொன் னார். நாம் அந்த அளவு பிற்போக்காக இருக்கிறோம்!

கோவில்களில் பூசாரிகளாக இருப்பவர்கள் யார்? அவர்கள் பிராமணர்கள் என்று சொல் வோம். அதுதான் இல்லை. அவர்கள் பட் டர்கள் எனப்படுவோர் ஆவர். அவர்கள் பிராமணர்களை விடத் தாழ்ந்தவர்கள். அவர்கள் வீட்டில் பிராமணர்கள், பெண் கொடுப்பதுமில்லை— கொள்வதுமில்லை.

என்னைப் பொறுத்த வரையில் ஜாதி கிடையாது; மதம் கிடையாது ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பதுதான் எனது கடவுட் கொள்கை. நாமே நம்மவர்களைப் பார்த்து தொடக்கூடாது என்றால் என்ன அர்த்தம்?

ஒரு பரதேசி எச்சில் இலையிலிருந்த உணவை எடுத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந் தார். அப்போது ஒரு நாயும் அவருடன் சாப்பிட்டுக் கொண்டிருந்தது. அந்த வழி யாக வந்த ஒரு வழிப்போக்கர் 'நாயும் நீயும் ஒன்றாகச் சாப்பிடலாமா' என்று கேட்டார். உடனே அந்தப் பரதேசி 'நாராயணனும் நரனும் ஒன்றுதான் எனக்கு; நீங்கள்தான். பிரித்துப் பார்க்கிறீர்கள். கடவுள் தூணிலும் இருக்கிறான்; துரும்பிலும் இருக்கிறான்' என்றார்.

ஓர் இந்து தர்காவுக்குச் செல்கிறான். முஸ்லீம்களாக இந்துக்கள் மாறுகிறார்கள். ஓர் இந்து கிறிஸ்துவ மதக் கோயிலுக்குச் செல் கிறான். நான் மூகாம்பிகை கோவிலுக்குப் போனேன். அங்கே என் தாயைப் பார்த் தேன். நான் அங்கே சென்றதைப் பற்றிப் பலர் கேலியாகக் கேட்டார்கள். நான் ஒவ் வொரு கோவிலுக்கும் போவேன். என் பார்வையில் நான் காண்பது வேறு.

நான் துப்பாக்கியால் சுடப்பட்டு ரத்தம் விரயம் ஆனபோது பாட்டில் பாட்டிலாக எனக்கு ரத்தத்தை ஏற்றினர். யாருடைய ரத்தம் என் உயிரைக் காப்பாற்றியது என்று எனக்குத் தெரியாது. அது குறித்து மருத்து வர்களிடம் கேட்டபோது உங்கள் 'குருப்' ரத்தம் உள்ளவர்கள் அளித்த ரத்தம் உங் களைக் கப்பாற்றியது என்றுதான் சொன் னார்களே தவிர, எந்த நபருடைய ரத்தம் என்பதைச் சொல்ல இயலாது என்று தெரி வித்தனர்.

இந்த அரங்கத்தில் அமர்ந்திருப்பவர் களில் எவரேனும் தந்த இரத்தமும் என் உடலில் ஏற்றப்பட்டிருக்கலாம். அந்த ரத்தம் ஒரு முஸ்லீமின் உடம்பில் ஓடியதாக இருக்க லாம். ஒரு ஆதித்திராவிடத் தோழரின் ரத்த மாகக் கூட இருந்திருக்கலாம். அதனால்தான் நான் ரத்தத்தின் ரத்தமான உடன்பிறப்பு களே என்று அழைக்கிறேன்.

இதையெல்லாம் விஞ்ஞான ரீதியாக—அறிவியல் ரீதியாகத் தெரிந்து கொண்டால் தான் நம்மால் நல்ல காரியங்களைச் செய்ய முடியும். நமது இறுதி எப்போது வரும் என்று நமக்குத் தெரியாது. 39 வயது வரை இருந்த பாரதியார் கொடுமையைக் கண்டு போரிட்டார். இன்னும் 50 வருடம் அவர் இருந்திருந்தால் எத்தனை சாதனை செய்தி ருப்பார்?

இந்தியா ஒரே நாடு என்று எப்போது ஒப்புக் கொள்ளப்படுகிறது? சமத்துவ உணர்வு தோன்றும்போது! பிரச்சினை எப் போது வருகிறது? தமிழ் நாட்டிற்கு தண்ணீர் வேண்டும் என்று கேட்டதும் பிரச்சினை வரு கிறது. தாய்மொழி குறித்துப் பேசும்போது தேசியம் வருகிறது. நமது பணத்தை அதிகம் கொடுத்து கேரளாவிலிருந்து மின்சாரம் வாங்கி வருகிறோம் கர்நாடகத்தில் ஹேம வதியில் தமிழகம், கர்நாடகம், கேரளம் சேர்ந்து அணை கட்டினால் மின்சாரம் பெரு கும். நல்ல முறையில் அதைப் பயன்படுத்த வேண்டும்.

நான் இதைப் பேசும்போது அரசியல் ஆகிவிடுகிறது. சிலர் நான் அரசியலுக்கு அப் பாற்பட்டவன் என்று கூறிக் கொள்வார்கள். அதெல்லாம் போலியானது. அரசியலை ஒதுக்கி விட்டு வாழ முடியாது. வாக்குரிமை எப்போது தரப்படுகிறதோ, அப்போதே ஒவ் வொருவரும் அரசியல்வாதி ஆகிவிடுகிறார்கள்.

தாய் குழந்தைக்குப் பால் கொடுக்க விரும்புகிறாள். அவளிடம் பால் இல்லை. 'ஐயோ எனக்குப் பசிக்கிறதே' என்று அந்தக்



விழா நடைபெற்ற பந்தலில்

குழந்தை அழுகிறது அந்த அழுகையில் அரசியல் இருக்கிறதா இல்லையா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். குழந்தைக்கு அஜீரணம் ஏற்பட்டிருக்கிறது என்றால் மேலும் மேலும் திணிக்கக் கூடாது என்று சொல்கிறோம். அது அரசியல் இல்லையா? நாட்டில் நன்மை எது, தீமை எது என்று தீர்மானிக்க ஒவ்வொருவருக்கும் உரிமை இருக்கிறது

உயர்வு, தாழ்வு என்ற நிலை சமூகத்தில் இல்லாதபடி செய்ய வேண்டும். அதற்குரிய சட்டங்களைச் செய்ய வேண்டும். சமூக சீர்திருத்தம் பேசிப் பயனில்லை. பொருளாதார வாதி ஒழுங்கான முறையில் திட்டங்கள் மக்களுக்குப் பயன்பட வேண்டும் என்று முயற்சி செய்யும்போது அங்கு அரசியல் வந்துவிடுகிறது. எங்களுக்குத் தெரிந்த அளவுக்கு எங்களது பணிகளை நாங்கள் செய்து வருகிறோம். அப்படிப்பட்ட சாதனைகளுக்கு இப்படிப்பட்ட விழா பயன்தரும்

பெண்களுக்கென ஒரு தனிப் பல்கலைக் கழகம் ஏற்படுத்துவதைப் பற்றி கல்பனாத் ராய் அவர்கள் பேசும்போது, இந்தியாவிலேயே இப்படி ஒரு பல்கலைக் கழகம் இல்லை என்று குறிப்பிட்டார்கள். பாரதி எழுதியிருந்த நூல் ஒன்றில் பூனாவில் பெண்களுக்கென ஒரு பல்கலைக் கழகம் இருப்பதாகக் குறிப்பிட்டிருந்தார். அதை ஒட்டித்தான் நான் குறிப்பிட்டேன். தற்போது கல்பனாத் ராய் அவர்களின் உரையைக் கேட்ட பிறகு, மேற்படி பூனாவில் உள்ள பெண்கள் பல்கலைக் கழகம் தற்போது இயங்கவில்லையோ என்று எண்ணத் தோன்றுகிறது

பாரதி விழாவை யொட்டி பாரதி வலியுறுத்திய சமுதாயச் சீர்திருத்தம், பெண்களுக்கு உரிமை, சட்டம், வறுமை ஒழிப்பு, மொழிப்பற்று, நாட்டுப்பற்று, ஆகியவை குறித்து பள்ளி மாணவ மாணவியர்-கல்லூரி மாணவ மாணவியர்க்கும், உடலூனமுற்றவர்கள் ஆகியோருக்கும் கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி, பேச்சுப் போட்டி ஆகியவற்றை ஏற்படுத்தி வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும்.

முதல் கட்டமாக எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் இந்தப் போட்டிகள் நடத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவிலும் 3 பேர் தேர்ந்தெடுக்கப் பெறுவர், பிறகு அவர்களுக்கு மாநில அளவில் பொதுப் போட்டி நடத்தி அதில் வெற்றி பெற்றவர்களுக்குப்பாரதி நூற்றாண்டு நிறைவு விழாவில் பரிசுகள் வழங்கப்படும்.

எட்டயபுரம் பகுதியில் பெண்கள் பாலிடெக்னிக் ஒன்று அடுத்த ஆண்டில் தொடங்கப்படும்.

பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் கணிசமான முறையில் அதிகப்படுத்தப்படும்.

பெண்கள் அதிகம் உள்ள இருபாலரும் படிக்கும் பள்ளிகள் முழுக்க முழுக்கப் பெண்கள் பள்ளிகளாக மாற்றப்படும்.

பாரதியாரின் வாழ்க்கை குறித்துத் தமிழக அரசு திரைப்படம் தயாரிக்கும். வாய்ப்புக் கிடைத்தால் நானே அதனை இயக்குவேன்.

பாரதியாரின் நூல்கள் 3 தொகுதிகளாக பல்வேறு மொழிகளில் பெயர்க்கப்பட்டு வெளியிடப்படும்.

இங்கு காலையில் யாரோ குறிப்பிட்டார்கள் என்று கருதுகிறேன். 'மத்திய அரசு மொழி பெயர்த்து வெளியிடுவதாகச் சொல்கிறது. அது வேண்டாம். அவர்களிடம் உதவித் தொகை பெற்று நாமே வெளியிடலாம்' என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அவர்களும் வெளியிடட்டும், நாமும் வெளியிடுவோம்.

எட்டயபுரம் பகுதியில் பாரதியின் பெயரில் நூற்பாலை ஒன்று தொடங்கப்படும். ஏறக்குறைய 400 பேர்களுக்கு வேலை வாய்ப்பை அந்த ஆலை அளிக்கும். இந்தப் பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பில் முந்துரிமை அளிக்கப்படும்.

பாரதியின் பெயரில் தமிழகத்திலுள்ள பல்கலைக் கழகங்களில் பெலோஷிப் அமைக்கப்படும்.

சென்னையில் பாரதி நினைவு மண்டபம் அமைக்கப் பெறும்.

பாரதியாரின் வாழ்க்கைத் தொடர்பான நிகழ்ச்சிகள் கொண்ட நினைவுச் சின்னமாக அது அமையும்.

(எட்டயபுரத்தில் 13.12.81ல் நடைபெற்ற பாரதி நூற்றாண்டு தொடக்க விழாவின் நிறைவுரை)

தொகுப்பு : தமிழ்ப்பித்தன்

இந்திய மொழிகளில் பாரதியார் பாடல்கள்



"ரஷ்ய புரட்சிக்கு முன்னோடியாக மார்க்ஸ், ஏஞ்சல் போன்றவர்கள் புதிய கருத்துக்களை வெளியிட்டார்கள். மூலப் பொருள்கள் தாமாக எந்த மதிப்பையும் அடைவதில்லை, மனிதன் தன் உழைப்பால்தான் பொருள்களுக்கு மதிப்பை ஏற்படுத்துகிறான். ஆகவே, உழைப்பாளர்களுக்கு அந்த மதிப்பு போய்ச் சேரவேண்டும் என்பது தான் ரஷ்யப் புரட்சி. அந்த ரஷ்யப்புரட்சியை மகாகவி பாரதியார் பாடினார்.

நான் திரு. காமராஜ் அவர்களுடன் ரஷ்யாவுக்குச் சென்றிருந்தபொழுது பாரதியாரைப் பற்றி அங்கு விசாரித்தார்கள்.

நம்நாட்டில் பலாத்காரமின்றி உரிமை பெறமுடியும் என்று காந்தியடிகள் நிரூபித்தார். அடிமைப்பட்டுக் கிடந்த மக்களைத் தட்டியெழுப்பிய பெருமை பாரதியைச் சாரும். விடுதலைப் போராட்டக் காலத்தில் மார்கழி மாத பஜனையைப் போல தொண்டர்கள் பாரதியார் பாடல்களைப் பாடினார்கள்.

சமுதாய சமத்துவத்தை உருவாக்க வேண்டும் என்றார். சுதந்தரம் பெற்ற 'இந்தியாவில்' அதை உருவாக்கி வருகிறோம்.

ஆயுதம் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம் என்றார் பாரதியார். ஆவடியில் 'டாங்குத்' தொழிற்சாலையை ஏற்படுத்தியுள்ளோம். ரூ. 200 கோடி செலவில் காகித ஆலையை உருவாக்கத் தமிழக முதல்வர் திட்டமிட்டுள்ளார். இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே என்றார் பாரதியார். சேலம் எஃகு ஆலை உருவாகியுள்ளது.

மத்திய அரசு பாரதியாரின் பாடல்களை வங்காளம், இந்தி, மராத்தி, தெலுங்குபோன்ற பல மொழிகளில் வெளியிட ஏற்பாடுகளைச் செய்யும்.

மாண்புமிகு மத்திய அரசு நிதியமைச்சர்

திரு ஆர். வெங்கட்ராமன்

(எட்டயபுரம் பாரதி நூற்றாண்டு விழாவில்)

ஒருமைப்பாட்டுக்கு உருவம் கொடுத்த கவிஞர்

மகாகவி பாரதியார் மக்கள் கவிஞர். தேசிய உணர்ச்சி ஊட்டியவர். தீண்டாமையை ஒழிக்க விரும்பினார். மேற்கும் கிழக்கும் இணைய வேண்டும் என்றார். கங்கையும் காவிரியும் இணைய வேண்டும் என்று விரும்பினார்.

வலுவான நாட்டை-விடுதலையில் உயர்ந்த நாட்டை அவர் விரும்பினார். வறுமையை அகற்ற வேண்டும்-ஏழ்மையை அடியோடு நீக்க வேண்டும் என்று அவர் உள்ளம் நினைந்தது. பெண்கள் விடுதலைக்காக உணர்ச்சிக் குரல் கொடுத்தார். இன்று இந்தியாவில் மட்டுமல்ல, உலகின் பல நாடுகளிலும் பெண்களே பிரதமராக இருப்பதைக் கண்டார் என்றால் அவர் உள்ளம் மகிழ்ச்சியில் துள்ளும்.

அவர் கண்ட கனவுகளை தமிழக முதலமைச்சர் நனவாக்கி வருகிறார். இவர் ஆற்றிவரும் நல்ல பணிகளை ஏனைய முதலமைச்சர்களும் பின்பற்ற வேண்டும்.

இந்த மாநிலம் வகையுற வாழ் வல்லமை தாராயோ என்று வேண்டிய கவிஞரின் பெயர் என்றும் என்றும் நிலைத்து நிற்கும்.

திரு கல்பனாத்ராய், எம்.பி.,

(அகில இந்திய இந்திரா காங்கிரஸ் பொதுச் செயலாளர்)

(எட்டயபுரம் பாரதி நூற்றாண்டு விழாவில்)



பஞ்சாப் மாநிலத்தில் பாரதி விழா

மாண்புமிகு பஞ்சாப் மாநில முதல்வர்
திரு தர்பாரா்சிங்

ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்துவந்து பாரதியார் நூற்றாண்டுத் தொடக்க விழாவில் கலந்து கொண்டிருக்கிறேன். இது எனக்கு மிகவும் உவப்பாக உள்ளது.

பாரத நாட்டின் பண்பாட்டையும் சீலத்தையும் போற்றிப் பாதுகாத்து வளர்ப்பதற்குத் தமிழ்நாடு என்றும் துணையாக இருந்திருக்கிறது. தமிழ் மிகவும் தொன்மையான மொழி. உலகப்பெருமை வாய்ந்தது. தமிழ்நாடு முன்னேற்றப்பாதையில் சுடர் தாங்கி வேகத்துடன் வந்து கொண்டிருக்கிறது.

பல்வேறுபட்ட மக்களும், பல மாநிலத்தவர்களும் நம் நாட்டில் இருந்தாலும் எல்லாரும் ஒருவருக்கு ஒருவர் உதவுவதுடன் நாம் அனைவரும் ஒன்றுபட்ட மக்கள் என்ற உணர்வுடன் வாழ வழி வகுத்த கவிஞர்களில் முக்கியமானவர் மகாகவி பாரதியார்.

பாரதியார் பெருங்கவிஞர் - தத்துவவாதி-அறிவு நுட்பமிக்கவர் - தேசிய ஒருமைப்பாட்டு உணர்வை ஊட்டியவர். அவர் காலத்தில் ஒப்பிலாக் கவிஞராகத் திகழ்ந்தவர். விடுதலைப் போராட்டக் காலத்தில் அவர் ஆற்றிய தொண்டை மனிதாபிமானத்தோடு நினைத்துப் போற்றுகிறோம்.

பாரதியார் அறிவித்த கருத்துக்களை நினைத்து பாரதத்தேசம் இன்று தன்னை நெறிப்படுத்திக் கொள்கிறது. பாரதியாரின் தேச பக்தியும் தியாகமும் நிகரற்றது. அந்நிய ஆட்சிக்குச் சாவு மணியடிக்க சுப்பிரமணிய பாரதியாரும் மற்றவர்களும் அன்று பெரும்பாடுபட்டனர்.

பஞ்சாப் மாநிலம் கலை இலக்கியத்தை வளர்க்க விரும்புகிறது. பண்பாட்டை அதனால் தான் காப்பாற்ற முடியும். கலையின் உருவங்களாக தமிழ்நாட்டில் அமைந்துள்ள மதுரை, இராமேசுவரம், தஞ்சாவூர், மாமல்லபுரம் ஆகியவைகளைக் காணும்பொழுதும் தமிழ்மொழியைக் கேட்கும் பொழுதும் பெரும் மகிழ்ச்சி உண்டாகிறது.

தமிழ் மொழி பழமையான இலக்கிய வளங்கொண்ட மொழி



நம் நாட்டில் ஒருமொழியைத் தாய்மொழியாக கொண்ட மக்கள் இன்னொரு மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டும். இப்படி நம் நாட்டின் இன்னொரு மொழியைக் கற்றுக் கொண்டால் இந்திய ஒருமைப் பாட்டுக்கு மாபெரும் தொண்டாற்றியவர்களாவோம். பாரதியாரின் பாடல்கள் இந்திய ஒருமைப்பாட்டை வலியுறுத்தியவையாகும்.

பாரதியாரின் பாடல்கள் பஞ்சாப் மொழியில் மொழிபெயர்க்கப்படும். வீரம் செறிந்த பாரதியாரின் பாடல்கள் உலகப் புகழ் பெறத்தக்கவை. பாரதியாரின் பாடல்களைப் படித்து ஒவ்வொரு இந்தியனும் பெருமைப்பட வேண்டும். விடுதலைப் போராட்டக் காலத்தில் நம் நாட்டின் முன்னேற்றம்பற்றி திட்டமிட்ட கவிஞர் பாரதியார்.

பாரதியாரின் விழா 1982ஆம் ஆண்டில் பஞ்சாப் மாநிலத்தில் அரசு சார்பில் கொண்டாடப்படும். இளைய பாரத மக்கள் பாரதியாரை நன்கு கற்றுத் தேர்ந்துணர வேண்டும்.

பாரதியார் சிறிய காலம் தான் வாழ்ந்தார் என்றாலும் அவருடைய வாழ்க்கை மாண்பமைந்த வாழ்க்கையாக - பெருங்கடலாக இருந்தது. மனிதப் பண்புகளை வளர்க்கும் வாழ்க்கையாக அமைந்தது. அவருடைய வாழ்வில் சமுதாய நோக்குடன் எதையும் அணுகினார். திட்டமிட்டார்.

கீதையிலே கண்ணன் சொன்னதை எல்லாம் மொழிபெயர்த்து எடுத்துரைத்தார். வடமேற்கு இந்தியாவில் அமைந்துள்ள எங்கள் பஞ்சாப் மாநிலத்தைப் பற்றி எழுதினார். மக்கள் அனைவரும் ஒன்று என்பதை வலியுறுத்தினார்.

பாரதி சொன்னதை நனவாக்கும் வகையில் பண்பாட்டை வளர்க்க ஒவ்வொரு மாநிலத்தவரும் பரிவர்த்தனை செய்து கொள்ள வேண்டும். தேசீய ஒருமைப்பாட்டை வளர்க்க வேண்டும்.

தொலை தூரத்திலிருந்து வந்துள்ள நான் நாட்டுக்கு - மக்களுக்கு - ஒருமைப் பாட்டுக்கு அருந்தொண்டாற்றிய அந்த மகாகவியை வணங்கி மகிழ்கின்றேன்.

[எட்டயபுரம் மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழாவில் பாரதியார் திருஉருவச் சிலையை 11.12.81 அன்று திறந்துவைத்து ஆற்றிய உரையின் ஒருபகுதி.]

சோவியத் நாட்டில் பாரதியார் விழா

மகாகவி பாரதியார் போன்ற பெருங்கவிஞர்கள் ஒரு போதும் சாவதில்லை. அவருடைய போதனைகள் என்றும் நமக்குத் துணையிருப்பவை. எனவே, அவரும் நம்முடன் இருக்கிறார்.

மனிதன் சமநீதியுடன் வாழவேண்டும்-மனித உரிமைகள் காக்கப்பட வேண்டும் என்பதை உணர்த்திய மாபெருங் கவிஞர் பாரதியார். சோவியத் நாட்டுப் புரட்சியைப் பற்றி முதன் முதலில் பாடிய இந்தியக் கவிஞர் அவர்தான்.

பாரதியார் வாழ்ந்த காலத்தில் இதுபோன்ற மாபெரும் கூட்டத்தைச் சந்தித்திருக்க முடியாது. ஆனால், இன்று பெருந்திரளாகக் கூடி அவருக்கு அஞ்சலி செலுத்துகின்றோம்.

இந்த மகாகவியின் நூற்றாண்டு விழாவை சோவியத் நாடு மிகச் சிறப்புடன் கொண்டாடும். மகாகவி பாரதியாருக்கு என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்ய எங்கள் நாடு தயாராக இருக்கிறது.

[எட்டயபுரத்தில் நடைபெற்ற மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழாவில் ரஷ்ய மொழியில் எழுதப்பட்ட பாரதி நூல்களை மாண்புமிகு முதல்வரிடம் அளித்து சென்னையிலுள்ள சோவியத் நாட்டுத் துணைத் தூதுவர் திரு யூரி எஃப் ருனோவ் (YURI F. RUNOV) ஆற்றிய உரையிலிருந்து]

பாரதி வழியில் நடை போடுவோம்!

மேதகு கேரள ஆளுநா
திருமதி ஜோதி வெங்கடாசலம்

பாரதியின் கவிதைகள் மக்கள் உள்ளத்தில் உணர்ச்சியை ஊட்டின. அவற்றைப் பாடும்போதும் நினைக்கும்போதும் உள்ளத்தில் தனி உணர்ச்சி - உற்சாகம் ஏற்படுகிறது.

நாடு விடுதலை அடைய வேண்டும் என்று விரும்பிய கவிஞராக மட்டுமல்ல - தீர்க்கதரிசியாகவும் திகழ்ந்தார். பாரதி நாட்டு விடுதலை - ஜாதி ஒழிப்பு - பெண் சம உரிமை என்னும் 3 இலட்சியங்களை - குறிக்கோள்களை - அவர் மனத்தில் இருத்திப் பாடல்களைப் பாடினார்.

தியாகச் சுடராக விளங்கிய அவர் - அக்காலத்தில் பாராட்டப் படாததோடல்லாமல் - உயிரோடு இருந்த காலத்தில் எத்தனையோ கொடுமைகளையும் அனுபவித்து வந்திருக்கிறார். அதனால் நமது இதயங்களில் அழியா வண்ணம் நிலைத்து நிற்கிறார்.

ஆழ்ந்த தூக்கத்திலிருந்த தமிழர்களைத் தட்டி எழுப்பி - வெள்ளையர் ஆட்சியை ஒழிக்கப் போராடுவோம் என்ற ஆர்வத்தைக் கொடுத்தவர் பாரதியார். தமிழ்மக்கள் நெஞ்சங்களில் எல்லாம் அந்த உணர்வு நிலைத்து நிற்கப் பாடுபட்டார். எடு தலையை என்றாலும் விடுதலையை மறவேன் என்று கூறியவர். அதற்குப் பிரதி கைங்கர்யமாக இந்த விழாவினை நாம் கொண்டாடி வருகிறோம். நாம் எல்லாரும் அவர் வகுத்த வழியில் நடைபோட வேண்டும்.

—எட்டயபுரம் பாரதி நூற்றாண்டு விழாவில்.

வேற்றுமைகளைக் களைவோம்!

மாண்புமிகு கருநாடக முதல்வர்
திரு ஆர். குண்டுராவ்

பாரதியார் தமிழ்நாட்டுக்காக மட்டும் வாழ்ந்தவர் அல்ல. உலகத்துக்கு உரிய மாபெரும் கவிஞர். பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் பெரும் கஷ்டத்துக்கு ஆளானவர். இந்திய ஒற்றுமையை விரும்பினார். நாட்டு சுதந்தரத்துக்காக அரும்பாடுபட்டார். அவருடைய நினைவைப் போற்றும் வகையில் நாம் ஒற்றுமையாக இருக்கவேண்டும்.

மொழிப்பிரச்சினையே நமக்குப் பெரும் பிரச்சினை, ஆனால், பாரதியார் பலமொழிகளைக் கற்றுக் கொண்டார். நமக்குள் யானைக்கு நாமம் போடுவதில் கூடத்தகராறு செய்து கொள்கிறோம் இதற்காக சுப்ரீம் கோர்ட்டுக்குக்கூட போகிறோம்.

கோயில்களுக்காக நாம் செய்து கொள்ளும் தகராறுகளினால் ஒரு நீதிபதி தடை உத்தரவு போட்டால் கோயில்களில் நடக்க வேண்டிய பூஜைகள் கூட நின்றுவிடுகின்றன.

எப்பொழுதும் சாதிசண்டைகளில் ஈடுபட்டு வருகிறோம். இவர் இந்த சாதி அவர் அந்த சாதி என்று பேசுவதை விட்டுவிட வேண்டும்.

எம். ஜி. ஆரின் அதிர்ஷ்டம் அவர் முதலமைச்சராக இருக்கும் பொழுது பாரதியார் நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகிறது.

நான் முதலமைச்சராக இருக்கும் பொழுது கோமதிஸ்வரருக்கு 1000-வது ஆண்டு விழா வந்தது. இதற்கு குறை சொல்ல முடியுமா?

பாரதி விழாவில் கருநாடகத்தைச் சேர்ந்த நானும் கேரள ஆளுநரும், பஞ்சாப் முதல்வரும் பேசுகின்றோம். இப்படி எல்லா மாநிலத்தவரும் கட்சி வித்தியாசமில்லாது பாரதி விழாவில் பங்கேற்கிறோம்.

கட்சி வேற்றுமைகளை தேர்தல் நேரத்தில் வைத்துக்கொள்ளலாம். மக்களுக்கு நன்மை செய்வதில் ஒன்றுபட்டுப் பாடுபடுவோம்.

[எட்டயபுரம் பாரதி விழாவில் ஆற்றிய உரையில்]

புது நெறி காட்டிய புலவன்

மாண்புமிகு நிதியமைச்சர்

டாக்டர் நாவலர்

வள்ளுவரை உலகுக்குத் தந்ததால், வான் புகழ் கொண்டது தமிழ்நாடு என்றார் பாரதியார். அவரைத் தந்ததால் எட்டயபுரம் வான் புகழை பெற்றதாகிவிட்டது.

16ஆம் நூற்றாண்டு வரை இளசை என்ற பெயருடன் இருந்த எட்டயபுரம் கடிகை முத்துப் புலவர், உமறுப்புலவர் பாரதியார் போன்றவர்களைப் பெற்றெடுத்ததால் இன்று பெரும் சிறப்பைப் பெறுகிறது.

தமிழக அரசு நாட்டுக்காகப் பாடுபட்ட நல்லவர்களின் பிறந்த நாள் விழாக்களைக் கொண்டாடி தனது நன்றிக் கடனைச் செலுத்திக் கொண்டு வருகிறது. தமிழ் நாட்டுக்குப் பெருமை தேடித் தந்தவர்களைப் போற்றுவது நம் கடமை என்பதை உணர்ந்து தமிழக அரசு இதனைச் செய்து வருகிறது.

இதையே பாரதியாரும் விரும்பினார்; எழுபது ஆண்டுகளுக்கு முன்பே கூறினார்.

'தமிழ்நாட்டுக் கவிஞர்களுக்கும் லோகோபகாரிகளுக்கும், பூர்விக மகான்களுக்கும் விழா எடுக்க வேண்டும்; அவர்களின் புகழைப் பேணாத தேசத்தின் பெருமைகள் அழிந்து போகும்; கம்பன், இளங்கோ, திருவள்ளுவர் ஆகியோருக்கு விழா எடுக்கவேண்டும் என்ற பாரதியாரின் சிந்தனை அறிவார்ந்த சிந்தனை. அவரின் எண்ணங்களை ஈடேற்றி வருகிறோம். அவரே சிந்திக்க கற்றுக்கொடுத்தார். அப்படி சிந்திக்கத் தெரியாதவர்களைப் பார்த்து நெஞ்சு பொறுக்குதில்லையே என்று குமுறினார்.

பாரதியார் பாடல்களில் புதிய பாங்கைக் கொடுத்தார். சொல்லுக்குச் சொல் சுவை ஊட்டினார். பாரதியாரின் பாடல்கள் செவிடர்களைக் கேட்க வைத்தன. ஊமைகளைப் பேசவைத்தன. அந்த அளவுக்கு மக்களிடம் உணர்ச்சியை ஊட்டின,

தமிழைப் போன்ற மொழியில்லை என்பதை உலகுக்கு எடுத்து உரைத்தார். யாமறிந்த மொழிகளில் தமிழ்போல் இனிதாவது எங்கும் காணோம் என்றார். ஆங்கிலத்தை, சமஸ்கிருத மொழியை, பிரெஞ்சுமொழியை, ஓரளவு தெலுங்கு மொழியை உணர்ந்திருந்த பாரதியார் 'தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்' என்றார். தமிழுக்குள்ள தகுதி அனைத்தையும் எடுத்துச் சொன்னார்.

பாமரராய், விலங்குகளாய் வாழ்ந்தது போதும் என்று தமிழ் மக்களைத் தட்டி எழுப்பினார். ஒவ்வொரு வகையிலும் மக்களைச் சிந்திக்கத் தூண்டினார். ஒரு சொல் கேளீர் என்று மக்களை எழுச்சியுடன் விழிப்படையச் செய்தார்.

உலகத்துக்கு ஜீரோவைக் கற்பித்த நாடு நம் நாடு. வாரத்துக்கு ஏழு நாட்கள் என்பதைக் கற்பித்ததும் நம்நாடு. அப்படிப்பட்ட நாட்டில் ஆமைகளாய், ஊமைகளாய், கல்வியறிவு அற்ற மக்களாக வாழ்வது கண்டு மனங்குமுறினார் பாரதியார்.

எப்பொழுதுமே நிமிர்ந்து நில், குனிந்து நடக்காதே, நிமிர்ந்து நட என்பதை பாரதியார் வலியுறுத்தி வந்தார். நேர்மைத்திறனும் நெஞ்சுறுதியும் கொண்ட பாரதியார் எதற்கும் தலை வணங்காதவராக இருந்தார்.

பாரதிதாசன் அவர்கள் பாரதியாரைப் பற்றிச் சொல்லும்பொழுது சொல்வார்கள்! பாரதியாருக்கு உணவு பரிமாறினால் முன்பக்கம்போட வேண்டாம் என்றும்; பக்கத்திலே இலைபோடும்படி சொல்லுவாராம்! முன்னால் இலை போட்டால் பரிமாறுபவனுக்கு தலைவணங்கி, குனிந்து சாப்பிட வேண்டும். அதற்காக பக்கத்திலே இலைப் போடுங்கள் என்பாராம்.

ஜாதி பேதத்தை அடியோடு வெறுத்தார் பாரதியார். பிறப்பினால் ஒருவன் உயர்ந்தவன், மற்றவன் தாழ்ந்தவன் என்று சொல்வதை எதிர்த்தார். தனது பூணூலையையும் எடுத்து விட்டார். அன்றைக்கு ஆங்கில ஆட்சியில் அவரைத் தேடும் பொழுது போலீசாரே பாரதியாரை பூணூலை எடுத்துவிட்டார் என்று அடையாளம் சொல்லியிருந்தனர். அப்படி சாதிவேற்றுமைகளைக் களைய் வழிகாட்டியாகத் திகழ்ந்தார் பாரதியார்

ஷெல்லிதாசன், சக்திதாசன், காளிதாசன் என்ற பெயரில் கட்டுரைகளை எழுதினார்.

சிசரோவின் பேச்சு ரோம் நாட்டு நாகரிகத்தையும் பண்பாட்டையும் காத்தது என்பார்கள். அதுபோன்று பாரதியாருடைய எழுத்துக்கள் தமிழ்நாட்டு நாகரிகத்தையும் பண்பாட்டையும் கட்டிக்காத்தன.

பாரதிதாசன் கூறியதுபோல தமிழ்நாட்டுக்குப் புதுநெறி காட்டிய புலவன் பாரதி. அந்தப் புகழுக்குரிய பெருங்கவிஞனுக்கு விழா எடுத்து பெருமைப்படுத்துகிறது தமிழக அரசு.

பாரதியார் கண்ட கனவுகளை நிறைவேற்ற எல்லார்க்கும் கல்வி என்ற நிலையை நாம் உருவாக்க வேண்டும். அனைவருக்கும் அடிப்படைக் கல்வி என்ற நிலையை உருவாக்கி புதியதோர் உலகம் படைப்போம்.

காலம் தந்த வரம்!

மாண்புமிகு செய்தி
அறநிலையத்துறை அமைச்சர்

திரு இராம. வீரப்பன்

அவர்கள்

மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழாவைக் கொண்டாட 1976-ஆம் ஆண்டிலேயே திட்டமிடப்பட்டிருந்தது. அப்பொழுது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு இல்லை. ஆனால், காலத்தின் கட்டளை புரட்சித் தலைவர்- பொன்மனச் செம்மல் முதல்வராக இருந்து இந்த நூற்றாண்டு விழா சிறப்புடன் நடைபெறுகிறது.

இதனை இயற்கையின் கட்டளை என்றோ, ஆண்டவன் திருவருள் என்றோ அவரவர் நம்பிக்கைக்கு ஏற்ப ஏற்றுக் கொள்ளலாம். தமிழகத்திற்குப் புகழ் சேர்த்த தலைவர்கள். அறிஞர் பெருமக்களுடைய நூற்றாண்டு விழாக்களை நமது முதல்வர் அவர்கள் முன்னின்று கொண்டாடுகிறார்கள். தமிழகத்தில் பிறந்து, இந்தியத் துணைக் கண்டம் முழுமையும் பெருமைப்படும் அளவுக்கு அரும்பணி புரிந்த அந்தப் பெருமக்கள் அனைவரும் நினைந்து பாராட்டி மகிழ தக்க வகையில் இந்த விழாக்கள் நடைபெறுகின்றன.

நூற்றாண்டு விழாக் கொண்டாடும் நேரத்தில் பாரதிகண்ட கனவுகளை நனவாக்க வேண்டியது நமது கடமை. பாரதியார் எதிர்காலத்தில் நம்நாடு எப்படி இருக்க வேண்டும் என்று விரும்பிய மகாகவி ஆவார். விடுதலை பெற்ற நாட்டில் பாரத சமுதாயம் அமைந்திருக்க வேண்டிய முறையை அன்றே கனவாக கண்டார். இந்தியா முழுவதும் ஒரே நாடு என்ற ஒருமைப்பாட்டு உணர்வை வளர்த்தார். ஆகவே நமது முதல்வர் அவர்கள் பாரதி பிறந்த டிசம்பர் 11-ஆம் நாள் இந்திய ஒருமைப்பாட்டு நாளாகக் கொண்டாடப்படும் என்று அறிவித்தார்கள். ஒவ்வொரு ஆண்டும் பாரதி பிறந்த டிசம்பர் 11-ஆம் நாளை ஒவ்வொரு ஆண்டும் தேசிய ஒருமைப்பாடு நாளாக நாடெங்கும் கொண்டாடப்பட வேண்டும்.

தமிழ்ச் சமுதாயம் தேசியப் பற்று உடையது. தேசியப்பற்றுக்கு எதிரானதல்ல தாய்மொழி பற்று. தேசியப் பற்றுடையவர்கள் தமிழ்மொழியின் மீது பற்றுவைக்காததால் விடுதலை பெற்ற இந்தியாவில் பலதவறுகள் நேர்ந்தன. செப்பும் மொழி பதினெட்டு உடையாள் என்று இந்தியத் தாயை பாரதியார் பாடினார்.

பஞ்சாப் மொழியில் பாரதியார் பாடல்கள் மொழி பெயர்க்கப்படும் என்று பஞ்சாப் முதல்வர் அறிவித்தார். இந்திய ஒருமைப்பாட்டை உருவாக்க எல்லா மொழிகளிலும் பாரதியார்பாடல்கள் மொழிபெயர்க்கப்பட வேண்டும். நாடு முழுவதும் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பாரதியார் பாடல்கள் பாடமாக வைக்கப்பட வேண்டும்.

மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழாக்குழுத் தலைவர் டாக்டர் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. இங்கு வரவேற்புரை நிகழ்த்தவிருந்தார்கள். மருத்துவர்கள் அனுமதிக்காததால் சென்னை மருத்துவமனையில் உள்ள சிலம்புச் செல்வர் இங்கு வர இயலவில்லை. ஆனால், நமது முதல்வர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பியுள்ளார்கள்.

அக்கடிதத்தில், தமிழக அரசு பாரதியாருக்கு எடுத்த விழாவின் முதல்நாள் காட்சிகளை தொலைக் காட்சியில் பார்த்து பெரு மகிழ்ச்சி அடைந்தேன். பாரதியாரின் விருப்பங்களை தமிழ அரசு நிறைவேற்றி வருகிறது. பூனாவில் கார்வே என்ற அறிஞர் பெண்கள் பல்கலைக் கழகம் அமைத்ததை வரவேற்ற பாரதியார் அதுபோன்று தமிழ் நாட்டிலும் அமைக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். அவர் கனவை தமிழக அரசு நனவாக்கிக் காட்டுவது கண்டு அவர் ஆன்மா நிச்சயம் வாழ்த்தும் என்றும் குறிப்பிட்டு தமிழக அரசு பாரதியாரின் எண்ணங்களை ஈடேற்றி வருவதை எழுதியுள்ளார்கள்.

''75ஆண்டுகளுக்குமுன்பு பாரதியார் கண்ட பெண்கள் பல்கலைக் கழகத்தைப் புரட்சித் தலைவர் ஆட்சி தோற்றுவிக்கிறது. இது காலத்தின் கட்டாயம் என்றே சொல்ல வேண்டும். அந்த மகாகவிஞன் சொன்னதை—தாய்மொழி வளர்ச்சிக்காக தமிழுக்கு பல்கலைக் கழகம் காண வேண்டும் என்ற எண்ணத்தை-பெண் விடுதலையைப் பற்றி உணர்ச்சி பொங்க கூறிய கருத்துக்களை நிறைவேற்றியுள்ளது நமது முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றிருக்கும் இந்தக் காலம் தான். இதனை காலம் தந்த வரம் என்று சொல்லலாம் என்றும் சிலம்புச் செல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

பெரியார், அண்ணா, மூதறிஞர் ராஜாஜி, மகாகவி பாரதியார் ஆகியோரின் எண்ணங்களுக்கு செயல்வடிவம் கொடுத்து வருகிறார் நமது முதலமைச்சர். அந்த வகையில் பாரதியாரின் தந்தையார் அந்தக் காலத்திலேயே எட்டயபுரத்தில் ஜின்னிங் பாக்டரி வைத்து நடத்தினார்கள். அந்நியர் ஆட்சியின் கொடிய மனப் பான்மையால் அந்தத் தொழிற்கூடம் நசிந்து விட்டது. எனவே, பாரதியாரின் பெயரால் அவர் நூற்றாண்டு விழாக் கொண்டாடும் இந்த நேரத்தில் தமிழ்நாடு அரசு ரூ. 4 கோடி செலவில் நூற்பாலையை இங்கே அமைக்கவிருக்கிறது.

பாரதியைப் போன்று இவ்வூரில் பிறந்த உமறுப் புலவருக்கு நினைவுச் சின்னம் அமைக்கப்படும்.

இந்தப் பகுதிக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் அனைவரும் எட்டயபுரத்தைக் காண வேண்டும். பாரதி பிறந்த மண்ணைப்பார்க்க வேண்டும் என்ற நிலை உருவாக்கப்படும்.

[எட்டயபுரம் பாரதியார் நூற்றாண்டுத் தொடக்க விழா இறுதிநாளில் (13-12-81) ஆற்றிய வரவேற்புரையிலிருந்து].

பாட்டுப் புலவனின் நூற்றாண்டு விழா

தமிழ்க் கவிதை வானத்தில் விடிவெள்ளி எனத் திகழ்ந்தவர் பாரதி.

சுதந்தரப் போரின் தள நாயகனாக விளங்கியவர் பாரதி.

பெண்ணுரிமைக்கு வழிவகுத்து சமுதாயப் புரட்சியை உருவாக்கிய போர்க்கவி முரசு பாரதி.

பாட்டுத் திறத்தால் பாவலர்களையும் பாமரர்களையும் ஏக காலத்தில் கவர்ந்த மேதை பாரதி.

அவரது நூற்றாண்டை மிகச் சிறந்த முறையிலே கொண்டாடுவதற்கு முனைந்த தமிழக அரசு, தொடக்க விழாவை எட்டயபுரத்திலும் நிறைவு விழாவை சென்னையிலும் கொண்டாடுவது என முடிவு எடுத்ததற்கேற்ப, தொடக்க விழாவை டிசம்பர் 11, 12, 13 ஆகிய நாட்களில் எட்டையபுரத்தில் மிகச் சிறப்பாக-கோலாகலமாகக் கொண்டாடியது.

அந்தக் கவிதை வேந்தனுக்குப் பெருமை செய்வதற்கு அனைவரும் அணி திரண்டு வரவேண்டும் என்னும் பெரு நோக்கத்தின் காரணமாக டிசம்பர் 11ஆம் நாளை, மதுரை, இராமநாதபுரம், கன்னியாகுமரி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் உள்ளூர் விடுமுறை நாளாகவும் அதற்குப் பதிலாக 1982 ஜனவரி 9ஆம் தேதி (இரண்டாம் சனிக்கிழமை) பணிநாளாக இருக்கும் எனவும் அரசு அறிவித்திருந்தது.

சின்னஞ் சிறிய ஊர் எட்டயபுரம்; என்றாலும் புது யுகக் கவிஞன் பாரதியைப் பெற்றதால் பெருமை பெற்ற திருநகரமாக விளங்கியது அது.

ஊரெங்கும் எழுச்சிக்கோலம். மாகவிஞன் வாழ்ந்த காலத்தில் அவனை கவனிக்காது தவறிழைத்த தங்கள் முன்னோர்களின் செயலுக்குக் கழுவாய் தேடிக் கொள்வது போல எங்கு பார்த்தாலும் மக்கள் கூட்டம், அலை பாய்ந்து கொண்டிருந்தது.

எட்டையபுரத்திலிருந்து கோவில் பட்டிக்குச் செல்லும் வழியில் பாரதியின் மணி மண்டபத்துக்கு அருகில், ஏறக்குறைய ஒரு லட்சம் பேர் அமருவதற்குரிய வகையில் அமைக்கப்பட்டிருந்த மிகப் பெரிய பந்தலில் விழா நடைபெற்றது.

மேடையில் பாரதியின் கம்பீரமான உருவம்-அவரைச் சுற்றிலும் அவரது வாழ்வில் பங்கு கொண்டிருந்த பல்வேறு பெருமக்களின் ஓவியங்கள் இடம் பெற்றிருந்தன. மேடையைச் சுற்றிலும் பாரதியின் கவிதை வரிகளும் கருத்து முழக்கங்களும்

தமிழ்ப்பித்தன்

எழுதப் பெற்ற அட்டைகள் இடம் பெற்றிருந்தன.

வேதம் நிறைந்த தமிழ்நாடு—உயர்
வீரம் செறிந்த தமிழ்நாடு

பாரதநாடு பழம்பெரும் நாடு
நீரதன் புதல்வர் இந்நினைவகற்றாதீர்

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனிசிறந்தனவே

எல்லாரும் ஓர் நிறை
எல்லாரும் ஓர் விலை
எல்லாரும் இந்திய மக்கள்

இவை-மேடையைச் சுற்றி இடம் பெற்றிருந்த பாரதி கவிதை முழக்கங்களில் ஒரு சில!

பாரதியின் நினைவு மண்டபம் புதுக்கோலம் கண்டிருந்தது; மக்கள் ஆவலுடன் நுழைந்து தங்களின் நினைவு அஞ்சலியைச் செலுத்திக் கொண்டிருந்தனர். மண்டபத்தின் வலப்புற அறையில் மகாகவிபாரதி நூல் கண்காட்சி அரங்கம் இடம் பெற்றிருந்தது. பாரதி எழுதிய நூல்களும் அவரைக் குறித்துப் பிறர் எழுதிய நூல்களும் காட்சியில் வைக்கப்பட்டிருந்தன. பாரதி அன்பர் திரு சீனி விசுவநாதன்—டி. வி. எஸ். மணி இருவரும் மிகச் சிரமப்பட்டு அந்தத் தொகுப்புகளைச் சேர்த்திருந்தனர்.

மணிமண்டப வளாகத்தில் தமிழக அரசு உருவாக்கியிருந்த பொருட்காட்சி அனைவரையும் கவர்ந்து இழுத்தது. பொட்டல் காடாக இருந்த பகுதி புதுக்கோலம் கொண்டிருந்தது. பொருட்காட்சியில் பாரதியின் கவிதை வரிகளைக் காட்சியாக்கிப் பொது மக்களுக்குச் சிறந்த விருந்தாகப் படைத்திருந்தன. எல்லா அரங்குகளிலும் மக்கள் கியூ வரிசையில் நின்று கட்டுப்பாட்டுடன் சென்று, ரசித்துச் சென்ற காட்சி கிராமங்களும் நாகரிகம் பெற்றுவிட்டன என்பதைத் தெளிவுறுத்தியது.

முதல் நாளான டிசம்பர் 11 பிற்பகல் 4 மணியளவில் அரசுக் கலைஞர்கள் திரு எம். பி. என். சேதுராமன், திரு. எம். பி. என். பொன்னுச்சாமி ஆகியோரின் நாயன இசையுடனும் வலையபட்டி திரு சுப்ரமணியம் அவர்களின் தவில் முழக்கத்துடனும் விழா தொடங்கியது. நாயன மன்னர்கள் பெரும்பாலும் பாரதியின் பாடல்களையே குழலில் இசைத்து அனைவரின் இதயங்களிலும் மகிழ்ச்சி - அலையை உருவாக்கி விட்டார்கள்.



பாரதியார் பிறந்த இடத்தில்

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் டாக்டர் கா காளிமுத்து அவர்கள் அனைவரையும் வரவேற்று உரையாற்றினார். அவரது வரவேற்புரை- சங்கத்துப் புலவர்களின் செஞ்சொற் கவிதைபோல் - செந்தமிழ்த் தேனாறுபோல் இனித்தது.

'காலத்தால் மூத்த மொழி, ஞாலத்தில் சிறந்த மொழி' எனத் தொடங்கி தமிழ் மொழி குறித்து அவர் வருணித்த வருணனை இன்னும் நமது காதுகளில் ரீங்காரம் செய்து கொண்டிருக்கிறது.

மேதகு தமிழக ஆளுநர் திரு சாதிக் அலி அவர்கள் மேடையில் உள்ள பாரதியின் உருவப் படத்தைத் திறந்து வைத்து, தொடக்க விழாச் சொற்பொழிவை ஆங்கிலத்தில் ஆற்ற, அதனை மொழி பெயர்ப்புத் துறை இயக்குநர் டாக்டர் ஔவை நடராசன் அவர்கள் தமிழில் பெயர்த்தார்.

பாரதிக்குப் புகழ்மாலை சூட்டிய மேதகு ஆளுநர் அவர்கள் பாரதியின் நூற்றாண்டைச் சிறப்பாகக் கொண்டாடும் தமிழ் நாட்டு மக்களையும் மாண்புமிகு முதல்வர் அவர்களையும் பாராட்டினார்.

பின்னர், மகாகவி பாரதியாரின் திரு உருவச் சிலையை மாண்புமிகு பஞ்சாப் முதல்வர் திரு தர்பாராசிங் அவர்கள் திறந்து வைத்தார்.

பாரதியின் சிந்தனைகளைக் கொண்டு உருவாக்கப்பட்டிருந்த பொருட்காட்சியினை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

பின்னர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு சை. வே. சிட்டிபாபு, காந்தி கிராமப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் மு. அறம், மதுரை காமராஜர் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் வ. சுப. மாணிக்கம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மூன்று துணை வேந்தர்களும் பாவேந்தர் பாரதியின் கவிதைச் சிறப்பை— ஆழமாகவும் அகலமாகவும் விளக்கினர்.

பின்னர் பஞ்சாப் மாநில முதல்வர் திரு தர்பாரா சிங் உரையாற்றினார்.

பஞ்சாப் மாநிலம் 1982-ல் பாரதியாரின் நூற்றாண்டு விழா வைக் கொண்டாட இருக்கிறது என்றும் அதற்குத் தமிழக முதல்வர் உதவி செய்ய வேண்டும் என்றும் அவர் கூறியபோது அரங்கில் அமர்ந்திருந்த அத்தனை பேரும் அகமகிழ்ந்து கரஒலி எழுப்பினர்.

பின்னர், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், தலைமை- உரையை ஆற்றினார்கள். (உரை பிறிதோரிடத்தில் வெளியாகியுள்ளது).

மாண்புமிகு முதல்வர் அவர்களின் உரைக்குப் பின்னர் மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் திரு பி. எச். பாண்டியன் அவர்கள் நன்றியுரை கூறினார்.

கருத்து முழக்கங்கள் முடிவுற்ற பின்னர் இசை முழக்கமும் நடன முழக்கமும் தொடர்ந்தன. அரசுக் கலைஞர் கலைமாமணி டாக்டர் பால முரளி கிருஷ்ணா குழுவினர் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது. பின்னர் திருமதி வாணி கமலஹாசன் குழுவினரின் நடன நிகழ்ச்சியுடன் முதல் நாள் விழா இனிது நிறைவேறியது.

இரண்டாம் நாள் நிகழ்ச்சி 12.12.81 காலை 9 மணியளவில் அரசுக் கலைஞர் கலைமாமணி நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன் அவர்களின் நாயன இசையுடனும் அரசுக் கலைஞர் வலங்கைமான் சண்முக சுந்தரம் அவர்களின் தவில் முழக்கத்துடனும் தொடக்கம் ஆகியது.

அதற்குப் பின்னர், பாரதி யாரின் கொள்ளுப் பேரன் திரு ராஜ்குமார் குழுவினரின் இசை அரங்கு நடை பெற்றது. பாரதி யாரின் இடம்பெற்ற இந்த இசை அரங்கு அனைவரின் இதயங்களை யும் இசைவித்தது.

அன்றைய'இளைய பாரதம்'என் னும் நிகழ்ச்சிக்கு வந்திருந்தோர் அனைவரையும் டாக்டர் ஔவை து. நடராஜன் அவர்கள் வர வேற்று உரையாற்ற, தமிழக அரசின் தலைமைச் செயலர் திரு கா. திரவியம் அவர்கள் தொடக்க உரையாற்றினார்.

'ஒரு காலத்தில் இளைஞனாக இருந்தவன் என்ற முறையில் இந்த நிகழ்ச்சியில் பங்கு கொள் கிறேன்' என்று திரு கா. திரவி யம் அவர்கள் சொல்லியதை அவையினர் அனைவரும் மகிழ்ச்சி ஒலி எழுப்பி வரவேற்றார்கள்.

திரு வலம்புரி ஜான் அவர் களின், தலைமையில்'இளைஞர்கள் பங்கேற்ற 'இளையபாரதம்' என்னும் நிகழ்ச்சி நடைபெற்றது. இளைஞர்களின் பார்வையில் பாரதியார் எப்படிக் காட்சி யளிக்கிறார் என்பதை இந் நிகழ்ச்சி எடுத்துக் காட்டியது.

தலைமை தாங்கிய திரு. வலம் புரி ஜான் அவர்களின் உரை கவிதை ஆறாகவே பாய்ந்தது என்று சொன்னால் அது மிகை யாகாது. அவரது இசை மழை நின்றவுடன், அதற்குள் முடிந்து விட்டதே என ஏங்கிய ரசிகர் களை அந்த அரங்கில் காண முடிந்தது.

அடுத்து, கவிஞர் சுரதா அவர்கள் தலைமையில், 'கவிஞர் நோக்கில் பாரதி' என்னும் தலைப்பில் கவியரங்கம் நடை பெற்றது. கவிஞர்கள் திரு தொ. மு. சி. ரகுநாதன், திரு மோகனரங்கம், திரு பொன்னடி யான், புத்தனேரி திரு சுப்ர மணியம், திரு முருகு. சுந்தரம் அகியோர் பங்கு பெற்றனர்.

கவியரங்கத் தலைவர் திரு சுரதா, கிருட்டிணபாரதி, சுஸ்வர பாரதி-முத்துச்சாமி பாரதி, புதுவை குமார பாரதி, கோவிந்த பாரதி, குஞ்சர பாரதி, மதுர கவி பாரதி, கோபால கிருஷ்ண பாரதி, சோமசுந்தர பாரதி, சுப்ரமணிய பாரதி எனப் பாரதி பலர் இருந்தனர் என்றும் அவர் களில் சுப்ரமணிய பாரதியே பெரும் புகழ் பெற்றான் எனவும் அவன் ஆங்கில ஆட்சிக்குச் சனி யன் எனவும், குப்புற விழாத சுப்பிரமணியன் எனவும் கவிதை யில் மொழிந்து-அனைவரையும் வியப்பில் ஆழ்த்திவிட்டார்.

கவிஅரங்கைத் தொடர்ந்து புதுமையான முறையில் கவிதை வழக்காடு மன்றம் நிகழ்ந்தது. புதுயுகக் கவிஞன் பாரதியைப் பாராட்ட-அவனது நினைவைப் போற்ற-கவிதை வழக்காடு மன்றம் என்ற புதிய அமைப்பை உருவாக்கியது பாராட்டுக்குரிய தாகும்.

மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் துணைத் தலைவர் புலவர் புலமைப்பித்தன் அவர் களின் தலைமையில், 'பாரதியார் கவிதையில் விஞ்சி நிற்பது சமூக சீர்திருத்தமே' என்று கவிஞர் ஈரோடு தமிழன்பன் அவர்களும்-'அரசியல் எழுச்சியே' என்ற பொருளில் கவிஞர் வைரமுத்து

சுரதா

அவர்களும் தங்களது வழக்குரை களைத் தெரிவித்தனர்.

'சொல் புதிது, சுவை புதிது, பொருள் புதிது' என்று தெளி வுறுத்திய பாரதியைப் போற்றும் வகையிலே கவிதை வழக்காடு மன்றம் தமிழுக்கு ஒரு புதிய துறையாகத் தோன்றியது; பார் வையாளர் அனைவரையும் கவர்ந்தது.

திலகன் இட்ட தீயின் கொழுந்து
தாமர பரணித்தண்ணீரைச்
சுட்டது.
—என்றார் கவிஞர் வைரமுத்து.

சமுதாய வாழ்வே சாஸ்வத
மானது
அரசியல் என்பது முதன்மை
யானது
சமுதாயம் என்பது முக்கிய
மானது
புதிய சமுதாயத்திற்குப்
பதியம் போட்டவர் பாரதி
—என்றார் தமிழன்பன்.

இருவரின் வழக்குரைகளும் பார்வையாளர்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தின. என்றா லும் கவிஞர் ஈரோடு தமிழன்பன் அவர்களின் வழக்குரையில் அனு பவ முத்திரை காட்சி தந்தது. அவரது ஆணித்தரமான வழக் குரையை நடுவராகப் பொறுப் பேற்றிருந்த மேலவைத் துணைத் தலைவர் ஏற்றுக் கொண்டு, 'பாரதியார் கவிதையில் விஞ்சி யிருப்பது சமூக சீர்திருத்தமே' என்று தீர்ப்பு வழங்கினார். வழங்கிய தீர்ப்பில் எவருக்கும் மறுப்புக் கிடையாது என்பதை அங்கு எழுந்த கர ஒலி எடுத்துக் கூறியது.

பிற்பகல் 4 மணியளவில் பேரா சிரியை அ. ரா. இந்திரா அவர்கள் தலைமையில் 'மகளிர் நோக்கில் பாரதி' என்னும் கருத்தரங்கம் நடைபெற்றது. செல்வி ஜெய லலிதா, பேராசிரியை சரஸ்வதி ராமநாதன், பேராசிரியை இளம் பிறைமணிமாறன், பேராசிரியை இரா. காந்திமதி ஆகியோர் பங்கேற்றனர். பேராசிரியை சரஸ்வதி ராமநாதன் அவர்கள் அண்மையில் டாக்டர் பட்டம் பெற்றிருக்கிறார்கள் என்ற செய்தியை அந்த மேடையில் தெரிவித்தார் கருத்தரங்கின் தலைவர் அ.ரா. இந்திரா. அத் துடன் சரஸ்வதி ராமநாதன்

தொ. மு. சி. ரகுநாதன்


மோகனரங்கம்

பொன்னடியான்


புத்தனேரி சுப்ரமணியம்

முருகு. சுந்தரம்



அவர்கள், பாரதியாரின் பாடல்களை-வசனநடையில் ஒலிக்காமல், பாடலாகவே முழங்கி அன்னவரையும் ஈர்த்து விட்டார். அவரது குரலின் இனிமையும் வளமையும் ஏதோ ஓர் இசைக் கச்சேரியில் அமர்ந்து கேட்பது போன்ற ஒரு நிலையைப் பார்வையாளர்களிடம் ஏற்படுத்தி விட்டன.

தலைமை ஏற்ற அ.ரா. இந்திரா அவர்கள் நின்று கொள்ள ஒரு ஸ்டூல் போடப்பட்டதும் உடனே 'பெண்மை உயர்த்தப்படுகிறது' என்று அவர் சொல்ல, மேடையில் அமர்ந்திருந்த சரஸ்வதி ராமநாதன் அவர்கள் 'பெண்மை ஏற்றம் பெறுகிறது' என்று சொல்ல-அதைக் கேட்டு அவையினர் அனைவரும் ரசித்தனர்.

மாலை 7 மணியளவில் 'பாரதி சிந்தனை மேடை' என்னும் நிகழ்ச்சி தொடக்கமாகியது. வரவேற்புரையை திரு. மீ. ப. சோமசுந்தரம் அவர்கள் ஆற்ற, மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் தொடக்க உரையாற்றினார்.

அப்போது கையில் பையுடன் வந்து மேடையில் நின்று உரையாற்றத் தொடங்கிய அவர் 'மத்திய நிதி அமைச்சர் பையுடன் தான் வருவார்' என்று சொல்லிய படி பேச்சைத் தொடங்கி அனைவரிடத்திலும் கலகலப்பை உருவாக்கிவிட்டார். பாரதியின் கனவுகளை மாண்புமிகு தமிழக முதல்வர் நனவாக்கி வருகிறார் என்று அவர் குறிப்பிட்டபோது, அரங்கமே அதிர்ந்தது கர ஒலியினால்!

பின்னர் ஆந்திர மாநிலத்தின் கலாச்சார அமைச்சர் பட்டம் ஸ்ரீராமமூர்த்தி அவர்கள் ஆங்கிலத்தில் உரையாற்றினார்.

தமிழர்களும் தெலுங்கர்களும் பழங்காலத்தினர் என்று குறிப்பிட்டு, தமிழ்க் கவிஞர்களையும், தெலுங்கு இலக்கியக் கவிஞர்களையும் புகழ்ந்து பாராட்டினார்.

அவருக்குப் பின்னர் முன்னாள் தலைமை நீதிபதி டாக்டர் மு.மு. இஸ்மாயில் அவர்கள் பாரதி சிந்தனையின் அறிமுக உரையை ஆற்றினார்.

பின்னர், மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் தலைமையில் பாரதிக்கும் ஏனைய கவிஞர்களுக்கும் உள்ள தொடர்பு குறித்துக் கருத்தரங்கம் நடைபெற்றது. திரு நெ. து. சுந்தர வடிவேலு, திரு கம்பர் அடிப்பொடி, திருக்குறளார் திரு. வி. முனுசாமி, திரு. கு. இராஜவேலு, திரு பெ. கோ. சுந்தரராஜன், திரு சிலம்பொலி செல்லப்பன், திருமதி இராஜேஸ்வரி நடராஜன் ஆகியோர் பங்கேற்றனர்.

பாரதிக்கு முன்பு தோன்றிய கவிஞர்களுடன் பாரதியார் எவ்வாறு ஒன்றுபடுகிறார் என்பதையும் பாரதிக்குப் பின்வந்த கவிஞர்கள் பாரதியுடன் எவ்வாறு ஒன்றுபடுகின்றனர் என்பதையும் சிந்தனை மேடை அலசிப் பார்த்தது, சுவையாக இருந்தது.

பின்னர் ,அரசுக் கலைஞர் செல்வி அலர்மேல்வள்ளி அவர்களின் நடன நிகழ்ச்சியும், அரசுக்கலைஞர் சீர்காழி திரு எஸ். கோவிந்தராஜன் அவர்களின் இன்னிசை நிகழ்ச்சியும் நடைபெற்றன. கலைமாமணி எஸ்.வி. சகஸ்ரநாமம் குழுவினரின் 'மானிடத்தின் மகாகவி' என்னும் நாடகத்துடன் இரண்டாம் நாள் விழா சிறப்புற முடிவடைந்தது.

மூன்றாம் நாளான டிசம்பர் 13 காலை 9 மணி அளவில் தமிழக அரசு இசைக் கல்லூரி மாணவர்கள் பாரதி இசை நிகழ்ச்சி நடத்தினர்.

பின்னர் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் டாக்டர் கா.காளிமுத்து அவர்களின் தலைமையில் பாரதி ஆய்வரங்கம் என்னும் நிகழ்ச்சி நடைபெற்றது. டாக்டர் மா. நன்னன் அவர்கள் வரவேற்புரையாற்ற, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் வா.செ. குழந்தைசாமி அவர்கள் தொடக்கவுரைநிகழ்த்த வாகீச கலாநிதி திரு. கி.வா. ஜகந்நாதன் அவர்கள் பாரதி ஆய்வரங்கத்தின் அறிமுக உரையாற்றினார்.

தலைமை ஏற்ற மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், ''இந் நிகழ்ச்சியில், என் ஆசிரியர்களும் ஆசிரியர்களுக்கு ஆசிரியர்களும் பங்கேற்கிறார்கள்'' என்று அறிவித்தபோது அனைவரும் வியப்படைந்தார்கள். எந்நோற்றான் கொல் எனும் சொல் தந்தைகளுக்கு மட்டும் உரியதல்ல, ஆசிரியர்களுக்கும் உரியது என்ற எண்ணமே எல்லாருக்கும் ஏற்பட்டிருந்தது.

திரு அகிலன், திரு ஆலடி அருணா, திரு நா.பார்த்தசாரதி, திருமதி சௌந்தரா கைலாசம் திரு. பழ. கருப்பையா, டாக்டர் கா. மீனாட்சி சுந்தரம், கவிஞர் கா.மு. ஷெரீப், டாக்டர் சு.பாலசந்தர், திரு சுகி. சிவம், பேராசிரியர் சாலமன் பாப்பையா, திரு. தா. பாண்டியன் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

டாக்டர் பாலசந்தர் அவர்கள் பாஞ்சாலி சபதம் குறித்து உரையாற்றுகையில் மணி பிற்பகல் 2.05. ஆனாலும், இடையிடையே இசை மழை பொழிந்து நாடக பாணியில் கால், கரங்களை அசைத்து உரையாற்றிய விதத்தால் மக்களைக் கட்டுப்பட வைத்தார். அவரை அறிமுகம் செய்யும் போதே மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள், ''எனது ஆசிரியர் இவர்; இவர் பாட்டுப்பாடி நடனம் ஆட மூன்று மணிநேரம்கூடப்போதாது ஆனால் தற்போது நேரம் அதிகமாகிவிட்டமை கருதி விரைவில் முடித்துக் கொள்ள வேண்டும்'' என்று வேண்டுகோள் விடுத்தார். கதா காலட்சேப பாணியைக் கைக்கொண்ட போதிலும் வேண்டுகோளை வீணாக்காமலும் அவையினருக்குப் பெருமகிழ்ச்சியை ஊட்டும் வகையிலும் பதினைந்து நிமிடங்களில் தமது உரையை முடித்தார். அவருக்குப் பின்னர் மூவர் பேசினர்; அவர்களும் மிகச் சிரமப்பட்டு அவை

யினரைக் கட்டுப்படுத்தினர். காரணம் அப்போது மணி 3 !

பிற்பகல் 4 மணி அளவில் பல்வேறு கட்சியினரும் பங்குபெற்ற 'பாரதிக்கு அரசியல் தலைவர்கள் அஞ்சலி' நிகழ்ச்சி நடைபெற்றது. மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை ஏற்க, மாண்புமிகு கைத்தறி, பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எஸ்.என். இராஜேந்திரன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

திரு பாலசுப்ரமணியம் (தமிழரசுக் கழகம்), திரு. பொ.விஜய ராகவன் எம்.எல்.ஏ. (தமிழ்நாடு ஜனதா), திரு. ஜனா கிருஷ்ண மூர்த்தி (பாரதீய ஜனதா), திரு

தொடக்க விழாவின் இறுதி நிகழ்ச்சி - சரியாக 7.15 மணிக்குத் தொடங்கியது. மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் டாக்டர் ம.பொ. சிவஞானம் அவர்கள் வரவேற்புரை ஆற்றுவதாக இருந்தது. மருத்துவர்களின் கண்டிப்பான கட்டுப்பாட்டின் காரணமாக அவர் வர இயலவில்லை

மாண்புமிகுசெய்தி அறநிலையத் துறை அமைச்சர் திரு. இராம வீரப்பன் அவர்கள் வரவேற்புரையை ஆற்றினார். அத்துடன் சிலம்புச் செல்வர் அவர்கள் பாரதி விழாவின் முதல்நாள் நிகழ்ச்சியை சென்னை தொலைக் காட்சியில் பார்த்து மகிழ்ந்து, விழாவை வாழ்த்தி மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தை மாண்புமிகு செய்தி

புலவரின் நினைவு மண்டபத்தை எட்டயபுரத்தில் உருவாக்க அரசு திட்டமிட்டிருக்கிறது. அது குறித்த அறிமுக உரையை மாண்புமிகு பாசனத்துறை அமைச்சர் திரு கா. இராசா முகமது. அவர்கள் ஆற்றினார்.

பின்னர், எட்டயபுரத்தில் அமையவிருக்கும் பாரதி கலைக் கூடத்திற்குரிய அடிக்கல்லை, மேதகு கேரள ஆளுநர் திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்களும், பாரதி நூற்பாலைக்குரிய அடிக்கல்லை மாண்புமிகு கர்நாடக முதல்வர் திரு ஆர்.குண்டு ராவ் அவர்களும், உமறுப்புலவர் நினைவு மண்டபம், பாரதியார் நூற்றாண்டு நினைவு வளைவு ஆகியவற்றிற்குரிய அடிக்கல்லை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் நாட்டினர்.



...ன்னீர்ச் செல்வம் (கிறிஸ்துவ ஜனநாயக முன்னணி), திரு தஞ்சை இராமமூர்த்தி (தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ்), திரு செங்கம் ஜப்பார் (முற்போக்கு முஸ்லீம் லீக்), திரு மாணிக்கம் (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி), திரு எஸ். என். சோமயாஜுலு (தமிழ்நாடு சுதந்தரப் போராட்ட வீரர்கள் சங்கம்), திருவாரூர் கே. தங்கராசு (திராவிடக் கழகம்), திரு ஜீ. மூர்த்தி எம்.எல்.ஏ. (தமிழ்நாடு குடியரசுக் கட்சி), திரு எஸ். ஆண்டித் தேவர் எம்.எல்.ஏ. (அகில இந்திய பார்வர்டு பிளாக்), திரு குமரி ஆனந்தன் எம்.எல்.ஏ., (காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ்), திரு என் சங்கரய்யா எம்.எல்.ஏ. (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி-மார்க்சிஸ்ட்), திரு எம்.பி. சுப்பிரமணியம் (தமிழ்நாடு இந்திய தேசிய காங்கிரஸ்), திரு. ப.உ. சண்முகம் (அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்) ஆகியோர் பங்குபெற்று, பாரதிக்கு அஞ்சலி செலுத்தினர். ஏறக்குறைய பதினான்கு பேர் பங்கு பெற்றிருந்த போதிலும் நிகழ்ச்சி சரியாக 7.10க்கு முடிவுற்றது குறிப்பிடத்தக்கது.

அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் படித்தார்கள். பல்லாயிரக் கணக்கில் கூடியிருந்த மக்கள் அனைவரும் அதனை மிகவும் வரவேற்று, கையொலி எழுப்பினர்.

பாரதியாரின் பெயரால் எட்டயபுரத்தில் நிறுவப்பட இருக்கும் நூற்பாலைத் திட்டத்தின் அறிமுக உரையை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் நிகழ்த்தினார்.

எட்டயபுரத்தில் வாழ்ந்த இஸ்லாமியப் புலவரான உமறுப்

ஐந்தாம் உலகத் தமிழ்மாநாட்டின் ஆய்வுக் கட்டுரைகளின் 3 தொகுதிகளை மாண்புமிகு கல்வி அமைச்சர் செ. அரங்கநாயகம் அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் வழங்கினார். அவற்றில் 2 தொகுதிகள் ஆங்கிலக் கட்டுரைகள், ஒரு தொகுதி தமிழ்க் கட்டுரைகள். தொகுதிகளை வழங்கிவிட்டு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் உரையாற்றினார். பாரதியின் பாடல்களின் ரஷ்ய மொழிபெயர்ப்பு நூலின் பிரதி ஒன்றினை ரஷ்ய தூதுவர் அகத்தின் துணைத்தூதுவர் திரு யூரி எப்ரோவோ அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் வழங்கி, உரையாற்றினார். அவரது உரை எழுச்சி மிக்கதாக இருந்தது. ஆங்கிலத்தில்தான் அவர் உரை ஆற்றினார், என்றாலும் அது எளிதாகப் புரிந்தது.

''பாரதி எங்கள் நாட்டில் எழுந்த புரட்சியைக் குறித்து முதன் முதலில் பாராட்டி எழுதிய மாபெரும் கவிஞன். அவன் மறையவில்லை. நம்மோடு வாழ்கிறான்; நம்மோடு பேசுகிறான்''

பாரதி மணிமண்டபக்குழு உறுப்பினர் திரு. கே. பி. எஸ் நாராயணன் நினைவுப்பரிசு பெறுகிறார்.



மணிமண்டபத்திலுள்ள குத்து விளக்குகள் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் வழங்கப்படுகின்றன.

என்று அவர் குறிப்பிட்டதைக கேட்டு, லட்சோப லட்ச மக்களும் உடல் சிலிர்த்தனர். 'காக்கை குருவி எங்கள் சாதி' என்று பெருந்தன்மையுடன் சொன்ன பாரதியை, ரஷ்ய நாட்டவர் சொந்தக்காரர் என்று கொண்டாடியதில் வியப்பில்லை என்பது புரிந்தது.

அவருக்குப் பின்னர் சென்னை பாரதி சங்கத்தின் தலைவர் திரு நா. மகாலிங்கம் அவர்கள் உரையாற்றினார். பற்பல திட்டங்களைச் சுட்டிக் காண்பித்து அவற்றை அரசு நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

பின்னர் முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் சிறப்புரையாற்றினார். அப்போது அவர் குறிப்பிட்ட ஒரு செய்தி நமது. கண்களில் கண்ணீரை வரவழைத்தது. பாரதியார் அவர்களை, சுதேசமித்திரன் அலுவலகத்தில் சந்தித்த நிகழ்ச்சியை அவர் தெரிவித்தார். திருவல்லிக் கேணியில் வசித்து வந்த பாரதியார் சுதேச-மித்திரன் அலுவலகத்துக்கு வேர்க்க விறுவிறுக்க நடந்து வந்தாராம். அந்தக் காட்சியைப் பார்த்து மனம் கலங்கிய கி. ஆ. பெ. அவர்கள் 'டிராமில் வந்தால் என்ன, அல்லது பஸ்ஸில் வந்தால் என்ன என்று கேட்டாராம். அதற்கு, ''காசு வேண்டுமே!'' என்று மூன்று முறை வருத்தத்துடனும் கவலையுடனும் தெரிவித்தாராம் பாரதி. இந்தச் செய்தியை கி. ஆ. பெ. அவர்கள் சொல்லியபோது அரங்கில் அமர்ந்திருந்த மக்களில் பலரும் 'உச்சுக் கொட்டினர். பாரதியின் அந்நாளைய வாழ்க்கையை கி. ஆ. பெ. அவர்கள் படம் பிடித்துக் காட்டிவிட்டார். பாரதியைச் சந்தித்தவர் என்ற பெருமை அவருக்கு உண்டு என்பதை மட்டுமல்ல. அந்தக் காலத்திலேயே பாரதியாரை மதித்து, பயமின்றி அவரைச் சந்தித்திருக்கிறார் என்பதையும் அந்த நிகழ்ச்சி நமக்கு எடுத்துச் சொல்லக்கூடியதாக அமைந்துள்ளது. தமது 'உரையின் முடிவில் தமிழுக்குத் தொண்டு செய்தோன் சாவதில்லை' என்ற பாவேந்தரின் வரிகளை அவர் நினைவு கூர்ந்தார். அது, ரசிக்கத் தக்கதாக இருந்தது.

பின்னர் முன்னாள் முதல்வர் திரு எம். பக்தவத்சலம் அவர்கள் உரையாற்றினார். நெல்லைச் சீமையின் தனிச்சிறப்பை எடுத்துரைத்த அவர், பாரதியின் நூற்றாண்டு விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடிவரும் மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பாராட்டினார்.

பின்னர், திரு கல்பனாத்ராய் எம்பி., ஆங்கிலத்தில் உரையாற்றினார். உரத்த குரலில், உணர்ச்சி வெள்ளத்தில் அவர் உரையாற்றினார். பெண்களுக்கெனத் தனிப் பல்கலைக் கழகம் தொடங்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பெரிதும் பாராட்டினார். அவரது ஆங்கில உரையை திரு மீ. ப. சோமசுந்தரம் அவர்கள் தமிழில் பெயர்த்துச் சொன்னார். முன்னதாக அரங்கத்தில் பார்வையாளர் வரிசையில் அமர்ந்திருந்த பொழுது, வருகை புரிந்திருந்த மனிதக் கடலின் எழுச்சியைக் கண்டுவியந்து இருக்கையைவிட்டு எழுந்து இரண்டொரு முறை, பந்தல் முழுதையும் பிரமிப்புடன் அவர் பார்த்தது குறிப்பிடத் தக்கது.

அடுத்து, மாண்புமிகு கர்நாடக முதல்வர் திரு ஆர். குண்டுராவ் அவர்கள் உரையாற்றினார்.

''உங்கள் தமிழில் பேசவா, எனக்குத் தெரிந்த தமிழில் பேசவா'' என்று அவையினரைப் பார்த்து அவர் கேட்டபோது, 'உங்கள் தமிழிலேயே பேசுங்கள்' என்று அவையினர் தெரிவிக்க, அவர் உரையைத் தொடங்கினார். இலக்கியத் தமிழில் அவர் பேச வில்லை என்றாலும் இனிய தமிழில் பேசினார். அனைவரின் உள்ளத்தையும் கவர்ந்துவிட்டார். இடையிடையே ஆங்கிலத்தில் ஓரிரு வாக்கியங்களை அவர் பேசினார். இந்திய நாட்டில் எல்லாத் தலைவர்களும் குறிப்பாகத் தென்னத்தில் உள்ள தலைவர்கள் இது போன்ற விழாக்களில் அரசியலை மறந்து ஒன்றுபட்டுப் பங்கேற்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டது - அனைவரின் உள்ளத்தைத் தொடுவதாக அமைந்தது.

பின்னர், மேதகு கேரள ஆளுநர் திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் உரையாற்றினார். பாரதியாரின் பெரும் புகழ் குறித்து அரிய உரை ஆற்றிய அவர், மாண்புமிகு கருநாடக முதல்வர் அவர்களின் வருகை குறித்து மகிழ்ந்ததுடன் ''அப்பா நீ வந்தது பெரிய காரியம்'' கொஞ்சம் தண்ணீரை எங்கள் பக்கம் திருப்பி விடு'' என்று கேட்டுக் கொண்டார்-தாம் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர் என்ற முறையில்!

பின்னர்,

அரசுக்கலைஞர்களாக நியமிக்கப் பெற்றுள்ள குரலிசைக் கலைஞர்கள் திருமதி எம். எல். வசந்தகுமாரி, திரு சீர்காழி எஸ். கோவிந்தராஜன், நரம்பிசைக் கலைஞர் திரு கோவிந்தசாமி நாயக்கர், முழவிசைக் கலைஞர்கள் திரு ஏ. கண்ணன், திரு கே. சிவராமன், வீணை இசைக் கலை



ஞர் திரு சி.சிட்டிபாபு, நாயன இசைக் கலைஞர்கள் திரு எம்.பி. என். சேதுராமன், திரு. எம்.பி. என். பொன்னுசாமி, தவிலிசைக் கலைஞர் திரு வலையபட்டி ஆ. சுப்ரமணியம், புல்லாங்குழலிசை கலைஞர் திரு என். வீரமணி, கிளாரிநெட் இசைக் கலைஞர் திரு ஏ.கே. சி. நடராஜன், ஆடற் கலைஞர் செல்வி அலர்மேல் வள்ளி, இளம் கலைஞர்களான நாயன இசைக்கலைஞர்கள் டி.கே எஸ். சுவாமிநாதன், டி.கே.எஸ். மீனாட்சி சுந்தரம், தவில் கலைஞர் அரித்துவார மங்கலம் திரு ஏ.கே. பழனிவேல் ஆகியோருக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் விருது வழங்கிச் சிறப்பித்தார், பாரதியின் இளவல் திரு சி.விசுவநாத ஐயர் அவர்களைச் சிறப்பித்து நினைவுப் பரிசு வழங்கினார்.

விருது பெற்ற கலைஞர்கட்கும் விழாவில் கலந்து கொண்டோர் அனைவருக்கும் பாரதியின் உருவப்படம் பொறித்த தஞ்சைத் தட்டு வழங்கப்பட்டது, குறிப்பிடத்தக்கது,

எட்டயபுரத்தில் உள்ள பாரதி மணி மண்டபத்தை நிருவகித்து வந்த குழுவினர், அதன் உரிமத்தைத் தமிழக அரசுக்கு மாற்றித் தருவதற்குரிய ஆவணங்களை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் வழங்கினர்.

இரவு 10 மணியளவில் விழா நிறைவுரையைத் தொடங்கினார் மாண்புமிகு முதல்வர் அவர்கள். (உரை பிறிதோரிடத்தில் வெளியாகியுள்ளது). ஏறக்குறைய 2 மணி நேரம் சிறப்புரையாற்றினார். முதல்நாள் விழாவின் போது உரையாற்றுகையில் 13 ஆம் தேதி சில திட்டங்களை அறிவிக்க இருக்கிறேன் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதற்கு இணங்க, பல்வேறு பயன்மிகு திட்டங்களை அறிவித்தபோது. தமிழ்ப பெருமக்கள் அனைவரும் உள்ளம் மகிழ்ந்து உற்சாகக்குரல் எழுப்பி வரவேற்றார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் இரண்டு அரிய உண்மைகளை எடுத்துரைத்தார்.

'இரத்தத்தின் இரத்தமான அன்பு உடன் பிறப்புககளே என்று ஒவ்வொரு மேடையிலும் தாம் அழைக்கும் வழக்கத்தைச் கைக்கொண்டு வருவதற்குரிய காரணத்தை விளக்கிச் சொன்னார்.

''மாண்புமிகு கர்நாடக முதல்வர் திரு ஆர். குண்டுராவ் அவர்கள் நான் நடித்த சர்வாதிகாரி படத்தைப் பார்த்த பின்புதான் அரசியலில் பங்கேற்றதாக என்னிடம் குறிப்பிட்டார்கள்!'—இவ்வாறு மாண்புமிகு தமிழக முதல்வர் தெரிவித்தார்.

முதல்வர் அவர்களின் நிறைவுரைக்குப் பின்னர், செய்தி, சுற்றுலா, மற்றும் பண்பாட்டுத் துறையின் ஆணையர் மற்றும் செயலாளர் திரு ப.பா. கிருஷ்ணசாமி அவர்கள் நன்றியுரை நவின்றார்.

அதன் பின்னர்,.. பாரதியாரின் பேத்தி செல்வி ரமா அவர்களின் நடன நிகழ்ச்சியும் அரசுக் கலைஞர் கலைமாமணி மதுரை திரு எஸ். சோமசுந்தரம் அவர்களின் இன்னிசை நிகழ்ச்சியும், செல்வி சுவர்ணமுகியின் நடன நிகழ்ச்சியும் நடைபெற்றன.

பாரதியின் நூற்றாண்டுத் தொடக்க விழா முத்தமிழ்போல மூன்று நாட்கள் சிறப்பாக நடைபெற்று, முத்திரை பதித்துவிட்டது; மாண்புமிகு முதல்வர் அவர்கள் முழங்கியது போல தேசிய ஒருமைப்பாட்டு நாள் தான் பாரதியின் பிறந்தநாள் என்பதை உலகுக்கு எடுத்துரைத்தது.

பஞ்சாப் முதல்வர் - கர்நாடக முதல்வர் -ஆந்திர கலாச்சார அமைச்சர் - கேரள ஆளுநர்- சோவியத் நாட்டு தூதரகத்தின் துணைத் தூதுவர் ஆகியோர் பங்கு பெற்ற பாரதி விழா ஒருமைப்பாட்டு விழாவாகத் திகழ்ந்ததில் வியப்பேதும் இல்லை!

எட்டயபுரத்தில் ஈடில்லாப் பொருட்காட்சி

மாமூலன்



ஊருக்கு நல்லது சொல்வேன்.
எனக்(கு)
உண்மை தெரிந்து சொல்வேன்

—என்று பாருக்குச் சொன்ன பாட்டுக்கொரு புலவன் பாடிய பாடல்கள் - கண்ட கனவுகள். காட்சியாகப் பாரதியின் மாட்சியைப் பறை சாற்றிக் கொண்டிருந்தது எட்டயபுரத்தில் பாரதி நூற்றாண்டு விழாவையொட்டி அமைக்கப்பட்டிருந்த பொருட்காட்சி.

அங்கு பாரதி கண்ட கனவுகள்—

நனவாகியிருக்கிறதை நாட்டுக்கு எடுத்துரைத்த அந்தப் பொருட்காட்சி பாரதி மணி மண்டபம் அமைந்திருந்த இடத்தின் பக்கத்திலேயே அமைக்கப்பட்டிருந்தது.

இப்பொழுது தமிழ்நாடு அரசு ஏற்றுக் கொண்டிருந்தபாரதி மண்டபம் ரூபாய் இரண்டரை லட்சம் செலவில் புதுப்பிக்கப் பட்டிருந்தது. அழகிய அந்த மண்டபத்தினுள் நுழைகிறோம். முதலில் நம்மை வரவேற்பது போல் பிரம்பு தட்டிமீது வரையப்பட்டிருந்த பாரதியாரின் வண்ண ஓவியம் காட்சியளித்தது. அந்தக் கம்பீரமான ஓவியம் நம் கருத்தைக் கவரும் நேரத்தில், உள்ளே நுழையும் நமக்கு இடப் பக்கம் உள்ள மகாகவி பாரதியார் நூல் காட்சியரங்கம் நம் கண்ணில் படுகிறது.

இவ்வரிய நூல் காட்சியரங்கத்தை உருவாக்கி வைத்திருந்தவர்கள் மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா குழு உறுப்பினர்களும் பாரதி அன்பர்களுமான திரு சீனி விசுவநாதன், திரு டி. எஸ். மணி ஆகியோர்.

மொத்தம் 356 புத்தகங்கள் இக்காட்சியரங்கத்தில் வைக்கப் பட்டிருந்தன. பாரதியார் எழுதிய படைப்பிலக்கியங்கள் 50 இதில் வைக்கப்பட்டிருந்தன. பாரதி நூல்களை அடியொற்றி எழுதப் பட்ட 150 நூல்களும் விமரிசன நோக்கில் எழுதப்பட்ட 150 நூல்களும் வைக்கப்பட்டிருந்தன.

பாரதியார் அச்சிட்டு வெளியிட்ட (1908-ல்) ஸ்வதேச கீதங்கள் என்ற நூல் - இரண்டொரு அணா விலை உடையது.

1917-ல் பரலி சு. நெல்லையப்பர் வெளியிட்ட 'கண்ணன் பாட்டு' செல்லம்மாள் பாரதியால் வெளியிடப்பட்டு 1922ல் பிரிட்டிஷ் அரசு தடைசெய்த பாரதியார் நூல்கள் இரண்டும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தவைகளில் மிகவும் அருமையானவை.

ஜகதீச சந்திர போஸ் எழுதிய நூலை பாரதியார் மொழி பெயர்த்து 'ஜீவவாக்கு' என்ற தலைப்பில் 1918ல் வெளியாகியிருந்த நூல் வைக்கப்பட்டிருந்தது.

பாரதியாரின் முதல் கவிதை-அச்சில் வெளிவராதது. இங்கே காட்சி பொருளாக வைக்கப்பட்டிருந்தது.

24.1.1897ல் பாரதியார் இளசை சுப்பிரமணியன் என்ற பெயரில் எழுதிய கவிதையும் இங்கு பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது. இவ்வரிய பொருள்களைச் சீனி விசுவநாதனுக்குக் கொடுத்து உதவியர் பாரதியாரின் இளவல் விசுவநாத ஐயர் ஆவார்.

இதுவரை எந்த நூலிலும் வெளிவராத மார்க்கண்டய்யர் பாடல் என்ற பாடல் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது.

பாரதியாரின் கடைசி நாட்கள் பற்றி பரலி சு. நெல்லையப்பர் எழுதிய கட்டுரை அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது. அதில் பாரதியார் மறைவின் பொழுது இடுகாட்டில் சுரேந்திரநாத் ஆரியா தெலுங்கில் பேசியதுப் பற்றியும் குறிப்பிடப்பட்டிருந்தது. இதனை எதிரொலி விசுவநாதன் கொடுத்து உதவியுள்ளார்.

தமிழ் வளர்ப்பு வேண்டுகோள்





இளைய தலைமுறையினர் புதிய எழுச்சி பெற்றிட

மகாகவி பாரதியாரின் பாடல்கள் தாய் நாட்டுப் பற்றை ஊட்டின. விடுதலைப் போராட்டக் காலத்தில் புதிய எழுச்சியைத் தந்து உதவின. இந்திய ஒருமைப் பாட்டு உணர்வை வளர்த்தன. பண்பாட்டைப் பேணிக் காத்தன.

தீண்டாமையைப் போக்கிடப் பெருந்துணையாக அமைந்தன. அவருடைய பாடல்கள் இயற்கையானவை; எளிமையானவை. நம்முடைய நாட்டின் இளைய தலைமுறையினர் புதிய எழுச்சி பெற்றிட பாரதியாரின் பாடல்களைப் பயில வேண்டும்.

பாரதியாரின் பாடல்கள் மொழிபெயர்க்கப்பட்டு மற்ற மொழியினரும் அவைகளைக் கற்க வேண்டும்.

திரு பட்டம் ஸ்ரீராமமூர்த்தி

ஆந்திர மாநில கலாச்சாரத்துறை அமைச்சர்.

என்று தமிழ் வளர்ப்புப் பண்ணை 'என்ற பெயரில் கவியரசர் பாரதியார் வெளியிட்ட வேண்டுகோளும் இங்கே காட்சி பொருளாக வைக்கப்பட்டிருந்தன. கடலூர் சிறையில் பாரதியார் வைக்கப்பட்டிருந்ததற்கான ஆவணத்தின் நகலும் வைககப்பட்டிருந்தது.

பாரதியார் பற்றிய அறிவுச் செல்வங்கள் அங்கு குவிக்கப்பட்டிருந்தன. ஆராய்ச்சியாளர்களுக்கு மட்டும் அரிய விருந்தல்ல இக் காட்சியரங்கம். 75 ஆண்டுகளாக வெளியாகியுள்ள நூல்களை ஒரு சேர காண்பது பொது மக்களுக்கும் மகிழ்வூட்டுவதாகும்.

மணி மண்டபத்தின் பின்பக்கமாகப் பொருட்காட்சிக்குச் செல்கின்றோம்.

தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறை, வனத் துறை, கல்வித்துறை, தொழில் துறை, ஆதிதிராவிடர் சமூக நலத்துறை வேளாண்மைத்துறை ஆகியவை இடம் பெற்றிருந்த இந்தப் பொருட்காட்சி, அரங்குகள் விடுதலை பெற்ற இந்தியாவில் பாரதியின் கனவுகள் நனவாகிய காட்சிகளை நம் கண் முன்னே கொண்டு வந்து நிறுத்தின.

முதலில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் அரங்கத்திற்குச் செல்லுகிறோம். முகப்பில் பாரத தேசத்தின் படம், இந்திய ஒருமைப்பாட்டை எடுத்துக் காட்டும் வகையில் அமைக்கப்பட்டிருந்தது.

செய்தி மக்கள் தொடர்பு அரங்கத்தில் உள்ளே பாரதியின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் புகைப்படங்கள் வைக்கப்பட்டிருந்தன. அரிய புகைப்படங்களின் தொகுப்பு இக் காட்சியரங்கில் வைக்கப்பட்டிருந்தன.

இவ்வரங்கில் எல்லாரையும் கவர்ந்தது 5 நிமிட அளவில் நிகழ்ந்த ஒலி, ஒளி காட்சி. இக் காட்சியில் சிந்துமிசை நிலவினிலே, காணி நிலம் வேண்டும், சாதிகள் இல்லையடி பாப்பா, உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் - ஆகியபாடல்களும் 'ஆங்கிலேயன் ஒரு தேச பக்தனுக்கு கூறுவது' என்ற தலைப்பில் (வ.உ.சி. விஞ்சுதுரை உரையாடல் பற்றிய பாடல்) பாரதியார் எழுதிய பாடலும் இடம் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

'பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்' என்பதை எடுத்துக்காட்டியது கல்வித் துறை அரங்கம். நெல்லை மாவட்டத்து மேல்நிலைப் பள்ளிகளும் பிற கல்வி நிறுவனங்களும் இக் காட்சியரங்கில் பங்கேற்றிருந்தன. பாரதியாரின் 'புகிய ஆத்தி



இதயத்தில் நிலையாக இருப்பார்

பாரதியார் விடுதலை கேட்டார். அரசியல் விடுதலையை மட்டுமல்ல, சமூக விடுதலையையும் கேட்டார்.

'உள்ளத்தில் உண்மை உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்' என்றார் பாரதியார்.

'மண்ணில் தெரியுது வானம் -அது
வசப்பட லாகாதோ' என்று கேட்டார்.

அவர் வாழ்க்கைக் கவிஞர். சிலர் அவரை பக்திக் கவிஞர் எனச் சொல்லியதுண்டு. அவரை வேதாந்தக் கவிஞர் என்று குறிப்பிட்டவர்களும் உண்டு. அவரது வேதாந்தம் வறட்டு வேதாந்தம் அல்ல. இம்மையில் நன்மை கிடைக்க வேண்டும் என்பதுதான் அவரது வேதாந்தம்.

அவர் காதல் கவி. கடமைக் கவி. இன்று நம் கண் எதிரே சிலையாக நிற்கும் அவர், என்றும் நமது இதயத்தில் நிலையாக இருப்பது உறுதி.



கா. திரவியம், (தலைமைச் செயலர், தமிழ்நாடு அரசு)

திரு சீனி விசுவநாதன்.

திரு டி. வி. எஸ். மணி

கூடி இங்கு ஒலிபரப்புப்பட்ட முறை எல்லாரையும் மிகவும் கவர்ந்தது.

இரண்டு குழந்தைகள் பாடம் பயில்வதுபோல புதிய ஆத்திசூடி இங்கு ஒலிபரப்பப்பட்டது.

'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம். என்பதை வேளாண்மைத் துறை காட்சியரங்கம் காட்டியது. 'காடு வளர்ப்போம் நல்ல கலைகள் வளர்ப்போம் என்பதை வனத் துறை அரங்கம் காட்டியது. 'பெண்மை வாழ்க வென்று கூத்திடுவோமடா' என்பதை சமூக நலத்துறை அரங்கம் காட்டியது.

'உலகத் தொழிலனைத்தும் உவந்து செய்வோம்' என்ற பாரதி வாக்கினை அழகுற விளக்கிய தொழில்துறை அரங்கம். 'இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே - யந்திரங்கள் வகுத்திடுவீரே' என்பதை மட்டுமல்ல, 'மண்ணெடுத்து குடம் செய்வீரே என்பதை காட்சியாக்கிக் காட்டியது தொழில் துறை அரங்கம்.

இப்பொருட்காட்சி பாரதியின் கனவுகளை - எண்ணங்களை நம் கண்முன்னே நிறுத்தியது. எட்டயபுரத்தில் நிகழ்ந்த பாரதி நூற்றாண்டு விழாவைக் காண வந்தோர் இப் பொருட்காட்சியைக் கண்டனர்.

பாரதியின் எண்ணங்களை ஈடேற்றிக் காட்டிய காட்சிகளைக் கண்டோர் தமிழ்நாடு முழுவதும் இக்காட்சிகளைக்காண வேண்டும். ஏன்? இந்தியா முழுவதும் காண வேண்டும் என்று எண்ணியதில் வியப்பில்லை.

கடந்த நூற்றாண்டில் பிறந்த கவிஞர் இந்த நூற்றாண்டைப் பற்றி கண்ட கனவுகள்-எண்ணிய எண்ணங்கள் ஒரு மாபெரும் தீர்க்கதரிசி மகாகவி பாரதியார் என்பதை உலகுக்கு உணர்த்தும் வகையில் இருந்தது - எட்டயபுரத்தில் அமைக்கப்பட்டிருந்த பாரதியார் நூற்றாண்டு விழாப் பொருட்காட்சி.



அப்பொருட் காட்சியிலிருந்து வெளிவரும் பொழுது இதனை ''ஏன் உலாவரும் பொருட்காட்சியாக ஆக்கக்கூடாது'' என்ற எண்ணம் நம்முள்ளத்தில் எழும் ஆசை நியாயமானதே!

பாரதியால் தமிழக அரசு பெருமை பெற்றதும் தமிழக அரசால் பாரதி பெருமை பெற்றதும்



பாரதியாரின் நூற்றாண்டு விழாவைத் தகுந்த முறையில் நடத்தச் சிறந்த நடவடிக்கைகளைத் தமிழக முதல்வர் எடுத்திருக்கிறார்.

—மேதகு தமிழக ஆளுநர்
திரு சாதிக் அலி

ஆயுதம் செய்வோம்; நல்ல காகிதம் செய்வோம் என்பன போன்ற பாரதியாரின் கனவுகளைத் தமிழக முதல்வர் நனவுகளாக்கிச் செயல்படுத்தி வருகிறார்.

—மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர்
திரு. ஆர். வெங்கட்ராமன்

நாட்டில் அழிவு சக்திகள் தலைதூக்கப் பார்க்கும் நேரத்தில் தேசியகவி பாரதியாரின் நூற்றாண்டு விழாவை சிறப்பாகக் கொண்டாடுவது மகிழ்ச்சி தருகிறது.

—மாண்புமிகு பஞ்சாப் முதல்வர்
திரு தர்பாரா சிங்

எம். ஜி. ஆர். தமிழகத்தின் முதல்வராக இருப்பதால் தான் பாரதி நூற்றாண்டுவிழா சிறப்பாக நடைபெறுகிறது.

—மாண்புமிகு கர்நாடக முதல்வர்
திரு குண்டுராவ்

பெண்களுக்கென்று ஆசியாவிலேயே தனிப் பல்கலைக்கழகம் கிடையாது. தமிழகத்தில் முதன் முதலாக அத்தகைய பல்கலைக் கழகம் காண முன்வந்துள்ள தமிழக முதல்வர் அனைவரின் பாராட்டுக்கும் உரியவர்.

—அகில இந்திய இந்திரா காங்கிரஸ்
பொதுச் செயலாளர்
திரு கல்பனாத்ராய், எம். பி.



எதனையும் தமிழக மக்களுக்குப் பயன் தரும்வகையில் செய்து முடிக்கும் ஆற்றல் படைத்தவர் நமது முதல்வர் எம். ஜி. ஆர். அவர்கள்.

—முன்னாள் முதல்வர்
திரு பக்தவத்சலம்

தமிழகத்தில் எத்தனையோ முதல்வர்கள் இருந்தார்கள். ஆனால் எவரும் பாரதியார் விழாவை இவ்வளவு சிறப்பாகக் கொண்டாடவில்லை. அதுமட்டுமல்ல ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டினை மதுரையில் நடத்தினார். தஞ்சையில் தமிழுக்குப் பல்கலைக் கழகம் கண்டார். அவர் தமிழ்ச் சமுதாயத்திற்கு ஆற்றியுள்ள பணியினைத் தமிழ் கூறும் நல்லுலகம் என்றைக்கும் மறக்காது.

—முத்தமிழ்க் காவலர்
திரு கி. ஆ. பெ. விசுவநாதம்



கடந்த 2, 3 ஆண்டுகளாகத் தமிழுக்கு நல்லகாலம் பிறந்திருக்கிறது. நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தொண்டினால், தஞ்சையில் தமிழ்ப்பல்கலைக் கழகம் தோன்றியுள்ளது. தமிழ் அறிஞர்கள் பலருக்கு நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகிறது.

மதுரை காமராஜர் பல்கலைக் கழகத் துணைவேந்தர்
திரு வ. சுப. மாணிக்கம்

மகளிர் நோக்கில் பாரதி

நிகழ்ச்சித் தொகுப்பு :- தமிழ்ப்பித்தன்.

பாட்டுப் புலவன் பாரதி மகளிர் விடுதலை, மகளிர் கல்வி போன்றவற்றை மிகவும் ஆதரித்தவன். அதனை நினைவு கூறும்வகையில் எட்டயபுரத்தில் நடைபெற்ற பாரதி நூற்றாண்டு விழாவின் 2ஆம் நாள் பிற்பகல் நிகழ்ச்சியில், 'மகளிர் நோக்கில் பாரதி' என்னும் கருத்தரங்கம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

தலைமை தாங்கிய பேரசிரியை **திருமதி அ. ரா. இந்திரா** குறிப்பிட்டார்.

''பாரதி லட்சியக் கனவு கண்டார்; அதற்கு எவ்வளவு ஆற்றல் இருக்கிறது, எவ்வளவு வேகம் இருக்கிறது, எவ்வளவு ஒளி இருக்கிறது என்பதை நம்மால் உணரமுடிகிறது.

பாரதியின் பாடல் தமிழ் மக்களை எட்ட வேண்டும் என்று அந்த நாட்களில் பாடுபட்ட தலைவர்கள்—அறிஞர்கள் ஆகியோரின் நினைவு நமக்கு இந்த நேரத்தில் தோன்றுகிறது.

பாரதியின் லட்சியக் கனவு பற்றி எழுச்சியுடன் பேச—நம் அனைவருக்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தந்த தமிழக அரசையும், இந்த விழாவை மிகச் சிறந்த விழாவாக தமிழ்நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்தும் முதல்வரும் பாராட்டுக்குரியவர்கள்.

மாதர் முன்னேற்றத்திற்காக இந்திய நாட்டில் பாடுபட்டவர்கள் ராஜாராம் மோகன்ராய்-அன்னிபெசன்ட்-சகோதரி நிவேதிதா ஆகியோர் ஆவர். பாரதி அவர்களுக்கெல்லாம் ஒருபடி முன் சென்று நிற்கிறார்.

பாரதி எல்லா வகையிலும் நமக்குத் தலைவராக விளங்குகிறார். பெண்கள் சமுதாயத்தின் வளர்ச்சிபற்றிப் பல புலவர்கள் பேசினார்கள். பேசினால் மட்டும் போதாது. அந்தக் காலத்தில் எப்படியும் வாழலாம் என்ற நிலையும், இப்படித்தான் வாழவேண்டும் என்ற நிலையும் இருந்தன.

பெண்களின் ஸ்தூல வாழ்க்கையில் ஏற்படும் இடர்ப்பாடுகள் அவற்றால் ஏற்படும் சமுதாயச் சீர்கேடுகள் -புரையோடிக் கிடக்கின்றன. அவற்றைக்குற்றம் ,குறை இல்லாது தீர்க்க வேண்டும் என்று அவர் துடித்தார்.

எல்லையற்ற அழகும் எல்லையற்ற ஆனந்தமும் பெண்ணிடம் இருக்கின்றது என்பதை ஞானரதத்தில் காண்கிறோம். அவரது கதை, கட்டுரை, கவிதை ஆகியவற்றில் பெண்மையும் பெண் உரிமையும், எழுச்சியும், பெண் விடுதலையும் அழகாக இடம் பெறுகின்றன. சில கருத்துக்கள் முரண்போலத் தோன்றும்.

பெண்கள் விடுதலை பெற வேண்டும்; வீறு கொண்டு எழவேண்டும்; எழுச்சி பெற வேண்டும் என்று கூறுகிறார் பாரதி. இன்று தோன்றி நாளை மறையும் என்றிருக்கும் கைவிளக்காக இருக்கக்கூடாது. பெண்கல்வி என்றும் சொல்கிறார்.

பாரதியார் என்றும் அமரராக இருக்கிறார். அமரர் என்றால் சாகாவரம் பெற்றவர் என்றும் உயிருடன் இருப்பவர் என்று பொருள். அவர் அமரர்தான்! அவரது பாடல்கள் சாகாவரம் பெற்றவைதான்.!

பெண் என்றால் குனிந்த தலை நிமிராதவள் - பூமியை நேராகப் பார்த்து வருபவள்—இப்படிப்பட்ட பண்புதான் இந்தியப்பெண்களுக்கு வேண்டும் என்று சொல்லி, பெண் இனத்தை அடக்கி வைத்திருந்தனர். அதற்கு நேர் மாறாக, பாரதி, 'நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும் திமிர்ந்த ஞானச் செருக்கும் உடையவள் பெண்' என்று எடுத்துரைத்தார்.

'பெண் விடுதலை' என்ற தலைப்பில் உரையாற்றிய **செல்வி ஜெயலலிதா** குறிப்பிட்டார்:

பாரதியைப் பற்றி நினைக்கும்போது யாருக்கும் அவர் அஞ்சா நெஞ்சம் உடையவர்

என்பதுதான் நினைவுக்கு வரும். காலனுககே சவால்விடும் மன உறுதி அவரிடம் இருந்தது.

பெண்களைத் தெய்வமாகப் போற்றும் இந்த நாட்டில் பாரதியார் காலம் வரை எந்தப் புலவரும் பெண்களின் முன்னேற்றத் திற்காகக் கவிதைகள் எழுதவில்லை.

உலகத்தைப் புண்ணிய பூமி ஆக்குவதற் குரிய. தெய்வப் பிறவிகள் பெண்கள் என்று பாரதியார் கூறியுள்ளார்.

பெண்கள் தான் நரகம். பெண்களைவிட நரகம் இல்லை என்று எழுதினார் ஆங்கில எழுத்தாளர் ஜான் பிலிட்சர்.

தூக்குக் கயிறு, துப்பாக்கிக் குண்டு, விஷ மாத்திரைகளில் இருந்து கூடத் தப்பித்துக் கொள்ளலாம். ஆனால் பெண்களைத் தீண்டி னால் தப்பிக்க முடியாது என்று கூறினார் ஆங்கிலக் கவிஞர் ஜான்கே.

ஆனால் பெண்களுக்குச் சம உரிமை வழங்கிட வேண்டும், பெண்களின் உயர்வுக்கு வழி வகுக்க வேண்டும் என்று அந்தக் காலத் திலேயே துணிச்சலுடன் பயம் இன்றிப் பாடிய ஒரே கவிஞர் மகாகவி பாரதி.

பாரதியார், ''மகாசக்திதான் பெண்' என்றார். காதல் செய்யும் மனைவியைச்சக்தி என்றே கூறினார்.

'காதலினால் சாகாமல் இருத்தல் கூடும் என்று சொல்கிறார் பாரதியார்.

பெண்கள் இரண்டாந்தர பிரஜைகள்—அடிமைகள் என்று கருதுபவர் எத்தனையோ பேர் இக்காலத்திலும் வாழ்ந்து வருகிறார்கள். ஆண்களுக்குக் களிப்பூட்டுவதைத் தவிர, பெண்களுக்கு வேறு பணி கிடையாது என இன்றும் பலர் கருதிவருகிறார்கள்.

பாரதியார் பெண் விடுதலைக்கு அடித் தளம் அமைத்தார். பெண் விடுதலைக்குத் தூண்டுகோலாக விளங்கினார். பெண் விடு தலைப் போராட்டத்தில் முக்கிய போராட்ட வீரராகத் திகழ்ந்தார்.

கற்பெனப் படுவது சொற்றவறாமை என்றனர் முன்னோர். 'கற்புநிலை என்று சொல்ல வந்தால் இரு கட்சிக்கு மஃதைப் பொதுவில் வைப்போம்' என்றார் பாரதியார். தவறான பாதையில் திசை திருப்ப முடியா மல், பண்புகெட்டு நடக்கலாம் என்று அவர் கூறவில்லை. ஒருவனுக்கு ஒருத்தி என்ற மரபை விட்டு அவர் விலகிச்செல்லவே இல்லை.

''விதவை மறுமணத்தைப் போற்று கிறார் பாரதியார். கட்டுரைகள் பலவற்றை எழுதி 'பெண்ணை உயர்வு செய்திருக்கிறார். தையலை உயர்வுசெய்' என்று புதிய ஆத்தி சூடியில் தெரிவித்துள்ளார். பெண்கள் பிள்ளை பெறுவதற்கும் அடுப்பங்கரையில் பணி புரி வதற்கும் தான் உகந்தவள் என்ற கருத்தை மாற்றினார்.

ஆண் வயலில் - பெண் அடுப்பங்கரையில்
ஆண் போர் வாளை எடு.

பெண் தையல் இயந்திரத்தில் பணிபுரிய
ஆண் ஆணையிட — பெண் கீழ்ப்படிய

என்னும் நிலைதான் பல்லாண்டுக் காலமாக இருந்து வருகிறது.

நமது இந்திய நாட்டுப் பெண்கவி சரோ ஜினிதேவி, திருமதி சன்யாட் சென், திருமதி ரூஸ்வெல்ட் ஆகிய பெண்கள் எல்லாம் பெரும் புகழ் எய்திய பெண்மணிகளாவர். இந்தியா விடுதலையடைவதற்கு முன்னர், 1929ல் இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டின் தலை வராக கவியரசி சரோஜினிதேவி தேர்ந்தெடுக் கப்பெற்றிருந்தார் என்றால், இது சாதாரண மல்ல. இவற்றிற்கெல்லாம் பாரதியின் பெண் உயர்வுக் கொள்கை காரணமாக இருந்திருக் கிறது.

அடுத்து, '**பெண் கல்வி**' என்னும் தலைப் பில் உரையாற்றிய **பேராசிரியை சரஸ்வதி ராமநாதன்** குறிப்பிட்டார்.

''பாரதி அற்புதமான இலட்சியக் கன வைக் கண்டான். அத்தனையும் நமக்காக-அதாவது பெண் இனத்துக்காக. பெண் இனத் துக்கு விடுதலையைத் தேடித்தந்தான். பிற நாடுகளுக்கும் விடுதலையை வாங்கித்தரும் அற்புதத்தை அவன் கவிதை செய்தது.

''பாரதிக்கு முன்பு பெண்கல்வியைப் பற்றி யாரும் நினைக்கவில்லையா, என்றால் நினைத்திருக்கின்றனர். பெண்மை போற்றப் பட்ட காலமும் உண்டு; காக்கைப் பாடினியா யார், வெள்ளிவீதியார், நச்செள்ளையார் போன்று எத்தனையோ பெண்பாற் புல வர்கள் தமிழகத்தில் இருந்திருக்கின்றனர். இடைக் காலத்தில் அவர்கள் அடிமைகளாக நடத்தப்பட்டனர்.

''பெண்கள் எல்லாத் துறையிலும் ஆண் களுக்குச் சரி சமமாக விளங்கவேண்டும் என்று பாரதியார் கருதினார்.

மண்ணுக்குள்ளே சில மூடர்
மாதர் அறிவைக் கெடுத்தார்—என்று ஆடவரைச் சாடிய வீரக் கவிஞர் பாரதி தானே பெண்டிற்க்காகக் குரல் கொடுத்தார்?

''பெண் இனம் உலக அறிவுபெறவேண் டும். கல்வி இல்லை என்றால் மிக விரைவில் பெண் ஏமாற்றப்படுவாள். தமக்கு ஆபத்து வருகிறதை எண்ணி அவர்கள் அதனைக்

களைவதற்குரிய அறிவு பெற வேண்டும். மூட நம்பிக்கை எதுவென அறியப் பெண்ணுக்கு கல்வி அறிவு தேவை''.

அடுத்து **'பெண்ணுரிமை'** என்னும் தலைப்பில் உரையாற்றிய **இளம்பிறை மணி-மாறன்** குறிப்பிட்டார்.

''மானிட உணர்வுக்குப் புத்துயிர்அளித்த பெருமை பாரதியைச் சேரும்.

காரைக்காலம்மையார், திலகவதியார், ஆண்டாள் போன்ற மாதர் திலகங்கள் இந்த நாட்டில் பிறந்திருக்கிறார்கள். அவர்களுக்கும் முற்பட்ட காலத்தில் வெள்ளி வீதியார், நச்செள்ளையார், ஔவையார் போன்ற பெண் திலகங்கள் தோன்றியிருக்கிறார்கள்.

'பெண்ணறிவு என்பது பெரும் பேதமைத்தே' என்றும் 'பேதமை என்பது மாதர்க்கணிகலம்' என்றும், 'அடுப்பூதும் பெண்ணுக்குப் படிப்பு எதற்கு' என்றும் 'ஆலகால விஷத்தை நம்பலாம், ஆனால் சேலைகட்டிய மாதரை நம்பினால் தெருவில் நின்று தியங்கித் தவிப்பரே,! என்றும், 'பேய் கொண்டாலும் கொள்ளலாம், பெண் கொள்ளலாகாதே' என்றும், 'பெண்ணாகி வந்ததொரு மாயப் பிசாசு' என்றும் இடைக்காலப் புலவர்கள் கருதிவந்த நேரத்தில் பாரதிப் புலவர் உதய பானு எனத் தோன்றினார்.

நாடு வேறு, பெண்வேறு என்று பாரதி நினைக்கவில்லை. நாட்டை, பாரத மாதா என்றே பாடுகிறான். தெய்வம் வேறு பெண் வேறு அல்ல, என்றும் பாடுகிறான். பெண் உரிமைபற்றி வலியுறுத்துவதற்காகவே பாஞ்சாலி சபதம் எனும் காவியத்தைப் பாடியிருக்கிறான். அதில் தருமபுத்திரனை பீமன் சாடுவதாகப்பாரதி பாடியிருக்கிறான்—பெண் உரிமையைப் போற்றுவதற்காகவே அவ்வாறு பாடினான்.

இன்று சமுதாயத்தில் பெண்களின் நிலை மோசமாக உள்ளது. சமுதாயத்தில் வாழும் மனிதர்களின் மனோ தர்மம் மாறும்வரை பெண் விடுதலை ஏற்பட்டுவிட முடியாது. **அந்த நிலை என்றைக்கு வருகிறதோ அன்றுதான் உண்மையான பெண் விடுதலை மலர முடியும்**

அடுத்து, **'பெண் எழுச்சி'** என்னும் தலைப்பில் உரையாற்றிய **பேராசிரியை இரா. காந்திமதி** குறிப்பிட்டார்

''கல்விக்குரியவள் கலைமகள் என்றும் செல்வத்துக்குரியவள் திருமகள் என்றும் வீரத்துக்குரியவள் பராசக்தி என்றும் கருதப்பட்டு வந்த இந்த நாட்டிலே எப்படியோ பெண்கள் என்றால் கேவலமாகக் கருதப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டது.

''பெண்கள் எழுச்சி பெறவேண்டும் என்று பாரதிக் கவிஞன் முனைப்புடன் கூறினான். அதற்காகப் பல்வேறு கனவுகள் கண்டான். அவன் கண்ட கனவு ஒருபகுதி நிறைவேறியுள்ளது. ஆனால் நாம் முழுமையாக வெற்றி பெற்றுவிடவில்லை.

''பெண்கள் வெளியே சென்று அலுவலகங்களில் பணியாற்றிவிட்டு வீட்டுக்கு வந்தால் அங்கே நாம் அடிமைகளாக வாழ்கிறோம்— பணியாளைப் போல வாழ்க்கை நடத்துகிறோம்.

'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்' என்று பாடினார் பாரதி. அந்தக் காலம் வர வேண்டுமென்றால் இயற்கையாகவே பெண் எழுச்சி வரவேண்டும். இரண்டு கண்களில் ஒன்று பெண் என்ற உணர்வு சமுதாயத்தில் உள்ள அனைவரிடமும் காணப்பட வேண்டும். அப்போதுதான் பாரதியின் ஆன்மா முழுதுமாக மகிழ்ச்சியுறும் கல்வி அறிவிலும் உரிமைகளிலும் சம உணர்வு பெற்று முழு உரிமை பெற வேண்டும் பெண்கள்; சமுதாயத்தில் நாம் சமபங்குக்கு உரியவர்கள் என்ற உணர்வு இந்த நாட்களில் பெண்களுக்கே இல்லாதிருக்கிறதே! ஒவ்வொரு வீட்டிலும் பெண்கள் இது குறித்துச் சிந்தித்து முடிவு எடுக்க வேண்டும்.''

பின்னர், தலைமை வகித்த பேராசிரியை திருமதி அ. ரா. இந்திரா அவர்களின் முடிப்புரையுடன் முடிவுற்ற கருத்தரங்கம், அங்கு அணி திரண்டு வந்திருந்த அனைத்து மக்களின் இதயத்திலும் தக்க வகையில் இடம் பெற்றது; அனைவரின் பாராட்டையும் மிக எளிதில் பெற்றுக்கொண்டது. மறு நாள் நிகழ்ச்சியில் பங்குபெற்ற மாண்புமிகு முதல்வர் அவர்களின் பாராட்டையும் பெற்றது; கருத்தரங்கில் பங்கு பெற்றவர்களின் உரைகளை அவர் எடுத்துக்காட்டிப் பாராட்டியதுடன், அதில் பங்குபெற்ற பெண்டிர் அனைவரும் வருங்காலத்தில் இதுபோன்ற கருத்தரங்குகளில் பங்கு பெறவேண்டும் என்ற **வேண்டுகோளையும் விடுக்கச் செய்தது.**



மாண்புமிகு நிதிஅமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 15.12.81 அன்று செங்கல்பட்டு மாவட்டம், பாட்டைக்குப்பத்தில் மீனவர் குடியிருப்பினைத் திறந்துவைத்து, மீனவர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார்.

படமும் செய்தியும்



வீரமிக்க முறையில் மெச்சத் தகுந்த வகையில் கடமை உணர்வுடன் பணியாற்றியமைக்காகவும் போற்றத்தக்க வகையில் சேவை செய்ததற்காகவும் குடியரசுத் தலைவர் காவல் பதக்கம் 21.12.81 அன்று மேதகு ஆளுநர் திரு சாதிக்அலி அவர்களால் காவல் துறையினருக்கு வழங்கப்பட்டது.





செங்கல்பட்டு மாவட்டம் எல்லாபுரம் ஒன்றியத்திலுள்ள ஆத்துப்பாக்கத்தில் குடிநீர்த் திட்டத்தினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்கள் 17.12.81 அன்று திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் 15.12.81 அன்று சென்னை மாநகராட்சி 78-வது கோட்ட அலுவலகக் கட்டடத்தினைத் திறந்து வைத்தார்கள்.



பாரதியின் பார்வை

டாக்டர் மு. அறம்

துணை வேந்தர்,
காந்தி கிராமப் பல்கலைக்கழகம்.

கவியரசர் பாரதியார் பார்த்த பார்வையை நான் ஒரு சதுரப் பார்வையாக நோக்குகிறேன். அந்தச் சதுரப் பார்வைக்கு நான்கு பக்கங்கள் உண்டு.

முதல் பக்கம் - தாய்மொழிப் பற்று.

தாய்மொழி வளர்ந்தால்தான் எல்லாம் வளரும் என்று பாரதியார் எண்ணினார். தாய்மொழிப் பற்று மூலமே தலை சிறந்த கல்வியை அளிக்க முடியும் என்று கருதினார். கல்வித்துறையில் விடுதலை பெற, கல்வி வளர தாய்மொழிக் கல்வியே சிறந்தது என்று வலியுறுத்தினார். பாரதியார் தமிழ் மொழி வளர்ச்சிக்காகப் பலதிட்டங்களை வகுத்தார். நம் தாய்மொழி தரணி எங்கும் பரவவேண்டும். உலகத்திலுள்ள அறிவுச் செல்வங்களைத் தமிழில் சேர்த்திட வேண்டும் என்று விரும்பினார்.

பாரதி பார்வையின் இரண்டாவது பக்கம் - தேசிய ஒருமைப்பாடு.

''செப்பு மொழி பதினெட்டு உடையாள், எனில் சிந்தனையொன்றுடையாள்'' என்று இந்தியத் தாயைப் பாடினார். குமரி முதல் இமயம் வரை ஒரேநாடு என்பதை வலியுறுத்தினார். அந்த உணர்வை வளர்த்தார். தேசிய ஒருமைப்பாட்டுக்கு அடித்தளம் அமைத்தார்.

பாரதி பார்வையின் மூன்றாவது பக்கம் சமுதாயப்புரட்சி.

நாடு விடுதலை அடைந்து 33 ஆண்டுகளாகியும் நம் நாட்டில் முழுமையான சமுதாயப் புரட்சி வரவில்லை. பொருளாதாரத்தில் புரட்சி வரவில்லை. இன்னும் இந்தப் போராட்டத்தில் வெற்றி பெற முடியவில்லை. ஆனாலும் அரிசி உற்பத்தியைப் பெருக்கி இருக்கிறோம். கிராமப் பொருளாதாரத்தில் மாபெரும் மாறுதலைச் செய்ய வேண்டும். நம் நாட்டில் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்பவர்கள் சுமார் 60 சதவீத மக்கள் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் வாழும் மக்களில் 51 சதவீதம் என்கிறார்கள். இவர்கள் நிலையை உயர்த்தவேண்டும். நமது பொருளாதாரத் திட்டங்களை அதற்கு ஏற்ப உருவாக்கிட வேண்டும்

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பல நல்ல திட்டங்களை நிறைவேற்றியுள்ளார்கள். அந்த நல்ல திட்டங்களில் மிகச் சிறந்த திட்டமாகநான் கருதுவது தன்னிறைவுத்திட்டத்தைத்தான் தன்னிறைவுத் திட்டத்தாலேயே நமது கிராமப் பொருளாதார நிலையை உயர்த்த முடியும். இது போன்று, கிராமவளர்ச்சிக்கான ஒருங்கிணைந்த திட்டத்தாலும் கிராமப் பொருளாதாரம் வளர்க்கப்படுகிறது. பாரதிகண்ட சமுதாயப் புரட்சிக்கு இது அடித்தளமாக அமையும்.

பாரதிகண்ட நான்காவது பார்வை உலகப் பார்வை. உலக சமத்துவம் உண்டாக வேண்டும் என்று பாரதி விரும்பினார்.

பாரதியாரின் உலகப்பார்வை மிக உயர்ந்த பார்வை. இதனால் பாரதியார் உலகம் முழுவதும் அறிந்திடும்அளவுக்கு உயர்ந்தார். முதன் முதலாக ரஷ்யாவைப் பற்றிப்பாடினார். இத்தாலியைப் பற்றிப் பாடினார். பெல்ஜியத்தைப் பற்றிப் பாடினார்.

நான் சீனாவுக்குச் சென்றிருந்தபொழுதும் அங்கு பாரதியாரைப்பற்றிக் கேட்டார்கள். இப்படி தான் கண்ட உலகப் பார்வையால் உலக முழுவதும் தெரிந்தவராகிறார் பாரதியார். பாரதியாரின் கனவுகளை நனவாக்கி, அவரின் பார்வையிலே சமுதாய மேம்பாட்டை உருவாக்குவது நமது கடமையாகும்.

பாரதி ஒரு தீர்க்க தரிசி

திரு சை. வே. சிட்டிபாபு,

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்.



பாரதியார் தமது வாழ்நாளில் சாதித்தது என்ன?

கவிதை மூலமாக, நம்மை உணர்ச்சிப் பிழம்பாக ஆக்கினார்.

அவர் வாழ்ந்த காலத்தில் இந்திய தேசம் எப்படி இருந்தது என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். மக்கள் ஊமையராய், செவிடர்களாய், குருடர்களாய் வாழ்ந்திருந்தார்கள். பாட்டுத் திறத்தால் வையத்தைப் பாலித்திடவேண்டும் என எண்ணிய பாரதி புரட்சிக் கருத்துக்களை பாக்களில் பாடி மக்களைத் தட்டி எழுப்பினார்.

பாரதி ஒருதீர்க்கதரிசி. 1919ல் காந்தியைச் சந்தித்து அவரது இயக்கம் வெற்றிபெற வேண்டும் என வாழ்த்தினார். அதன் பின்னர் காந்தியடிகள் அரசியலில் வளர்ந்தார். நாடு விடுதலையடைவதற்கு முன்னமேயே -விடுதலை யடையப்போகிறது என்று கருதி, ''ஆடுவோமே, பள்ளுப் பாடுவோமே ஆனந்த சுதந்தரம் அடைந்துவிட்டோம்'' என்று எனப் பாடினார். விடுதலை கிடைத்தது.

கவிதைகளை மக்கள் புரிந்து கொள்ள முடியாத நிலை அக்காலத்தில் இருந்தது. பல கவிஞர்களின் கவிதைகள், அவர்களுடன் மறைந்து விட்டன. பாரதிமட்டும் மக்கள் கவிஞராகப் பரிணமித்தார்.

''வல்லமை தாராயோ, மாநிலம் பயனுற வாழ்வதற்கே'' என்று கேட்டுக் கொண்டார். பராசக்தியை, 'உண்டாலம்ம இவ்

உலகம்' என்னும் புறநானூற்றுக் கருத்தை அடித்தளமாகக் கூறியிருக்கிறார்.

பாரதி பெல்ஜியத்தைப் பாராட்டிப் பாடியுள்ளார்; மாஜினியைப் பாராட்டிப் பாடியுள்ளார் என்பதை எல்லாம் எண்ணிப் பார்க்கும்போது, அவர் உலகமகா கவி என்பது தெளிவாகிறது. அவரது வரலாறு பொன் எழுத்தில் பொறிக்கப்பட வேண்டிய அத்தியாயமாகும். அவரது பாடல் நமக்கெல்லாம் வழி காட்டத் தக்கவையாக உள்ளன. அவர் புரட்சிக் கவிஞராக-இலக்கணக் கவிஞராக-இலக்கியக் கவிஞராக விளங்கினார்.

பாரதியைக் குறித்துச் சொல்லப்பட்ட புகழ்மாலைகளை எல்லாம் தொகுத்து ஒரு தொகுப்பாக அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வெளியிட எண்ணியுள்ளது. பாரதியின் பாடல் உலகுக்குப் புத்தொளி தரும் என்ற நம்பிக்கை உண்டு.

பாரதியின் குரு

காங்கிரஸ் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக டம்டம் நகருக்குச் சென்ற பாரதியார் சகோதரி நிவேதிதா தேவியைச் சந்தித்தார். அப்போது நிவேதிதா கேட்கிறார் பாரதியைப்பார்த்து.

''திருமணம் ஆகிவிட்டதா?'' என்று!

''ஆகிவிட்டது''—பாரதி கூறுகிறார்

''அபபடி யென்றால் ஏன் தனியே வந்தீர்கள்? மனைவியை ஏன் அழைத்துவரவில்லை?''

''பெண் வீட்டில்தான் இருக்கவேண்டும்''—பாரதி கூறுகிறார்.

அது தவறு என்று சுட்டிக்காட்டுகிறார் நிவேதிதா தேவி. பெண்ணிடம் மகாசக்தி குடி கொண்டிருக்கிறாள் என்பதையும் எடுத்துரைக்கிறார். அப்போதுதான் பாரதிக்கு ஞானம் பிறக்கிறது. அவரைத் தனது குருவாக கருதுகிறார்.

தனது சுதேச கீதத்தின் முதல் பதிப்பை நிவேதிதா தேவிக்கு அர்ப்பணம் செய்துள்ள பாரதி - அந்த குருவின் சரண மலர்களில் இச் சிறு நூலைச் சமர்ப்பணம் செய்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

இளம்பிறை மணிமாறன்,

சாதிப் பித்தைக் களைவோம்!

திரு வ. சுப. மாணிக்கம்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகத் துணை வேந்தர்.

பாரதியார் தெரிவித்த உலகக் கருத்துக்கள் பல; இந்தியக் கருத்துக்கள் பல; தமிழகக் கருத்துக்கள் பல, எனினும் தமிழர்களுக்கு உகந்த கருத்து, 'சிந்து நதிமிசை நிலவினிலே' என்னும் பாடலின் கருத்தாகும். இன்று நமக்கு இன்றியமையாதது இந்த ஒருமைப்பாட்டுக் கருத்துத்தான்!

சாதிப் பித்தை வேரறுக்க வேண்டும் என்று நினைத்த பாரதியார் ''சாதிகள் இல்லையடி பாப்பா'' என்று பாடினார். சாதி முறையைப் பலவகையிலும் கண்டித்திருக்கிறார். சாதிக்குள் சாதி என வேரோடியிருக்கும் சாதி முறையை அவர் சாடினார்.

''சாதி இரண்டொழிய வேறு இல்லை என்ற தமிழ்மகள் சொல்லை அமுதம் என்போம்'' என்று கூறி, ஔவையைப் பாராட்டியிருக்கிறார். வெளிநாட்டுப் பகையை விட உள்நாட்டுப் பகையான சாதிப்பித்தைக் களைய வேண்டும் என்பது இந் நூற்றாண்டு விழாவின் குறிக்கோளாக இருக்கவேண்டும்.

தமிழகத்தில் தமிழ்மொழியை மறக்கும் நிலை சில இடங்களில் காணப்படுகிறது. பள்ளிகளில் சிறு குழந்தைகளுக்கு ஆங்கிலம் போதிக்கப்படுகிறது. இந்தக் கொடுமையை பாரதி எப்படிக் கூறுகிறார் தெரியுமா?

வேறு வேறு பாஷை கற்பாய்
வீட்டு வார்த்தை கற்கிலாய்

எனக் குறிப்பிடுகிறார்

ஆங்கிலக் கல்வியைப் பேடிக் கல்வி என்கிறார். அதனால் ஒரு நன்மையும் எனக்கு விளையவில்லை. இதை 40 ஆயிரம் கோவிலில் சொல்லுவேன் என்றும் குறிப்பிடுகிறார்.

தமிழகத்தில் எல்லா இடத்திலும் தமிழ்தான் இடம்பெற வேண்டும். தமிழகப் பெற்றோர்கள் வீட்டு மொழியை, முதலில் தங்கள் குழந்தைகளுக்குக் கற்றுத் தர வேண்டும். பின்னர் பிற மொழியைக் கற்றுத் தருதல் நல்லது.

கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக, தமிழகத்தில், தமிழுக்கு நல்ல காலம் ஏற்பட்டிருக்கிறது. தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தை இந்த அரசு துவக்கியிருக்கிறது. தமிழறிஞர் பலருக்கு நூற்றாண்டு விழாக்களை அரசு கொண்டாடி வருகிறது.

(11.12.81ல் பாரதி நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரையிலிருந்து)





உலகப்புகழ் வாய்ந்த ஒப்புயர்வற்ற ஆராய்ச்சி நிலையம்!

இந்தியாவுக்கு மட்டுமல்ல, உலக முழுமைக்கும் நன்மை சேர்க்கும் பெரும் பணியில் ஈடுபட்டிருக்கிறது, சென்னையிலுள்ள காசநோய் ஆராய்ச்சி நிலையம். இதன் ஆராய்ச்சிப்பணி நாளுக்கு நாள் விரிவடைந்து வருகிறது. உலகப்புகழையும் பெற்று வருகிறது. இதன் சீரிய பணிகளை விளக்கு கிறது இக்கட்டுரை.

ஒரு நிறுவனத்தின் வளர்ச்சியில் கால் நூற்றாண்டு நிறைவு பெறுவது என்பதுமகிழ்ச்சிக்குரிய செய்தி. விழாக்கோலம் கொண்ட இந் நன்னாளில் சென்னை சேத்துப்பட்டிலுள்ள காசநோய் ஆராய்ச்சி நிலையத்தின் 25 ஆண்டுகளைப் பற்றி சிந்திக்காமல் இருக்க முடியாது. சிலரின் தீர்க்க தரிசனத்தாலும், பலரின் உழைப்பாலும் இந்த நிறுவனம் உருவாக்கப்பட்டு வளர்ந்துள்ளது. 1956ஆம் ஆண்டு அடக்கமான முறையில் இந்நிலையம் சென்னையில் துவக்கப்பட்டது.

உலக சுகாதார நிறுவனம், இங்கிலாந்து மருத்துவ ஆராய்ச்சிக்குழு, மத்திய அரசின் இந்திய மருத்துவ ஆராய்ச்சி நிலையம், மற்றும் தமிழ்நாடு அரசு கூட்டு சேர்ந்து உருவாக்கிய நிலையம இது.

குறுகிய இடவசதி கொண்ட கட்டடத்தில், இந்நிலையம் முதல் 22 ஆண்டுகள் இயங்கி வந்தது. 1978-ஆம் ஆண்டு மே மாதம் தமிழக அரசால் மான்யமாக வழங்கப்பட்ட 2 ஏக்கர் பரப்புள்ள நிலத்தில், நிலையத்தின் நான்கு அடுக்கு புதிய கட்டடம் நிறுவப்பட்டு அதன் திறப்பு விழா நடந்தது. சென்ற 25 ஆண்டுகளாக காசநோய் வாய்ப்பட்டவர்களுக்கு தகுந்த மருத்துவம் செய்யும் முறைகளை பற்றியும் இந்நோயை உண்டாக்க கூடிய. நுண்கிருமிகளைப் பற்றியும், அக்கிருமிகளை அழிக்கக் கூடிய மருந்துகளின் செயல்முறை விளக்கங்களையும் ஆராய்வதே இந்நிலையத்தின் முக்கிய நோக்கங்களாக இருந்துள்ளது.

இங்குவரும் நோயாளிகளுக்கு எளிய முறையில் மருத்துவம் செய்யப்பட்டு வருகிறது. அவர்கள் பரிசோதனைக்கோ, மருந்துகளுக்கோ அல்லது நிபுணர்களின் அறிவுரைகளுக்கோ காசு பணம் செலவு செய்ய அவசியமில்லை. பரிசோதனைக்குப் பிறகு அவர்கள் உடல்நிலை பற்றி விவரித்து சொல்லப்படுகிறது. அது தொற்றுநோய் என்பதால், நோயாளிகளின் குடும்பத்தினருக்கும் பரிசோதனை நடத்தி, தேவைப்பட்டவர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. தவறாமல் மருந்துகள் உட்கொள்வதின் அவசியம் பற்றி வலியுறுத்தப்படுகிறது. மருந்துகள் சாப்பிடுவதற்கோ, ஊசி போட்டுக் கொள்வதற்கோ நோயாளிகள் வராவிட்டால் அவர்கள் வீடுகளுக்குச் சென்று தக்க அறிவுரைகள் கூறி அவர்கள் ஆராய்ச்சி நிலையத்திற்கு வர வழைக்கப்படுகிறார்கள்.

கடுமையான நோய்கண்டு நடக்க முடியாத நிலைமையில் இருக்கும் நோயாளிகளுக்கு அவர் இல்லங்களிலே மருத்துவ வசதி அளிக்கப்படுகின்றது. நோயாளிகள் துவக்கத்திலிருந்து 5 ஆண்டு காலம் நிலையத்தின் மேற்பார்வையில் இருந்து வருகிறார்கள். இம்மாதிரி தொடர்ந்து மேற்பார்வையில் இருப்பது உலகிலேயே வெகு சில இடங்களில் தான் நடைமுறையில் கையாண்டு வரப்படுகிறது. இன்று இந்த காசநோய் வாய்ப்பட்டவர்கள் முழு குணமடைய முடியும். தக்க சமயத்தில் மருத்துவத்தை நாடி

உலாவரும் மருந்தகம் மூலமாக காசநோய்த் தடுப்பு மருந்துகள் வழங்கப்படுகின்றன.

மருந்துகளை ஒழுங்காக உட்கொண்டால் நோய் குணமடைய வாய்ப்புகள் அதிகமென்பது இந்த நிலையத்தின் கண்டுபிடிப்பு..

இன்று நோயாளியைத் தனிப்பட்ட காசநோய் விடுதிகளுக்கு அனுப்பவேண்டிய அவசியமே இல்லை. அவர்கள் இருக்கும் சூழ்நிலையிலேயே மருத்துவம் செய்துகொண்டு குணமடைய முடியும். ஒரு ஆண்டு, ஒரு நோயாளியை காசநோய் விடுதியில் வைத்து மருத்துவம் செய்வதற்குச் செல்விடும் தொகையில் கிட்டத்தட்ட 15 நோயாளிகளை அவர்கள் இருக்கும் சூழ்நிலையிலேயே மருத்துவம் செய்து குணப்படுத்த முடியும். ஆண்டிற்கு சுமார் ரூபாய் 60 செலவு செய்து ஒரு நோயாளி தான் இருக்கும் இடத்திலேயே சாதாரண மருந்துகள் உட்கொண்டு குணப்படுத்திக் கொள்ள முடியும் என்ற உண்மையை இந்த நிலையம் நிரூபித்திருக்கிறது. உருக்கிநோய் கிருமிகளை தாக்கக்கூடிய தக்க மருந்துகள் உட்கொண்டால் தனிப்பட்ட வகையில் அதிகப் புரதச்சத்து கொழுப்புச், சத்து, வைட்டமின் சத்துக்கள் உள்ள உணவுப் பொருள்கள் சாப்பிடும் அவசியம் நேரிடுவதில்லை. மேலும்,தேவையான படுக்கை வசதி இல்லாத நம் நாட்டில் வீட்டிலிருந்து கொண்டே மருத்துவமனைக்கு சென்று மருத்துவம் செய்து கொள்ளும் முறைதான் நடைமுறைக்கு ஏற்றதாகும்.

சென்ற சில ஆண்டுகள் வரை பயனுள்ள மருந்துகள் மூலம் காசநோய்க்கு 18 அல்லது 24 மாதங்கள் மருத்துவம் செய்ய வேண்டிய அவசியம் இருந்தது. ஆண்டில் 365 நாட்களும் மருந்து உட்கொள்ள எவருமே விரும்ப மாட்டார்கள். ஆகையினால், வாரம் இருமுறை நிலையத்தின் சிப்பந்தி ஒருவரின் முன் ஒரு ஆண்டுக் காலம் மருந்து உட்கொள்ள வைப்பது ஒரு சிறந்த முறையாகக் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறது. இவ்வித சிகிச்சையினால் முழு ஆரோக்கிய நிலை அடைய வாய்ப்பு இருக்கிறது என்பது இந்நிலையத்தின் மீண்டும் ஒரு சீரிய கண்டுபிடிப்பு.

தற்போது நோய்க்கிருமிகளை சிதற அடிக்கும் சக்தி வாய்ந்த ஐசோனியாஸ்ட், ரிபாம்பிரின் பைராசினமைட் போன்ற மருந்துகளை பயன்படுத்துவதால் தொடர்ந்து மருத்துவம் செய்ய வேண்டிய காலத்தின் வரம்பு 5 அல்லது 7 மாதங்களுக்குக் குறைக்கப்பட்டுள்ளது. இந்தக் கண்டுபிடிப்பு இந்த நிலையத்தின் வரவேற்கத்தக்க சாதனைகளில் ஒன்றாகும்.

இந்நிலையத்தின் நுண்கிருமிகள் ஆய்வுக்கூடம் சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது. மேலை நாடுகளில் உள்ள எந்த ஆய்வுக்கூடங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் இந்த ஆய்வுக்கூடம் எந்த வகையிலும் குறைந்தது அல்ல. உருக்கி நோய்க் கிருமிகள் மனிதனைத் தாங்கும் சக்தி எந்த அளவில் உள்ளது என்பதை இந்த நிலையம் எடுத்துக்காட்டி இருக்கிறது. இங்கிலாந்தில் உள்ள கிருமிகளைவிட நம் தென்நாட்டில் உள்ள கிருமிகளின் தாக்கும் சக்தி குறைவாகவே காணப்படுகிறது.

உருக்கி நோய் தவிர்க்கக்கூடிய மருந்துகள் எந்த அளவுக்கு மனிதனின் இரத்த ஓட்டத்தில், எந்த விதங்களில் செய்கை புரிகின்றன என்ற விவரங்கள் ஓரளவு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சீதோஷ்ண நிலை மாறுதல்களின் தாக்குதலாலும், சர்க்கரைப் பொருட்களுடன் கரைத்து திரவமாக உபயோகிப்பதாலும், மருந்துகளின் தரம் குறைவதை நிலையம் எடுத்துக் காட்டியிருக்கிறது. இந்த விவரத்தை மருந்து தயாரிப்பாளர்கள் பயன்படுத்தியுள்ளார்கள்.



நோயாளியை வீட்டில் சந்தித்து அவர் உடல்நலம் பற்றி சமூக நல ஊழியர் கேட்டறிகிறார்.

எக்ஸ்ரே படத்தில் நுரையீரலில் காணப்படும் காசநோய் அறிகுறிகளை நோயாளிக்கு டாக்டர் விளக்குகிறார்.





நோயாளியின் மார்புப்பகுதி பல கோணங்களில் எக்ஸ்ரே படங்கள் எடுக்கப்படுகின்றது.



காச நோயககருமிகள் உள்ளனவா என்பதைக் கண்டுபிடிக்கும் சோதனைகள்.

உருக்கிநோய் முக்கியமாக நுரையீரலைத்தான் தாக்குகிறது. அங்கிருந்து உடலின் மற்ற இடங்களுக்கு பரவக்கூடும். முதுகெலும்பு பாதிக்கப்பட்டநோயாளிகள், மூளையை மூடிக்கொண்டிருக்கும் மென்மையான தோல், உருக்கி நோய்க்கிருமிகளால் தாக்கப்பட்ட நோயாளிகள், கழுத்தில் உள்ள உருளைத்தசைகள் வீக்கம் கண்ட குழந்தைகள், முதலியோருக்கு குறுகிய காலத்தில் சிகிச்சை செய்யும் விதங்களைத் தற்பொழுது இந்நிலையம் ஆராய்ந்து வருகிறது.

இதுமட்டுமல்லாமல், இந்நிலையத்தின் ஆராய்ச்சிகள் அண்மைக்காலத்தில் விரிவாக்கப்பட்டுள்ளன. உருக்கிநோய் உண்டாக்கும் கிருமியும், தொழுநோய் உண்டாக்கும் கிருமியும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை என்பது வெகு காலத்திற்கு முன்பே தெரிந்த செய்தி. அந்த அடிப்படையில் உருக்கிநோயைக் குணப்படுத்துவதில்கிடைத்துள்ள அனுபவங்களை, தொழுநோய் குணப்படுத்தவும் உபயோகிக்க இந்நிலையம் ஆராய்ச்சியைத் துவக்கி செயல்பட்டு வருகிறது. இந்த அரிய ஆராய்ச்சிகளின் பலன்கள் நாடெங்கும் தொழுநோயை நாளடைவில் கட்டுப்படுத்த பயன்படும்.

ஏன், காசநோய் கிருமியாலும் தொழுநோய் கிருமியாலும் தாக்கப்பட்ட சிலரே அந்நோயில் அவதிப்படுகிறார்கள் மேலும், முழு குணமடைந்த சில காசநோயாளிகள் மறுபடியும் நோய் வாய்ப்படுவது ஏன்? மனிதனின் இயல்பான தடுப்புச் சக்தி எந்த அளவுக்கு நம் உடம்பினுள் வேலை செய்கிறது என்ற விவரங்களை கண்டறிய இந்த நிலையத்தின் ஒரு புதிய ஆராய்ச்சிப் பிரிவு செயல்பட்டு வருகிறது. இதுமட்டுமல்லாமல் யானைக்கால் என்று சொல்லப்படும் நோயை உண்டாக்கும் பூச்சிகளால் தாக்கப்பட்ட நபரின் இரத்தத்தில் உள்ள தனிப் புரதசத்து அணுக்கள் எப்படி செயல்படுகின்றன என்பது பற்றிய ஆராய்ச்சியும் நடந்து வருகிறது.

கடந்த சில ஆண்டுகளாக இந்த நிலையத்தின் ஆராய்ச்சிகளைப் பற்றிய விவரங்கள், அனைத்து நாட்டு உருக்கிநோய் மாநாடுகளிலும், அகில இந்திய மாநாடுகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளன. நுண்கிருமி நூல், மற்றும் உயிர்நிலை இரசாயன இயல்பு நூல் ஆகியவைகளில் மேல்பட்ட படிப்பிற்குச் சென்னை அனைத்துப் பல்கலைக் கழகம் இந்நிலையத்திற்கு அங்கீகாரம் அளித்து உள்ளது. அண்டை நாடுகளிலிருந்தும், நம்நாட்டின் பல இடங்களிலிருந்தும் வரும் மருத்துவர்களுக்கும், செவிலியர்களுக்கும், சுகாதார ஊழியர்களுக்கும் உருக்கிநோய்ப் படிப்பில் பயிற்சிதர இந்நிலையம் இயங்கி வருகிறது.

விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள இந்த காசநோய் ஆராய்ச்சி நிலையம் மேலும் தொடர்ந்து தன் பணியினை செவ்வனே செய்து, மருத்துவ துறைக்கும், பிணியால் பாதிக்கப்படும் மக்களுக்கும், நாட்டுக்கும் தொடர்ந்து தொண்டு புரியும் என்பதில் ஐயம் இல்லை. இதன் விளைவாக உலகப புகழை நாளுக்குநாள் பரவலாக இந்நிலையம் பெற்றுவருகிறது.

தமிழரசு

நாட்காட்டி

வண்ணப்படம்

திரு கே. ஆர். வி. பக்தா

[தமிழ்நாட்டில் சுற்றுலா மகத்தானதொரு வளர்ச்சியினை அடைந்துள்ளது. ஆண்டுதோறும் தமிழகத்துக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை உள்நாட்டுப் பயணிகள் - வெளிநாட்டுப் பயணிகள் ஆகிய இரு சாராரின் எண்ணிக்கை-நாள்தோறும் பெருகிக் கொண்டே போகிறது. தமிழகத்தில் சுற்றுலாவின் மேம்பாடு குறித்து விவரிக்கும் கீழ்க்கண்ட கட்டுரை, வடஇந்திய பத்திரிகா (Northern India Patrika) என்ற பெயரில் வட நாட்டிலிருந்து வெளியாகும் பத்திரிகையின் உதவிப் பொது மேலாளர் திரு தாமல் காந்தி கோஷ் அவர்கள் எழுப்பிய வினாக்களுக்கு மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் அளித்த பதில்களை அடிப்படையாக வைத்து அப்பத்திரிகையில் வெளிவந்ததாகும்.]



இந்தியாவில் சுற்றுலா மேன்மேலும் வளர்ந்துகொண்டே வருகிறது. ஹரியானா மாநிலம் போல் தமிழகத்தில் அண்மைக் காலத்தில் ஏற்பட்டுள்ள சுற்றுலாவின் வளர்ச்சி மிகப் பிரம்மாண்டமான தாகும். சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் எல்லாவித சிறப்புக் கூறுபாடுகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது தமிழகம். பயணிகளைக் கவர்ந்திழுக்க இத்துறைக்கான ஆண்டு நிதி ஒதுக்கீடு 20 இலட்சம் ரூபாயிலிருந்து 109 ரூபாய்இலட்சம் என்ற அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளது. இருந்தும் தமிழகம் சுற்றுலாப் பயணிகளின் முழுக்கவனத்தையும் பெறவில்லை. மேலும் ஈட்டவேண்டிய இலக்குகள் அதிகம் உள்ளன. மாநில அரசும் இந்த உண்மையை மறுக்கவில்லை.



தமிழ்நாட்டில் சுற்றுலா மேம்பாடு

இந்த வாய்ப்பான சூழ்நிலையை மாநில அரசு முழுக்க முழுக்கப் பயன்படுத்திக் கொண்டு வருகிறது. இதனால், கடந்த மூன்றாண்டுகளில், தமிழகத்துக்கு வரும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 20 சதவிகிதம் உயர்ந்துள்ளது. அதிலும் குறிப்பாக, 1980-81ஆம் ஆண்டில், 2.25 இலட்சம் என்று உச்சக் கட்டமாக இந்த எண்ணிக்கை பெருகியுள்ளது.

மாண்புமிகு எம்.ஜி.ஆர் அவர்களின் தலைமையிலான இன்றைய தமிழக அரசு சுற்றுலாப் பயணிகளைத் தமிழகம் நோக்கி கவர்ந்திழுக்க என்னென்ன காரியங்களைச் செய்துள்ளது? ஆக்கப்பூர்வமான திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறது. கடந்த நான்காண்டுகளில் சுற்றுலாத்துறையில் மிகப் பெரிய அளவில் தமிழகத்தில் ஆக்கப்பூர்வமான திட்டங்கள் செயல்வடிவம் பெற்றுள்ளன என்பதை யாராலும் மறுக்க முடியாது. இந்தக் காலக் கட்டத்தில் மேலும் மேலும் சுற்றுலாப்

சுற்றுலாத் தொழில் டாலரை ஈட்டித் தரும் அந்நியச் செலாவணியை அள்ளித் தரும் ஓர் அற்புதச்சாதனம் என்பதை மாநில அரசு முழுக்க முழுக்க உணர்ந்துள்ளது. அதனால்தான் சுற்றுலாப்பயணிகளை மேன்மேலும் கவர்ந்திழுக்கும் சுற்றுலாப் பயணத் திட்டங்களையும், பற்பல வசதிகளையும் மாநில அரசு தீட்டி செயல்படுத்தி வருகிறது. அதே சமயத்தில் மற்ற பல மாநிலங்களைப் போலவே, தமிழ்நாடு அரசும், உள்நாட்டுப் பயணிகளுக்குத் தகுந்த மாதிரியான, குறைந்த செலவிலான பயணத்திட்டங்களையும் புறக்கணிக்காமல் செயல்படுத்திவருகிறது.

உள்ளத்தை அள்ளும் உதகமண்டலம் போன்ற மலைப்பிரதேசங்கள், சிந்தனையைத் தூண்டும் ஏராளமான கோயில்கள் சமய வழிபாட்டு இடங்கள் உருவாகிவரும் நவீனமயமான நகரங்கள் போன்ற ஏராளமான சுற்றுலா இடங்கள் தமிழகமெங்கும் பல்கிப் பெருகிக் கிடக்கின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக 'நீலத்திரைக்கடலோர்த்திலே நின்று தவம் செய்யும் குமரி



அன்னை குடியிருக்கும் குமரி முனை'வேறு கல்லெல்லாம் கவிபாடும் மாமல்லபுரம்- பிரமிப்பூட்டும் இராமேஸ்வரம், குமரி முனை, மலைகளின் அரசியான உதக மண்டலம், கொடைக்கானல், அழகை அள்ளிச் சொரியும் பிச்சாவரம், எழில்மிகு ஏர்க்காடு - இந்த இடங்களையெல்லாம் அனைத்து நாட்டு மக்களையும் கவர்ந் திழுக்கும் சுற்றுலா மையங்களாக உருவாக் கிடும் பணியை உடனடிப் பணியாக மேற்கொண்டு செயல்படுத்திவருகிறது, தமிழக அரசு.

சுற்றுலாப் பயணிகளுக்குத் தமிழகஅரசு அளிக்கும் வசதிகள், சலுகைகள் தான் என் னென்ன! சாலைப் போக்குவரத்தைச் செம்மைப்படுத்தியுள்ளதுடன் எல்லா நவீன வசதிகளுடன் கூடிய ஹோட்டல்களை யும், பாதை ஒர விடுதிகளையும் (Motels) அதிக அளவில் உருவாக்கியுள்ளது, இன் றைய தமிழக அரசு.

வசதி படைத்த சுற்றுலாப் பயணி களுக்கு, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஆகிய கழகங்களினால் நடத்தப் பெறும் பல்வேறு ஹோட்டல்கள் தமிழகத்தில் உள்ளன. இவை தவிர தனியார் ஹோட் டல்களும் அதிக அளவில் உள்ளன. 17 சொகுசுப் பேருந்துகளைத் தமிழ்நாடு சுற் றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தி வருகிறது. இவற்றில் மூன்று குளிர்ப்பதனம் செய்யப் பட்டவையாகும்.

நடுத்தர வகுப்பினருக்கும், குறைந்த வசதி படைத்தவர்களுக்கும் எல்வளவோ ஹோட்டல்களும் பாதை ஒர விடுதிகளும் உண்டு. இவற்றுடன் 10 இடங்களில் இளைஞர் தங்கும் விடுதிகள் உள்ளன. இதுமாதிரி மேலும் பல தங்கும் விடுதிகள் கட்டப்பட்டு வருகின்றன.

சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காகத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சாலை வழிப் பேருந்து சுற்றுப் பயணங் களை நடத்துகிறது. இந்தப் பயணங்கள் மிகவும் பிரபலமாகிக் கொண்டே வருகின் றன. ஏழுநாட்கள் சுற்றுப்பயணம் - என்ற வகையில் நடத்தப்படும் இரண்டு சுற்றுலா பயணத்திட்டங்களின் மூலம் - தமிழகத் தின் சுற்றுலா மையங்களை மட்டுமல்ல; தென் இந்தியா முழுமையுமே ஒருவர் கண்டுகளிக்க முடியும். இந்த நடவடிக் கைகளினால் தமிழ்நாடு சுற்றுலாவளர்ச்சிக் கழகத்தின் வருமானம் பெருகியுள்ளது. 1976-77ல் ரூ. 68.51 இலட்சம் என்ற அளவுக்கு இருந்த வருமானம் 1980-81-ல் ரூ. 164.51 இலட்சம் என்ற அளவுக்கு உயர்ந்துள்ளது.

அது மட்டுமல்ல; வெளிநாட்டுச் சுற்றுப் பயணிகளை ஈர்ப்பதற்காக வேண்டி ''தென்னகம் நோக்கி'' என்ற திட்டம் 1977-ஆம் ஆண்டிலிருந்து, மைய அரசின் ஒத்துழைப்புடன் தமிழக அரசால் செயல் படுத்தப்பட்டு வருகிறது. வெளிநாடுகளி லிருந்து சுற்றுலா எழுத்தாளர்களும் பத் திரிகையாளர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு அழைக்கப்பட்டு தமிழகத்துக்கு வருகை தருகிறார்கள். அவர்கள் தமிழகத்தைச் சுற்றிப்பார்த்து தங்கள் நாட்டுப்பத்திரிகை களில் தாங்கள் கண்ட சுற்றுலா அனுபவங் களை எழுதுகிறார்கள். இந்த முயற்சி நல்ல பயனை ஈட்டியுள்ளது. இதற்கு நல்ல வரவேற்பும் கிடைத்துள்ளது. தமி ழக சுற்றுலாத்துறை 17 தகவல் நிலையங் களையும் 8 பயணிகள் அலுவலகங்களை யும் நடத்துகிறது. திரைப்படம் மூலம் கண்ணைக்கவரும் வெளியீடுகள் மூலமாக வும் சுற்றுலாப் பயணிகள் கவர்ந்திழுக்கப் படுகின்றனர்.

அயல்நாட்டுப் பயணிகளின் பயணம் மேற்கொள்வதில் தமிழகத்தில் உள்ள தடங்கல்கள் முட்டுக்கட்டைகள் என்ன? சென்னை, நாட்டின் மூன்றாவது பெரிய நகரமாக இருந்தும் ஒரு சில வெளிநாட்டு விமானங்களே சென்னை மூலமாகச் செல் கின்றன. சிங்கப்பூர் ஏர்லைன்ஸ்; ஏர் லங்கா, மலேசியன் ஏர்லைன்ஸ்-அத்துடன் சிங்கப் பூர், கோலாலம்பூருக்கு இரண்டுமுறை சென்னையிலிருந்து செல்லும் ஏர் இந்தியா விமானங்கள் இவைதான் சென்னையி லிருந்து வெளிநாடுகளுக்கு செல்பவை. சென்னை விமான நிலையம் மூலமாகச் செல்லும் வகையில் மேலும் பல சர்வதேச விமானப் போக்குவரத்துக்களை ஏற்படுத் தித்தரவேண்டும் என்று தமிழக அரசு மத்திய அரசை வற்புறுத்திக் கொண்டே வருகிறது. அப்படிச் செய்தால் மேன் மேலும் அதிக எண்ணிக்கையில் வெளி நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தமிழகம் நோக்கி வருவார்கள் என்று தமிழக அரசு உறுதியாக நம்புகிறது. தமிழ்நாடு இந்திய துணைக் கண்டத்தில் மிகவும் முக்கியமான ஒரு சுற்றுலா மையம் என்பதின் முக்கியத் துவத்தைக் கருத்தில் கொண்டு, தமிழகத் தின் சுற்றுலா வளர்ச்சிக்கு மத்திய அரசு மேலும் அதிகமான அளவில் நிதி ஒதுக்கீடு களையும், ஆக்க பூர்வமான வசதிகளை யும் சலுகைகளையும் அளிக்க முன்வருமே யானால் தமிழ்நாடு நிச்சயமாக மிக விரைவில் சுற்றுலாப் பயணிகளின் சொர்க்க பூமியாக மாறிவிடும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

[NORTHERN INDIA PATRIKA-
—லக்னோ பதிப்பு. 12-12-'81;
அலகாபாத் பதிப்பு. 28-11-'81-ல்
வெளிவந்துள்ள கட்டுரையின் தமிழாக்கம்.]

வேளாண்மைப் பொறியியல் சேவைக் கூட்டுறவு இணையம்

இர. அண்ணாதுரை
மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
தஞ்சாவூர்.



வேளாண்மைப் பொறியியல் சேவைக் கூட்டுறவு இணையம் என்ற இவ்வமைப்பு இந்தியாவிலேயே தமிழ் நாட்டில் மட்டுமே கூட்டுறவுத் துறையில் செயல்பட்டு வருகிறது. 5 லட்சம் மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற மத்திய அரசின் திட்டத்தைத் தமிழ்நாடு அரசு இக் கூட்டுறவு அமைப்பின் மூலம் நிறைவேற்ற முன் வந்துள்ளது. 1972-ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் 12 மாவட்டங்களில் மொத்தம் 220 ஊராட்சி ஒன்றியங்களில் விவசாயச் சேவைக் கூட்டுறவு நிலையங்கள் அமைக்கப்பட்டன.

விவசாயிகளுக்கு நியாயமான விலையில், தரமான விதைகள், உரம், பூச்சி மருந்து, ஆயில் எஞ்சின், குறைந்த வாடகையில் உழுவதற்கு டிராக்டர், பவர் டிரில்லர், விசைத் தெளிப்பான், டீசல், மண்ணெண்ணெய், சிமெண்ட் மற்றும் இதுபோன்ற அடிப்படைத் தேவைக்கான அத்தியாவசியப் பொருட்களை வழங்குவது இந்த இணையத்தின் நோக்கமாகும். இந்நிலையங்களில் விவசாயிகஞ்க்கு வாடகைக்கு விடுவதற்காக 231 டிராக்டர்களும் டிரெயிலர்களும் உள்ளன.

நிதி நிலைமை:

இந்த டிராக்டர்களை வாங்குவதற்காக ஸ்டேட் பாங்கில் ரூபாய் 161 இலட்சம் கடன் வாங்கி இந்தக் கடனுக்காக இதுவரை ரூபாய் 70 இலட்சம் வட்டியாக மட்டும் செலுத்தப்பட்டுள்ளது. இன்னும் திருப்பிச் செலுத்த வேண்டிய கடன் ரூ. 171 இலட்சமாகும். இதில் ரூ. 1.38 இலட்சம் தவணை கடந்த பாக்கியாகும். தனி நபர் பட்டதாரிகளுக்கு இதே பணிக்காக கடன் வழங்கும் போது வட்டி 6 சதவிகிதம் என மத்திய அரசு அனுமதித்துள்ளது. ஆனால் கூட்டுறவு இணையத்திற்கு 12 சதவிகிதம் என்று வட்டி விதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையை மாநில அரசின் மூலம் மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி 6 சதவிகிதம் வட்டியாக மாற்றி வழங்க வேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளது.

இது தவிர மாநில அரசு பங்கு மூலதனமாக வழங்கியிருந்த ரூ. 110 இலட்சத்தை பின்னர் கடனாக மாற்றிவிட்டது. அத்தொகையை மறுபடியும் பங்கு மூலதனமாகவே மாற்ற வேண்டும் அல்லது வட்டியில்லாக் கடனாக அனுமதிக்க வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது.

ஊழியர் நலனும் உழைப்பின் நலனும்

1972-ஆம் ஆண்டு இந்த இணையம் தொடங்கப்பட்டதிலிருந்தே ஐ.ஏ.எஸ். அதிகாரியின் பொறுப்பில் செயல்பட்டு வந்தது. மக்கள் பிரதிநிதி ஒருவரின் தலைமையின் கீழ் இயங்குவது இதுவே முதல் முறையாகும். இணையத்தில் பல்வேறு சீர்திருத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன. குறைகளையும் குற்றங்களையும் களைவதும், ஊழியர்களுக்கு உரிய வசதி அளித்து உழைப்பைப் பெருக்குவதும், அதன் மூலம் விவசாயிகளுக்கு நல்ல பயன் ஏற்பட வேண்டும் என்பதை சீரிய நோக்கமாகக் கொண்டும் நிர்வாக இயந்திரம் முடுக்கி விடப்பட்டுள்ளது.

இந்த அமைப்பில் ஒன்றியங்களிலுள்ள சேவை நிலையத்தில் இருக்கும் அலுவலருக்கு நிர்வாக இயக்குநர் என்றிருந்த பதவியின் பெயரை வட்டார மேலாளர் என்று மாற்றி, பதவியின் பெயரிலிருந்த குழப்பம் நீக்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவில் மாவட்ட மேலாளரும், மண்டல மேலாளர், மாநில அளவில் நிர்வாக இயக்குநர், தலைவர் என்ற வகையில் அமைப்பு செயல்பட்டு வருகிறது. ஒன்றிய மேலாளர்களுக்கு அதே தகுதியுடைய பொறியாளர்களுக்கு வேறு துறைகளில் அடிப்படைச் சம்பளம் ரூ. 625 வழங்குகின்ற நிலைமையில் இவர்களுக்கு ரூ. 425 மட்டுமே சம்பளம் என்ற நிலைமையை மாற்றி ரூ. 625 என ஊதிய உயர்வு வழங்கியதுடன், அவர்களின் தற்காலிகப் பணி நிலையை மாற்றி அவர்களை நிரந்தர ஊழியர்களாக்கி கடந்த காலத்திற்கான ஊதிய உயர்வும் அளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனால் அவர்கள் ஊக்கமுடன் ஒத்துழைப்பளித்து வருவதால் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுவருகிறது. 220 சேவை நிலையங்களில் 110 நிலையங்கள் நட்டத்தில் செயல்பட்டு வந்தன. எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக தற்பொழுது 55 சங்கங்களே நட்டத்தில் செயல்பட்டு வருகின்றன. விரைவில் எல்லாச் சங்கங்களும் இலாபத்தில் இயங்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 12 மாவட்டங்களில் மட்டுமே செயல்பட்டு வரும் மாவட்ட நிலையங்கள் விரைவில் பெரியார், நீலகிரி மாவட்டங்களிலும் துவங்கப்பட உள்ளன. சிறிது காலத்திற்குப் பின்னர் கன்னியாகுமரி மாவட்டத்திலும் தொடங்கப்படும்.

பலனளிக்கும் புதிய திட்டம்:

கொடைக்கானல் மலைப்பகுதியில் 250 ஏக்கர் நிலத்தை நீண்ட கால குத்தகைக்குப் பெற்று, அதில் விவசாயிகளுக்கு வழங்குவதற்காக 125 ஏக்கரில் விதைக்காக உருளைக் கிழங்கு பயிரிடவும் 125 ஏக்கரில் ஜெரேனியம் வாசனைத் திரவியம் உற்பத்தி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் உற்பத்தியாகும் வாசனைத் திரவியங்கள் ஏற்றுமதிக்குத் தகுதி உடையதாகும். இதில் ரூ. 15 இலட்சம் முதலீடு செய்தால். ஆண்டுக்கு ரூ. 2 இலட்சம் லாபம் கிடைக்கும். முதலீட்டிற்குத் தேவையான நிதி வசதி இணையத்திடம் உள்ளது. தற்சமயம் ரூ. 5 லட்சம் செலவில் சாலை அபிவிருத்திக்காக இரண்டு ரோலர்கள் வாங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் மாதம் ரூ. 30,000 வருமானம் கிடைக்கிறது. மேலும் 5 ரோலர்கள் வாங்க திட்டமிடப்பட்டுள்ளது. சாலை அபிவிருத்திக்காக 'ஜல்லி' அதிக அளவில் தேவைப்படுவதால் 'ஜல்லி' தயாரிக்கும் 'மெட்டல் கிரஷ்ஷர்'

நாட்டுக்குத் தேவை தொழில் வளர்ச்சி!
தொழில் வளர்ச்சிக்குத் தேவை
டான்சி



தொழில் துறைக்கும்
வீட்டு உபயோகத்திற்கும்
ஏற்ற பல்வேறு
சாதனங்களைத் தயாரிக்கும்
55 தொழிற்கூடங்கள்.
ஆண்டு ஒன்றுக்கு
ரூ. 23 கோடி மதிப்பு உற்பத்தி-
6000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு.

டான்சியின் தயாரிப்புகளில் சில:

- இரும்பு கட்டுமானங்கள்
- நுண்ணலைக் கோபுரங்கள் மற்றும் மின்கடத்திக் கோபுரங்கள்
- இரும்பு மற்றும் மரத்தாலான நாற்காலிகள் முதலியன
- கொல்லுலை உறுப்புகள்
- இயந்திரக் கருவிகள்
- தோல் மற்றும் தோலினாலான பொருட்கள்
- விவசாயக்கருவிகள்
- வார்ப்பட இரும்புக் குழாய்கள்
- எனாமல் பூசிய செப்புக்கம்பிகள்
- பிரெஞ்சி பாலிஷ், காஸ்கட் ஷெல்லாக் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.

டான்சி
தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்
(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)
1, ஒயிட்ஸ் சாலை, சென்னை 600 014
தொலைபேசி: 82161
தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI

DIPR



5 வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொன்றும் ரூ. 1.20 லட்சமாகும்.

நீர்ப் பாசனப் பணியில் பெரும் பங்கு:

தென் ஆர்க்காடு மாவட்டத்தில், உலக வங்கியின் உதவியுடன், குழாய்க் கிணறுக் கழகம் தோண்டயிருக்கின்ற 1000 குழாய்க்கிணறுகளில், பாசன சமுதாயக் கிணறுகள் தோண்டும் வேலையில் ஒரு பகுதியை இணையம் ஏற்க இருக்கிறது. அக்கிணறுகள் தோண்டிய பின்னர் இணையம் தனது ஒன்றிய நிலையங்களின் மூலமாக அவற்றைப் பராமரிக்கும் பணியையும் ஏற்றுக் கொள்ளும். இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

இணையத்தின் திருச்சியிலுள்ள பணிக் கூடத்தில் தானியத்தைச் சேமித்து வைக்கும் குதிர்கள், டயர் சக்கர மாட்டு வண்டிகள், மற்றும் கருவிகள் தயார் செய்யப்படுகின்றன. வயலில் தழை மிதிக்கும் கருவி ரூ.300-க்கும் மாட்டு வண்டிகள் வண்டிஒன்று ரூ. 6,000 விலையிலும் விற்பனை செய்யப்படுகின்றன. தெளிப்பான் போன்ற இதர கருவிகளும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. பின்னி கம்பெனி தயாரிக்கும் 'தார்பாலின்' விற்க ஏஜெண்டாகவும் இணையம் செயல்படுகிறது.

[வேளாண்மைப் பொறியியல் சேவைக் கூட்டுறவு இணையத்தின் தலைவர் திரு க. குப்புசாமி, எம்.எல்.ஏ. அவர்கள் அளித்த பேட்டியிலிருந்து]

1982-ஆம் ஆண்டு
அரசு விடுமுறை நாட்கள்

ஜனவரி	1	வெள்ளி	புத்தாண்டு நாள்
,,	8	வெள்ளி	மிலாடி நபி
,,	14	வியாழன்	பொங்கல்
,,	15	வெள்ளி	திருவள்ளுவர் நாள்
,,	16	சனி	உழவர் திருநாள்
,,	26	செவ்வாய்	குடியரசு நாள்
மார்ச்	26	வெள்ளி	தெலுங்குப் புத்தாண்டு நாள்
ஏப்ரல்	6	செவ்வாய்	மகாவீர் ஜெயந்தி
,,	9	வெள்ளி	நல்ல வெள்ளி
,,	14	புதன்	தமிழ்ப் புத்தாண்டு நாள்
மே	1	சனி	மே நாள்
ஜூன்	30	புதன்	அரையாண்டுக் கணக்கு முடிப்பு நாள்
ஜூலை	23	வெள்ளி	ரம்ஜான்
ஆகஸ்டு	15	ஞாயிறு	விடுதலை நாள்
,,	22	ஞாயிறு	விநாயகர் சதுர்த்தி
செப்டம்பர்	29	புதன்	பக்ரீத்
அக்டோபர்	2	சனி	அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள்
,,	25	செவ்வாய்	ஆயுத பூஜை
,,	26	புதன்	ஆயுத பூஜை
நவம்பர்	14	ஞாயிறு	தீபாவளி
டிசம்பர்	25	சனிக்கிழமை	கிறிஸ்துமஸ்
,,	29	புதன்	மீலாடி நபி
,,	31	வெள்ளி	ஆண்டு வங்கிக் கணக்கு முடிப்பு நாள்

குறிப்பு : விடுதலைநாள் (15.8.82) விநாயகர் சதுர்த்தி (22.8.82) தீபாவளி (14.11.81) ஆகிய நாட்கள் ஞாயிற்றுக் கிழமையில் வருகின்றன. சுலபமாகத் தெரிந்து கொள்வதற்காக விடுமுறைப் பட்டியலில் அவை குறிப்பிடப்பட்டுள்ளன.

ஜூன் 30, டிசம்பர் 31 ஆகிய நாட்கள் வங்கிக் கணக்கு முடிப்புக்கான விடுமுறை நாட்கள், அவை அரசு அலுவலகங்களுக்குப் பொருந்தா.

வாழ வழி காட்டும் வங்கி:

இதன் வயது 75

அந்தச் சிறுமி தெருவில் விளையாடிக்கொண்டிருந்தாள்.

வேகமாய்வந்த பேருந்து ஒன்று அவள் காலைப் 'பதம்' பார்த்து விட்டுச் செல்கிறது.

உடனே அந்தச் சிறுமியைத் தூக்கிக் கொண்டு ஓடுகிறார்கள் மருத்துவமனைக்கு.

மருத்துவ மனையில், அந்தச் சிறுமிக்குத் தவறாகச் சிகிச்சை அளிக்கப்பட்டு விடுகிறது.

அதன் விளைவு?

பாவம் ! அந்தச் சிறுமி நிரந்தர ஊனமாகிவிடுகிறாள்....

பம்பாயைச் சேர்ந்த அந்தச் சிறுமியின் பெயர் பத்மா. இன்று 18 வயது மங்கையான அவளுக்கு மறுவாழ்வு தந்துள்ளது....தமிழ் நாடு மகளிர் தொண்டு நிறுவனம் (Women's Voluntary Service of Tamilnadu)

உள்ளத்தில் இல்லை ஊனம்:

சென்னை தியாகராயர் தெரு, தணிகாசலம் செட்டித் தெருவில் உள்ள ஒரு இல்லத்தில் தையல் இயந்திரங்கள் இயங்கும் சத்தம் கேட்கிறது. உள்ளே நுழைகிறோம். ஊனமுற்ற பெண்கள் உற்சாகமாகத் துணி தைக்கின்ற காட்சியினைப் பார்க்கிறோம். அவர்களிலே ஒருத்திதான் செல்வி பத்மா. ஒரே காலில் அவர் துணி தைப்பதைப் பார்த்து நாம் வியக்கிறோம்.

இங்கு மொத்தம் 20 ஊனமுற்ற பெண்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கான 20 தையல் இயந்திரங்களை, கனரா வங்கி வழங்கியிருப்பது குறிப்பிட தக்கதாகும்.

மத்திய அரசு திட்டத்தின் மூலம், இங்கு பணிபுரியும் இவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 150 உதவித் தொகை அளிக்கப்படுகிறது. இவ்வாண்டு செப்டம்பர் திங்கள் துவக்கப்பட்ட இந்தத் தையலருக்கான தையல் பிரிவை, மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர்.எம். வீரப்பன் அவர்கள் துவக்கி வைத்தார்.

—பி. வி. கிரி

சொந்தக் காலில் நிற்க:

ஊனமுற்ற பெண்களுக்கு மட்டுமின்றி, உதவி கேட்டுவரும் சமூகத்தில் பின்தங்கியுள்ள - வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள வாழ வழியின்றித் தவிக்கும் ஆதரவற்றவர்களுக்கும், சொந்த காலில் நிற்க விரும்பும் இளைஞர்களுக்கும் கனரா வங்கி கை கொடுத்து உதவி வருகிறது.

பவள விழா ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இந்த வங்கியின் வரலாற்றைக் கொஞ்சம் தெரிந்து கொள்வது நல்லதல்லவா?

75 ஆண்டுகளில்:

1906-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த வங்கி, சமூக நலனில் பங்கேற்று பீடுநடை போட்டு வருகிறது. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் ஒன்றான கனரா வங்கி, தனது 1315-க்கும் மேற்பட்ட கிளைகளுடன் இந்த எழுபத்தைந்து ஆண்டுகளில் மறக்க முடியாத அசாதாரண வளர்ச்சியினைப் பதிவு செய்துள்ளது.

இந்த வங்கி தமிழகத்தில் மட்டும் சுமார் 18 இலட்ச சேமிப்பாளர்களுக்கும், 4 இலட்ச கடனுதவி பெற்றவர்களுக்கும் தொண்டாற்றி 298 கிளைகளைக் கொண்டுள்ளது.

தமிழ்நாட்டில் கனராவங்கி வழங்கியுள்ள கடனுதவித் தொகை 58.2 சதவிகிதம் கிராமப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள கிளைகள் மூலமாக 'முன்னுரிமைத் துறைக்கு' - சிறுதொழில் புரிவோர், விவசாயிகள், சில்லறை வியாபாரிகள், சாலைப்போக்குவரத்து இயக்குநர்கள், வர்த்தகர்கள், அலுவலர்கள், சுயவேலை வாய்ப்புத்தேடும் மருத்துவர்கள், பொறியியல் வல்லுநர்கள், வழக்கறிஞர்கள் ஆகியோருக்கும் மற்றும் ஏற்றுமதி தொழில் சார்ந்த அமைப்புகளுக்கும் கடனாக வழங்கியுள்ளது. கனரா வங்கியின் கடனுதவி பெற்ற ஐவரில் நான்கு பேர் மேற்கூறிய துறையினைச் சார்ந்தவராகவே உள்ளனர்.

மான்புமிகு செய்தி—அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர்.எம்.வீரப்பன் அவர்கள் தையல் தொழில் பிரிவைத் துவக்கி வைக்கிறார்.

தமிழகத்தில் விவசாயத் துறை மட்டும் சுமார் ரூ.68.20 கோடி வரை கடனுதவி பெற்றுள்ளது என்பது பெருநகர் வளர்ச்சியை விடுத்து கிராமப்புற வளர்ச்சியை வலியுறுத்தும் மாறிவரும் தேசிய கொள்கைக்கு இந்த வங்கி முக்கியத்துவமளித்துச் செயலாற்றுகிறது என்பதற்குத்தக்க சான்றாகும்.

மாதம் ஒரு ரூபாய்:

கனரா வங்கி 21,177 அலுவலர்களுக்கும் தொழில் புரிவோருக்கும் சுமார் ரூ. 258.08 இலட்சம் வரை கடனுதவி அளித்துள்ளது. மேலும் DIR என்னும் முக்கிய திட்டத்தின் கீழ் ஏழை எளியோருக்கு ஆண்டுக்கு 4 சதவிகிதம் தனி வட்டி விகிதத்தில் ரூபாய் 1.20 கோடி கடனுதவியளித்துள்ளது.

சமூக நலனில் ஈடுபாடு கொண்டுள்ள இந்த வங்கி, தமிழக அரசின் கரங்களை வலுப்படுத்தும் வகையிலும் முக்கியப் பணியாற்றியுள்ளது. உதாரணமாக, 1977 ஆம் ஆண்டு வெள்ளத்தினால் இம்மாநிலம் பாதிக்கப்பட்ட பொழுது முதலமைச்சரின் நிவாரண நிதிக்காக ரூ.3.50 இலட்சம் நன்கொடையாக வழங்கியது. இது தவிர, இந்த வங்கியின் தனக்கே உரித்தான தனித்துவம் பெற்ற (Rupee-a-month) என்ற திட்டத்தின் கீழ் இதன் ஒவ்வொரு ஊழியரும் மாதம் ஒரு ரூபாய் அளிக்கிறார்கள். இத்தொகை, அனாதை இல்லம் நடத்துதல், வெள்ள-வறட்சி நிவாரண பணி, தகுதியுள்ள ஏழை எளிய மாணவர்கள் கல்விக்காக உதவித் தொகை அளித்தல் போன்ற சமுதாய நலப்பணிகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

''இவ்வாண்டு கனரா வங்கி 'பவள விழா' கொண்டாடுகிறது. இம்முக்கிய நிகழ்ச்சியைக் கொண்டாடும் வகையில், தமிழகமெங்கிலும் உள்ள இதன் கிளைகளில் உடல் ஊனமுற்றோர்களுக்குக் கடனுதவி அளிக்கப்படுகிறது'' என்கிறார் உதவிப் பொது மேலாளர் திரு எம்.என். கினி அவர்கள்.

எங்கள் குடும்பம் பெரிசு:

இந்த வங்கியின் மூலம் பலர் கடன் உதவி பெற்றுள்ளார்கள்—பெற்றும் வருகிறார்கள். அவர்களைச் சந்திப்போமா?

சேப்பாக்கத்தைச் சேர்ந்த திரு கே. மன்னார் நாயுடு (வயது 64) பால் வியாபாரம் செய்பவர். அவருக்குக் கனரா வங்கி கடன் வழங்கியிருக்கிறது. அவர் என்ன சொல்கிறார்?

''நான் 35 வருஷமா பால் வியாபாரம் செய்யறேன். ரெண்டு பிள்ளைங்க எனக்கு உதவியா இருக்காங்க. இப்ப என் கிட்டே 16 மாடுகள் இருக்கு. 1977 லே இந்தப் பாங்க் முதல்லே ஆயிரம் ரூபாய் கடன் கொடுத்தாங்க. பிறகு மூவாயிரம் ரூபா கொடுத்தாங்க. இப்ப கடைசியா பத்தாயிரம் ரூபா கடன் தந்தாங்க. இதை வச்சிக்கிட்டு மேற்கொண்டு மாடுகள் வாங்கினேன். வீடுகளுக்கும், ஓட்டல்களுக்கும் பால் 'சப்ளை' செய்யறேன். மாட்டுத் தீவனம் முதலான செலவுகள் போக, மாதம் எனக்குச் சுமாரா ஆயிரம் ரூபா வருமானம் கிடைக்குது. இருந்தாலும் 12 பேருள்ள குடும்பத்தைக் காப்பாத்தணுங்களே...''

அண்ணா சாலையில் உள்ள எல்லிஸ் சாலையில் பெட்டிக் கடை வைத்திருக்கிறார் திரு சி. சண்முகம் (வயது 41) இவருக்கு இந்த வங்கி ரூ. 2,000 கடன் தந்திருக்கிறது. முதலில் தன் தந்தைக்கு உதவியாக கடையில் இருந்தவர் இவர். தற்போது இவரே கடையைப் பார்த்துக் கொள்கிறார். செலவுகள் எல்லாம் போக ஒரு நாளைக்கு ஐந்து ரூபாய் கிடைக்கிறதாம். இவருடைய அண்ணனும் சம்பாதிப்பதால், எட்டுப் பேர் உள்ள குடும்பத்தைச் சமாளிக்க முடிகிறது என்கிறார் இவர்.

அழகிய பெட்டிகள்:

ஊனமுற்றோரால் ஒன்றும் செய்ய முடியாது என்று நினைத்

உதவிப்பொது மேலாளர்
திரு எம். என். கினி அவர்கள்



திரு கே. மன்னார் நாயுடு

திரு சி. சண்முகம்

திரு பி. கே. நாராயணன்

திருமதி நாகபூஷணம்

துவிட வேண்டாம். திருவல்லிக்கேணியைச் சேர்ந்த திரு பி.கே. நாராயணன் (வயது 48) அழகிய சூட்கேஸ்கள் மற்றும் சிறிய கைப் பெட்டிகள் போன்றவற்றைத் தயாரிக்கும் சிறுதொழிற்கூடம் ஒன்றை நடத்துகிறார். இவருடைய இரு சகோதரிகளும் ஊனமுற்றவர்களாம். முதலில் இவர் இந்தத் தொழிலைத் தொடங்கப் பணமில்லாமல் மிகவும் கஷ்டப் பட்டாராம். பிறகு கனரா வங்கி கைகொடுக்கவே, மிகுந்த உற்சாகத்துடன் தொழிலைத் தொ தொடங்கினார். இந்த வங்கி இவருக்கு 3000 ரூபாய் கடன் வழங்கியது. அதை வைத்துக்கொண்டு அழகிய பல்வேறு வகையான பெட்டிகளைத் தயார் செய்கிறார். இவருக்கு மாதம் ரூ. 500 வருமானம்கிடைக்கிறதாம். ஆறு பேர் உள்ள குடும்பத்தைக் காப்பாற்றும் பொறுப்பில் உள்ளஇவருக்கு, தொழிலைமேலும் மேலும் வளர்க்க எண்ணம் இருக்கிறது.

இயந்திரம் மூலம் மாவரைக்கும் தொழிலைச் செய்பவர் சேப்பாக்கம் திரு கே.என். சங்கரன் இவரும் ஊனமுற்றவரே. இவருக்கு இந்த வங்கி ரூ. 1,500 கடன் தந்து உதவியது. ஓய்வு நேரத்தில் ரேடியோ ரிப்பேரும் செய்கிறாராம். இவருக்கு மாதம் ரூ. 300 வருமானம் கிடைக்கிறதாம். ஏழை எளியவர்களுக்கும் உதவும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் தொண்டை இவர் மனமாரப் பாராட்டுகிறார்.

அச்சுத் தொழிலில்:

இராயப்பேட்டையில் அச்சகம் நடத்தும் திரு அந்தோணி ஜார்ஜ் என்னும் இளைஞர் என்ன சொல்கிறார்.?

''நான் முதலில் ஒரு பிரஸ்சில் வேலை செய்தேன். மாதம் ரூ. 250 சம்பளம் தந்தார்கள். தொழிலில் ஊக்கமாக இருந்து. நல்ல பயிற்சி பெற்றேன். பிறகு சொந்தமாக ஒரு அச்சகம் நடத்தினால் என்ன என்று எண்ணினேன். அதற்குப் பணம் வேண்டுமே? அப்போதுதான் கனரா வங்கி எனக்கு உதவ முன்வந்தது. முதலில் ரூ. 7,000 கடன் கொடுத்தது. பிறகு 15,000 தந்தது. இதனைக் கொண்டு அச்சு சம்பந்தமான இயந்திரங்கள் முதலியன வாங்கினேன். எனக்கு மாதம் ரூ. 1000 வருமானம் கிடைக்கிறது. சுய வேலை வாய்ப்புத் தந்த இந்த வங்கியை நான் மறக்கவே மாட்டேன்''

திரு சி. கைலாசம் என்னும் இளைஞர் மின்சார சம்பந்தமான தொழிலில் கடந்த 6 ஆண்டுகளாக ஈடுபட்டுள்ளார். முதலில் தனியார் கம்பெனி ஒன்றில் வேலை பார்த்த இவர், தனியாகத் தொழில் தொடங்க ஆர்வங் கொண்டார். அதற்கு உதவ முன்வந்தது கனராவங்கி. இவருக்கு இந்த வ்ங்கி மொத்தத்தில் ரூ. 1 இலட்சம் கடன் தந்துள்ளது. இவருக்கு மாதம் ரூ, 2000 வருமானம் வருகிறது. இவர் மூலம் 12 பேர் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர்.

சுய வேலை வாய்ப்பில்:

''பி.ஏ., படிச்சிட்டு வேலை இல்லாம ரொம்பக் கஷ்டப்பட்டேன். பிறகு ஒரு இன்ஜினீயரிங் கம்பெனியிலே வேலை கிடைச்சுது. மாதம் ரூ.150 சம்பளம் சுயவேலை வாய்ப்புத் திட்டத்திலே நமக்கும் வாய்ப்புக் கிடைக்காதான்னு எண்ணினேன். உழைக்கத் துடிப்பு இருந்தது. ஆனா உதவி செய்ய யாரும் முன் வரலே. அப்போதான் இந்த வங்கி எனக்கு ரூ. 5,000 ரூபாய் கடன் தந்து உதவியது. அதைக் கொண்டு 'ஃபெர்பெக்ட் இன்ஜினீயரிங்' என்ற பெயரில் ஒரு தொழிற்கூடம் வைத்துள்ளேன். இப்ப என்னிடம் 10 பேர் வேலை செய்யறாங்க. என்னாலே இவங்களுக்கெல்லாம் வேலைவாய்ப்பு தர முடிஞ்சுதேன்னு பெருமைப் படறேன்' என்கிறார் திரு வி.எஸ் ராமன் அவர்கள்.

திருமதி ராமு அம்மாள்

திரு சி. கைலாசம்

திரு வி. எஸ். ராமன்



திரு எஸ். ஏழுமலை



இதேபோல திரு எஸ் ஏழுமலை அவர்கள் கடந்த 28 ஆண்டுகளாக 'ஆட்டோமொபைல் மெக்கானிக்' வேலை செய்து வருகிறார். ஒரு கம்பெனியில் மாதம் ரூ. 150-க்கு வேலை செய்த இவர் இப்போது சொந்தமாகத் தொழில் தொடங்கியதிலிருந்து மாதம் ரூ. 900 வரை வருமானம் கிடைக்கிறது என்கிறார். இந்த அளவுக்கு நான் உயருவதற்கு இந்த வங்கிதான் காரணம் இது எனக்கு ரூ.15,000 வரை கடனுதவி தந்திருக்கிறது என்கிறார் நன்றிப்பெருக்குடன் இவர்.

இட்டிலிக் கடை வைத்திருக்கும் திருமதி ராமு அம்மாள் (வயது 52) கூறுகிறார்.:

''நான் அமிஞ்சிக்கரையில் இட்லி சுட்டு விக்கறேன். எனக்கு இந்தப் பாங்க் நூறு ரூபாய் கடன் கொடுத்திருக்கு. நிரந்தர வருமானம் இல்லே. என்றாலும் பட்டினி இல்லாம காலத்தைத் தள்ள முடியுது.......''

ஏழையின் சிரிப்பில்:

செனாய் நகரில் பெட்டிக்கடை வைத்திருக்கும் திருமதி பக்கிரி அம்மாளுக்கு இந்த வங்கி மூன்று தடவை முறையே ரூ.100, ரூ. 200, ரூ. 200 என்று வழங்கியுள்ளது.

32 வயதான விதவையான திருமதி துளசி அம்மாள் இந்த வங்கியின் மூலம் ரூ. 1000 கடன் பெற்றுள்ளார். ஒரு மாடு வைத்திருக்கிறார். அதன்மூலம் பால் வியாபாரம் செய்து 2 பிள்ளைகளையும், ஒரு தம்பியையும் காப்பாற்றுகிறார். கணவனை இழந்த நிராதரவான நிலையில், இவருக்கு இந்த வங்கி உதவி செய்ய முன்வந்தது. அதை நன்றியோடு குறிப்பிடும் அவர், இன்னும் மாடுகள் வாங்க உதவி செய்தால் நன்றாக இருக்கும் என்கிறார்.

இதேபோல, செனாய் நகரில் ஆப்பக்கடை வைத்திருக்கும் திருமதி ராஜேஸ்வரி, இட்லிக்கடை வைத்திருக்கும் திருமதி நாகபூஷணம் ஆகியோருக்கும் இந்த வங்கி கடன் தந்து உதவியிருக்கிறது.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணும் வகையில், தக்க சமயத்தில் தகுந்த உதவிகளைச் செய்யும் கனரா வங்கியின் சமுதாய நலப் பணிகளை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

பவளவிழா ஆண்டில் அடியெடுத்து வைக்கும் கனரா வங்கிக்கு நல்வாழ்த்துக்கூறி, நலப்பணியில் மேலும் வீறுநடை போட உறுதுணையாயிருப்போம்!

நம்பிக்கைதான் மருந்து

புதுவையில் சுப்பையாப் பத்தர் என்று ஒருவர் இருந்தார். அவர் பாரதியாரிடம் ரொம்பவும் நம்பிக்கை வைத்திருந்தார். அவருடைய மகனுக்கு பேய் பிடித்திருந்ததாகச் சொல்லிக் கொண்டார்கள். எவ்வளவோ மந்திர தந்திரங்கள் செய்தும் வைத்தியம் செய்தும் ஒன்றுக்கும் நோய் குணமாகவில்லை. பிறகு பாரதியாரிடம் வந்து, "நீங்கள்தான் எப்படியாவது பேயை ஓட்டவேண்டும்", என்று கேட்டுக் கொண்டார்.

"பேய் என்ற ஓர் உருவம் உமது மகன் மேல் ஏறி உட்கார்ந்திருக்கிறது என்று நினைக்கிறீரா"? என்று கேட்டார் பாரதியார்.

ஆமாம் சாமி: பேயில்லா விட்டால் பின்னை என்ன? நீங்கள் ஓட்டினால் போய் விடும், என்றார் பத்தர்.

"உமது விருப்பப்படியே ஓட்டுகிறேன்", என்று கூறிவிட்டு,

வலிமை யற்ற தோளினாய் போ, போ, போ!
மார்பிலே ஒடுங்கினாய் போ, போ, போ!
பொலிவிலா முகத்தினாய் போ, போ, போ!
பொறியிழந்த விழியினாய் போ, போ, போ!

என்று தொடங்கும் நீண்ட பாட்டினை ஆவேசத்தோடு பாடினார். இதைக் கேட்டுக் கொண்டிருந்த பத்தர் மகன் கூக்குரலிட்டு "போகிறேன்" என்று கத்தி கீழே விழுந்தான். பாரதியார் ஓடிச் சென்று அவனைத் தூக்கி மடியில் கிடத்திக் கொண்டு, ''நம்பிக்கை மனிதனுக்கு சிறந்த மருந்து". ஒன்றினாலும் தீராத நோய் என்னிடம் உள்ள நம்பிக்கையினால் தீர்ந்து விட்டதே! என்று வியந்தார்.

தகவல்: கலவை பா. வரதன்
ஆதாரம்: வாழ்க்கை நிகழ்ச்சிகள்

திருநெல்வேலி மாவட்டம் கடையம் சத்திரம் பள்ளிகளுக்கு பாரதியார் பெயர்

மகாகவி பாரதியாரின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்ட நினைவாக திருநெல்வேலி மாவட்டம் கடையத்திலுள்ள அரசு உதவி பெறும் மேல்நிலை, மகளிர் உயர்நிலை, மற்றும் துவக்கப்பள்ளிகளுக்கு பாரதியாரின் பெயரைச் சூட்டி தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது.

இதன்படி இப்பள்ளிகள் கீழ்க்கண்டவாறு அழைக்கப்படும்.

1. சத்திரம் (பாரதியார்) உதவி பெறும் மேல்நிலைப்பள்ளி.
2. சத்திரம் (பாரதியார்) உதவிபெறும் மகளிர் உயர்நிலைப்பள்ளி.
3. சத்திரம் (பாரதியார்) உதவி பெறும் துவக்கப்பள்ளி, கடையம், திருநெல்வேலி மாவட்டம்.

மகாகவி
பாரதியார்
நூற்றாண்டு விழா

ஓர் அறிவிப்பு

மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழாவை 1981 டிசம்பர் 11ம் நாள் முதல் 1982 டிசம்பர் 11-ம் நாள் வரை சிறப்பாகக் கொண்டாட அரசு தீர்மானித்துள்ளது. இந்நூற்றாண்டு விழாவினையொட்டி, பாரதியார் நூல்களை வெளியிடுதல், நூற்றாண்டு மலர் வெளியிடுதல், கண் காட்சி, கலைக்கூடம், நினைவு மண்டபங்கள் அமைத்தல் ஆகியவற்றிற்கு அரசு திட்டமிட்டுள்ளது. பாரதியாரோடு தொடர்புடைய பெருமக்கள் தமக்குத் தெரிந்த, தம்மிடமுள்ள வரலாற்று நிகழ்ச்சிக் குறிப்புகள், புகைப் படங்கள், கடிதங்கள், கட்டுரைகள், எழுத்து வடிவங்கள், பத்திரிகைகள், சிறப்பு மலர்கள் ஆகியவற்றை ஆதாரங்களுடன் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி உதவுமாறு வேண்டுகிறோம். பணி முடிந்ததும் அவை மறுபடியும் உரியவர்களிடம் நன்றியுடன் ஒப்படைக்கப்படும். அரிய சேமிப்புகளாக இருப்பின் உரிய அன்பளிப்பு அளிக்கப்படும்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:-

தனி அலுவலர்,
மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா,
செய்தி, சுற்றுலா (தமிழ்)
பண்பாட்டுத்துறை
தலைமைச் செயலகம்,
சென்னை-600 009.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

கண்ணைக் கவரும் கைத்தறித் துணிகள்
வண்ண வண்ண பட்டுச் சேலைகள் ஆடவர்
மகளிர் அனைவரும் விரும்பும் அருமை
புதுமை இழையும் ஆடைகள் ஆயிரம்
வகைகள்---அழகார்ந்த ரகங்கள்
அனைத்தும் உண்டு!

பதிவு எண். M. 8676 Licence No. TN/MS(C)/PP-23. தமிழரசு